ஏப்ரல் 2014

# ஞானம்

167

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை :
ரூபா 100/=





மணிவிழா நாயகர்

கவிஞர் வதிரி சி. ரவீந்திரன்

www.gnanam.lk
www.gnanam.info

ஞானம்
ஒளி:14
சுடர்:11
167

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

**ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்**
**இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்**
**நிர்வாக ஆசிரியர் : ஞா. பாலச்சந்திரன்**

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)
சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

*⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை யுண்டு.*
*⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**
தீபச்செல்வன் 05
மிகிந்தலை ஏ. பாரிஸ் 17
மொழிவரதன் 29
மட்டுவில் ஞானக்குமாரன் 41
புலோலியூர் வேல்நந்தன் 47
இணுவை சக்திதாசன் 58

⊙ **கட்டுரைகள்**
செல்லக்குட்டி கணேசன் 03
கந்தையா சண்முகலிங்கம் 14
அப்பு 33

⊙ **சிறுகதைகள்**
ஜுனைதா ஷெரிப் 06
கெகிறாவை ஸுலைஹா 25
(மூலம் - ஏனெஸ்ற் ஹெமிங்வே)
ஆவூரான் 35
ஷெல்லிதாசன் 39

⊙ **பத்தி**
கே. விஜயன் 49
அந்தனி ஜீவா 53
பேரா. துரை மனோகரன் 54

⊙ **விமர்சனம்**
ஜெயமோகன் 30
தி. திபாகரன் 43

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**
கே. பொன்னுத்துரை 60

⊙ **வாசகர் பேசுகிறார்** 63

⊙ **பயண இலக்கியக் கட்டுரை**
தி. ஞானசேகரன் 20

# ஆசிரியர் பக்கம்

## “மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகிறது”

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் கடந்த ஐந்து வருடங்களாக தமிழ் மக்கள் மத்தியில் சுற்றி வளைப்புகள், தேடுதல்கள், கைதுகள் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தன.

ஆனால் தற்போது வடமாகாணத்தின் பல பகுதிகளில் மீண்டும் இராணுவத்தினர் பொலிசாரின் சுற்றிவளைப்புகள், சோதனைகள், தேடுதல்கள், கைதுகள் ஆரம்பமாகியுள்ளன. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லப் பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படுவதுடன் விசாரணைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. இரவுபகலாக இந்த நடவடிக்கைகள் தொடர்கின்றன.

மார்ச் 13ஆம் திகதி கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் பொலிசார் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கோபி என்பவர் தப்பிச் சென்று விட்டதாகவும் அவருக்குப் புகலிடம் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பாலேந்திரன் ஜெயக்குமாரி என்பவர் கைது செய்யப்பட்டார். இவரது மகளும் கைது செய்யப்பட்டு பின்னர் சிறுவர்காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டார். ஜெயக்குமாரி, போரில் காணாமல் போனோரை மீட்டுத் தருமாறு கோரி நடத்தப்பட்ட போராட்டங்களில் முன்னணிவகித்தவர்.

இவரின் கைதினைத் தொடர்ந்து மனித உரிமைகள் பாதுகாவலர்களாகப் பணிபுரிந்து வரும் திரு. ருக்கி பெர்ணாண்டோ, அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டனர். காணாமல் போனோர்களது நலன்களைக் கவனிப்பதற்காக இவர்கள் கிளிநொச்சிக்குச் சென்றபோது கைது செய்யப்பட்டார்கள்.

இத்தகைய கைதுகள் நீதி கேட்பவர்களை வாய்மூடச் செய்வதற்கான அச்சுறுத்தல்களாக அர்த்தப்படுத்தக்கூடிய வாய்ப்புண்டு.

“வடக்கில் பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்கும் நிலைமை தோன்றியுள்ளது. அதற்கு ஒரு போதும் இடமளிக்கமுடியாது. எனவே தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பொலிசாருடன் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்” என இராணுவப்பேச்சாளர் கூறுகின்றார்.

திட்டமிட்ட வகையில் சம்பவங்கள் சிருஷ்டிக்கப்பட்டு தமிழ்மக்களை மேலும் இன்னல்களுக்கு ஆளாக்கும் செயற்பாடுகள் இடம் பெறக்கூடாது.

ஜெனிவாவில் இலங்கை விவகாரம் சூடுபிடித்து அரசாங்கத்திற்குப் பலதரப்பட்ட நெருக்கடிகள் தோன்றிய நிலையில், வடபகுதியில் இராணுவத்தின் இருப்பை நியாயப் படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் உபாய நடவடிக்கையே இந்தச் சுற்றிவளைப்பு எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

யுத்தகாலத்தின்போது இராணுவத்தினர் மேற்கொள்ளும் சுற்றிவளைப்புப் போலவே மக்களுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாக இச்சுற்றிவளைப்புகள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. இனிமேலாவது சொந்த இடங்களில் நிம்மதியாக வாழலாம் என்று எண்ணிய மக்களுக்கு இது பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் காரணமாக அச்சமும் பதட்டமும் கலந்த சூழ்நிலை வடபகுதியில் ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் பிச்சனைகளுக்கு தீர்வு காணப்படாத நிலையில் இப்படியான செயற்பாடுகள் நல்லிணக்கத்திற்கு ஏற்றதல்ல. நடந்து முடிந்தவை நடந்து முடிந்தவையாகவே இருக்கட்டும். இனிமேலாவது நிம்மதியோடும் உரிமையோடும் வாழ அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்னும் எதிர்பார்ப்புடனேயே தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அரசாங்கம் இதனைப்புரிந்து செயற்படவேண்டும். அதுதான் நாட்டுக்கும் நல்லது.

அட்டைப்பட அதிதி



# மணிவிழா நாயகர் கவிஞர் வதிரி சி.ரவீந்திரன்

செல்லக்குட்டி கணேசன் - அல்வாய்

1971ஆம் ஆண்டளவில் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தவர் வதிரி சி.ரவீந்திரன். சிறுகதை, கட்டுரை, விமர்சனம், கவிதை, மெல்லிசைப் பாடல் முதலிய பன்முக இலக்கியத் துறைகளில் ஆழத் தடம்பதித்தவர். பல கட்டுரைகளையும், கவிதை நூலையும் வெளியீடு செய்ததனால் பல கௌரவங்களைப் பெற்றவர். வதிரி தமிழ்மன்றம் மூலம் கலை இலக்கிய வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்புச் செய்தவர். அவர் கடந்து வந்த பாதையின் அனுபவத்தால் இன்றைய தலை முறையினருக்கு முன்னோடியாகவிருந்து செயற் படுவதோடு, இலக்கியத்தை ஆத்மார்த்தமாக நேசித்து எழுதிக்கொண்டே இருக்கின்றார்.

யாழ் மாவட்டத்தில் அழகும் சகல வளங்களும் நிரம்பப் பெற்ற நகரமான சாவகச்சேரியில் திரு.திருமதி சின்னத்தம்பி றோசம்மா தம்பதியினர்க்கு ஏகபுதல்வனாக பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் பெற்றார். தந்தையாரின் மரணத்தின் பின் தாயாரின் சகோதரர்களான ஆசிரியர்கள் ஆ.டே.போல், டே.ஆ.நைல்ஸ் ஆகியோர் வசித்த வடமராட்சியின் வதிரி எனும் கிராமத்தில் வந்து அவர்களது அன்பான அரவணைப்பிலும், வழி நடாத்தலிலும் வாழ்ந்ததோடு வதிரி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் இணைந்து நான்காம் தரம்வரை கல்வி பயின்று, இடை நிலைக் கல்வியினை மேற்கொள்வதற்காக யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியில் சேர்ந்துகொண்டார். அங்குதான் இவரது இலக்கியத்தடம் உருவாகியது. அக்கல் லூரியின் அதிபராகவிருந்த திரு.எம்.எஸ். சீனித்தம்பி அவர்களால் வாசிப்பில் நேசிப்பை ஊக்கியமையும் (சுற்றுவாசிப்பு முறை) சிறு வயதில் மாமன்மார்கள் அம்புலிமாமா, கல்கண்டு மற்றும் பத்திரிகைகளை வாசிக்கப்பழக்கியமை காரணமாகவும் வாசிப்பு வளர்ந்தது.

இந்நிலையில் இதே கல்லூரியில் கவிஞர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை ஆசிரியராக இடமாற்றம் பெற்றுவந்தார். அவரது கவிதைகளிலும், கவியரங்குகளிலும் ஆகர்சிக்கப்பட்டு கவிதை எழுத ஆரம்பித்தார். இவரது கவிதை ஆக்கத்திற்கு பின்னூட்ட லாகவிருந்து வழிநடாத்தி வந்தவர் கவிஞர். காரை.செ.சு. ஆவார். இதன் பேறாக 1971ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையிலும், பூம்பொழில் சஞ்சிகையிலும் இவரது கவிதைகள் பிரசுரமாகின. 1972இல் மல்லிகையில் இவரது கவிதைகள் வீச்சுடன் கருத்துச் செறிவோடு ஆழமான கருத்துக்களை முன்வைத்து எழுதப்பட்ட காரணத்தால் இவரது பெயர் பேசப்பட்டது. அதனைக் கருத்தில் கொண்டு, தான் வாழும் கிராமத்தினை மேம்படுத்தி 'வதிரி' சி.ரவீந்திரன் என எழுதத் தொடங்கினார். இவருடன் வதிரியினை மேம்படுத்தி எழுத்தாளரும் விமர்சகருமான இரா.இராஜேஸ்கண்ணன், கலாபூஷணம் கண எதிர்வீரசிங்கம் ஆகியோரும் எழுதி வருவது குறிப்பிடத்தக்கது. வதிரி. சி. ரவீந்திரனின் கவிதைகள் பொறிகள், சுவடுகள், ஈழத்து புதுக்கவிதைத் தொகுப்புகள், "புதுக்கவிதைத் தொகுப்பு (இந்தியா)", ஈழக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு உட்பட, ஈழத்து சகல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தொடர்ச் சியாக வெளிவரத் தொடங்கின.

அத்தோடு தனது இலக்கியப் பணியினை அதே ஆண்டில் இலங்கை வானொலியில் வாலிப வட்டம் நிகழ்ச்சியில் கவியரங்குகளில் பங்கேற்றும் தலைமையேற்றும் நிகழ்த்தினார். சித்திரைப் புத்தாண்டு கவியரங்குகளிலும் 1998,2010 காலங்களில் பங்கேற்றியதோடன்றி வசந்தம் தொலைக்காட்சியில் இலங்கையின் முன்னணிக் கவிஞர்களோடு கவியரங்குகளில் பங்குபற்றி தனது அறிவுசார்ந்த நிலை யினை கணீரென்ற குரலினூடாக மக்களுக்கு வெளிச்சமிட்டார். அத்துடன் தூவானம் நிகழ்ச்சியில் பங்குகொண்டார். ரூபவாஹினி யில் பல சந்திப்புகளிலும் கலந்து இலக்கிய கலைஞர்களுக்கு வேண்டிய அரிய கருத்துக்களை தெரிவித்தார்.

1975இல் இலங்கை பொலிஸ் உத்தி யோகத்தராக நியமனம் பெற்று தனது திறமையினால் பொலிஸ் திணைக்களத்தில் மிகவும் நேசிக்கப்படும் ஒருவராக திகழ்ந்து பல இடங்களில் தனது சேவையினை சிறப்பான முறையில் வழங்கி 1985 வரை சேவையில் இருந்தார். இக்காலத்தில் இவரது இலக்கிய பணி தடங்கல் பெற்று இருந்தமையும் குறிப்பிடவேண்டியது.

தனது குடும்ப நிலையினைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டில் 1985 தொடக்கம் 1990 வரையான காலப்பகுதியில் தொழிலினை மேற்கொண்டிருந்தார். 1990இல் இருந்து இன்றுவரை "சீநோக்" நிறுவனத்தில் விற்பனை முகாமையாளராகவும், ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் பகுதி நேர நிலுவை சேகரிப்பாளராகவும், 2007ம் ஆண்டு தொடக்கம் கொழும்பு நகர் விவாகப் பதிவாளராகவும் கடமையாற்றி வருகின்றார். ஒவ்வொரு திருமண பதிவு நிகழ்வின் போதும் மணமக்களை கவிதை மூலமாக வாழ்த்துவது இவரது தனிச்சிறப்பு. இப்படியான நிகழ்வினுக்கான பத்திரிகை வாயிலினூடாக பலபேரின் பாராட்டுக்களைப் பெற்ற ஒருவராகின்றார்.

இவரது முதல் கவிதை நூலாகிய "மீண்டு வந்த நாட்கள்" 2011இல் கொடகே நிறுவனத்தால் வெளிவந்துள்ளதோடு கொடகே சாஹித்யவிழா 2012இல் சிறந்த முதல் பதிப்பிற்கான விருதினையும், அரச சாஹித்ய விழா 2012இல் சிறந்த கவிதைக்கான சிபார்சும் சான்றிதழும் கிடைத்தன. நாட்டிலேற்பட்ட துன்பகரநிலையினை மனமுருகக் கூடிய வகையில் கவிதைகளாக யாத்து பலபேரின் பாராட்டுக்களைப் பெற்றார். அத்தோடு இவரால் எழுதப்பட்ட அநேக பேட்டிக் கட்டுரைகளும், நூல் விமர்சனக் கட்டுரைகளும் ஆய்வுக் கட்டுரைகளும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. அந்த வகையில் இலக்கியச் சிற்றேடுகளில் இவர் முக்கியத்துவம் பெறுபவராகின்றார்.

வதிரி சி.ரவீந்திரன் நாடகத்திலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். கல்லூரி நாடகங்களில் கலாவிநோதன், எம்.பி. அண்ணாசாமி ஆசிரியரின் நெறியாள்கையில் பல நாடகங்களில் நடித்துப் பாராட்டுப்பெற்றவர். அவ்வப்போது கலைஞர் அமரர் கோவிநேசனின் கவின் நாடகங்கள் பலவற்றில் தனது நடிப்பினை வெளிப்படுத்தி முத்திரை பதித்துள்ளார். நாடக விமர்சனங்களைப் பக்கச்சார்பின்றி பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு எழுதிப் பலரின் பாராட்டுதல்களுக்கு உள்ளானார். இதன் பேறாக இலங்கை கலைக்கழகம், கலாசார திணைக்களம் இவரைக் கௌரவிக்கும் முகமாக 2007ஆம் ஆண்டு தொடக்கம் அரச நாடகசபை உறுப்பினராகத் தெரிவு செய்தது. இப்பதவி வழியாக இலங்கையின் பல மாவட்டங்களில் அரிய பல சிறந்த நாடகங்களைத் தெரிவு செய்து கலைஞர்களை ஊக்குவித்து வளர்த்து வருகின்ற பெருமை இவருக்குண்டு.

இவரது விளையாட்டுத் துறையினை நோக்குகையில் கல்லூரி உதைப்பந்தாட்ட முன்னணியின் தலைவராகவும் வதிரி டயமன்ட் அணியின் கோல் காப்பாளராகவும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் 19 வயது அணி கோல்காப்பு வீரனாகவும், பொலிஸ் அணியின் வீரனாகவும் பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகள் பல ஈட்டிக்கொடுத்த பெருமைக்கு காரணகர்த்தாவாக இருந்துள்ளார்.

உதைப்பந்தாட்டத்துடன் இலக்கியத்தையும் தொடர்புபடுத்திய விமர்சனக் கட்டுரையினை "ஞானம்" சஞ்சிகையில் இரண்டு இதழ்களில் தொடராக எழுதி வடமராட்சி இலக்கிய கலைஞர்களின் நெஞ்சங்களிலெல்லாம் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட கவிஞர் வதிரி.சி. ரவீந்திரன் அவர்களின் இலக்கிய எழுத்துலக சேவையினைக் கௌரவிக்கும் முகமாக இவரது மணிவிழாக்காலத்தில் ஞானம் சஞ்சிகை தனது முன் அட்டையில் அவரது படத்தினைப் பிரசுரம் செய்வதனை மனதாரப் பாராட்டுகிறேன்.

❍ ❍ ❍

# தீபச்செல்வன் கவிதைகள்

## கொழும்பு

எனது காயங்களை ஆற்றக்கூடிய
எனது வார்த்தைகளை புரிந்துகொள்ளக்கூடிய
எனது நியாயங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய
நண்பர் ஒருவரை
இந்த நகரத்தில் சந்திக்கக்கூடுமென எதிர்பார்க்கிறேன்

தலையற்ற பனைகளுக்குள் வடலிகள் முளைக்குமென
பறிக்கப்பட்ட வீடுகளுக்கு நாம் திரும்பவேண்டுமென
அழிக்கப்பட்ட நகரங்கள் உயிர்க்குமென
சிதைக்கப்பட்ட கிராமங்கள் செழிக்குமென
சொல்லக்கூடிய ஒருவரை கடற்கரை இருக்கைகளில் தேடுகிறேன்

காணாமல் போனவர்கள் திரும்ப வேண்டுமெனவும்
பிள்ளைகளை இழந்த தாய்மாரின் கண்ணீர் துடைக்கவேண்டுமெனவும்
கொல்லப்பட்டவர்களின் கனவு மெய்யாகவேண்டுமெனவும்
சொல்லக்கூடிய ஒருவரை
இந்தத் தெருக்களில் சந்திக்க காத்திருக்கிறேன்

யாவற்றின் பிறகும்
எனது தாய்மொழியை மதிக்கும் ஒருவரை
எனது இனத்தை ஏற்கும் ஒருவரை
நான் எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிறேன்
புத்தர் உறங்கும் தேசத்தில்.

## காணாமல் போன அண்ணன்

ஓர் நாள் கும்மிருட்டில் அண்ணனைக்
கொண்டு செல்லும்பொழுது
வாகனத்தின் பேரிரைச்சல் கேட்கையில்
அண்ணன் எங்கே என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

தெருவில் அண்ணனைப் போன்றவர்களைப்
பார்க்கும்போதும்
அடுத்த வீட்டுப் பிள்ளைகளுடன்
விளையாடச் செல்லும்போதும்
அண்ணன் வந்துவிட்டானா? என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

யாராவது திருவிழாவுக்கு செல்லும்போதும்
கொண்டாட்டநாட்கள் வரும்போதும்
அண்ணன் வரமாட்டானா? என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

தூங்கி எழும்பும்போதும்
பள்ளிக்கூடம்செல்லும்போதும்
அண்ணா எப்பொழுது வருவான்? என்பதைத் தவிர
அவள் வேறெதுவும் கேட்கவில்லை

வருடங்கள் பல ஓடிய பின்னரும்
யாரைப் பார்த்தாலும்
எங்காவது அண்ணாவைக் கண்டீர்களா?
என்பதைத் தவிர
அவள் வேறெதையும் கேட்கவில்லை.

# சத்தம் ஒரு முத்தம்

சிறுகதை

ஜுனைதா ஷெரீப்

நீண்ட நாட்களாகவே அப்பா நச்சரித்துக் கொண்டிருந்தார். தனியார் தாபனமொன்றில் கடமையாற்றிய காலத்தில் சிறுகச்சிறுகச் சேமித்து கொழும்பு புறநகரப் பகுதியில் அவரால் கட்டப்பட்ட வீடு 1983இன் வன்செயலால் பூரணமாக நாசமாகியதைத் தொடர்ந்து அப்போது ஐந்து வயதுச் சிறுமியாகவிருந்த என்னையும், அண்ணனையும் அம்மாவையும் சொந்தக்காரர் ஒருவரின் வீட்டில் விட்டுவிட்டு எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டு கனடாவுக்கு வந்த அப்பா அகதியானார். சில வருடங்களில் அவருக்குப் பிரஜாஉரிமை கிடைக்க எங்களையெல்லாம் கனடாவுக்கு எடுத்துக்கொண்டார். அவருக்கு வயது இப்போது எழுபத்தைந்துக்கு மேலாகிவிட்டது.

கடந்த சில வருடங்களாக அப்பாவுக்குத் தொய்வு நோய். குளிர் காலம் தொடங்கிவிட்டால், அதிலும் மழை பனிக்கட்டிகளாகப் பெய்யத் தொடங்கினால் இவர் படும் சிரமம் சொல்லி மாளாது. எவ்வளவுதான் வெப்ப மூட்டியைக் கூட்டி வைத்தாலும் இவர் மூச்சை இழுத்து இழுத்து விடும் பரிதாபக் காட்சியைப் பார்ப்பதற்கே பாவமாக இருக்கும். நாங்கள் வாழும் அல்பேடா மாகாணத்தின் கல்கேரி பகுதியில் வதியும் கைதேர்ந்த மருத்துவ விற்பன்னர்களிடம் அவரைக் காட்டினாலும் பரிபூரண குணம் என்பது முயற்கொம்பாகியது.

நாங்கள் அப்பாவைக் காண்பிக்கும் ஒவ்வொரு டாக்டர் களும் சொல்வதெல்லாம் "குளிர் பிரதேசத்திலே இவர் வசித்தா இவரைச் சுகப் படுத்துறது கஷ்டம். முடிஞ்சா ஒரு சூடான பகுதியிலே இவரை வசிக்க வைங்க"என்பதுதான்.

கனடாவில் வருடம் முழு வதுமே சூடான பகுதிக்கு எங்கே போவது? நானும் என் அவரும் சதா நேரமும் இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போதுதான் அப்பா ஒரு யோசனை கூறினார். அவர் கூறிய அந்த யோசனைக்கு அம்மாவின் சம்மதத்தையும் பெற்றிருப்பார் போல் தெரிந்தது.

ஒரு சனிக்கிழமை இரவு. பக்கத்திலுள்ள கனடாக்காரர்கள் பலரின் வீடுகளிலும் சற்றுச் சப்தமாக சங்கீத ஒலிகள் கேட்டன. மெலடிகள், துள்ளிசைப் பாடலொலிகள், சிம்பொனி இசைகள் என....

எங்களது இல்லத்துக்கு மிக அண்மை யிலான வீடொன்றில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் குடும்பமொன்று வசித்தது. வெள்ளி மற்றும் சனி இரவுகளில் ஒரு குறிப்பிட்ட நேரம்வரை சங்கீத ஒலி போன்றவற்றை சற்று அதிகரித்து வைக்கலாம் என்ற கனடிய சட்டத்துக்கமைய அவர்களின் வீட்டிலும் சமீபத்தில் வெளியாகிய திரைப்படங்களின் தமிழ் பாடல்கள் ஒலித்தன. அந்த வீட்டின் பெண்களும், ஆண்களும் சப்தமிட்டுக் கதைப்பதும் பாடுவதும் கேட்டது. எங்களது முன் வீட்டின் நான்காவது மாடியில் குடியிருந்த பாகிஸ்தான்காரரின்



இல்லத்திலிருந்து புனித குர்ஆனின் வசனங்கள் ஒலித்தன. சங்கீத இசை களைக் கேட்டவாறே பொரித்த இறைச்சியைச் சப்பிக்கொண்டும், மது பான வகையறாக்களை சப்பிக்கொண்டுமிருந்த கனடியர்கள் அடிக்கடி சப்தமிட்டுப் பாடுவதும் ஹாய் ஹுய் என சப்த மிடுவதும் இடைக்கிடை ஒலித்தது.

ஹாலில் கிடந்த சோபாக்களில் அப்பா, அம்மா, எனது அவர், எட்டு வயதான மகன் மஹாஜ், நான் என எல்லோரும் வீற்றிருந்தோம். ஒன்றரை வயதான மகள் ஷம்லா மடியினுள் துறுதுறுத்த கண்களால் என் முகத்தையே பார்த்தவாறிருந்தாள். வெளியே சென்றிருந்த மூத்த மகன் இன்னும் வீடு திரும்பியிருக்கவில்லை.

“அப்பா! எல்லோரையும் வைத்து எதையோ கதைக்கணும்னீங்களே. சொல்லுங்கப்பா. என்ன விசயம்?” நான் யதேச்சையாகக் கேட்டேன்.

“என் நோயைப் பற்றித்தான் கதைக்கணும். நான் இந்தத் தொய்வு நோயாலே கஷ்டப்படாம இருக்கணுமென்றா எப்போதுமே சூடாக இருக்கக்கூடிய ஒரு பகுதியிலே வசிக்கணும். அதனாலே...” அப்பா கூறும்போதே இரண்டொரு தடவைகள் மெதுவாக மூச்சை இழுத்து விட்டுக்கொண்டார்.

“என்னப்பா சொல்ல வாறீங்க?. சொல்லுங்களன்”

“நான் இலங்கைக்குப் போய் குடியிருக்கலாமென்று முடிவு பண்ணிட்டேன்.”

நானும் என் அவரும் ஏக நேரத்தில் “இலங்கைக்கா?” என்றோம்.

“ஏன் மாமா நல்லாத்தானே இருந்தீங்க. இப்போ என்ன இப்படியொரு முடிவு?”அவர் கேட்டார்.

அவரும் இலங்கையைச் சேர்ந்தவர்தான். கம்பனியொன்றில் கணினிப் பிரிவில் உயர் பதவி வகிக்கிறார்.

“ஆமா மருமகன். டாக்டர்மார் சொல்றாங்கதானே. அவங்க சொல்றமாதிரி பார்க்கப்போனா எனக்கு வசிக்கப் பொருத்தமான இடம் நம்ம சொந்த நாடுதான். வருசத்திலே ஆகப் போனா ஒன்று அல்லது ரெண்டு மாதம்தான் கொஞ்சமா குளிரிலே நடுங்கணும். அந்த நாட்களிலே மட்டும்தான் எனக்கு தொய்வு அதிகமாகும். அது தவிர இன்னுமொரு விசயமும் கொஞ்ச நாளா என் மனதைப் போட்டு ஆட்டுது” நிறுத்திய அப்பா நெஞ்சில் கையை வைத்து அழுத்தியவாறு மூச்சை உள் இழுத்து அதே சிரமத்துடன் வெளியேவிட்டார்.

“மற்ற விசயம் என்னப்பா?” நான் கேட்டேன்.

“எனக்கென்னமோ என் அந்திம காலத்திலே பிறந்த நாட்டில் வசிக்க வேண்டுமென ஆசையா இருக்கு. இறுதி மூச்சை பிறந்த நாட்டிலேயே விட்டுட்டுச் செத்துப் போயிடணும்னு விரும்புறேன். கடந்த சுமார் இருபத்தைஞ்சு வருடங்களுக்கு மேலாக நான் இலங்கைக்கே போகல்ல. இனக் கலவரத்திலே நானும் என் குடும்பமும் பட்ட அடியின் வேதனை என் உள்ளத்திலே இருந்து மாற ரொம்ப காலம் புடிச்சுது. நீங்க நியாயத்தைச் சொல்லுங்க மாப்பிள்ளை. நான் விரும்பியா இலங்கையிலே பிறந்தேன். என் பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னாலே விரும்பியா என் பொஞ்சாதியின் வயிற்றிலே அவதரிச்சாங்க? ஒவ்வொரு உயிரும் எங்கெங்கே பிறக்கணும்னு விதி இருக்குதோ அங்கங்கே பிறக்குது. இலங்கையிலே வசிக்கிற சிங்களவனோ, தமிழனோ, இஸ்லாமியனோ அல்லது கிறிஸ்தவனோ அந்த நாட்டிலேதான் பிறக்கணும்னு விரும்பிப் பிறக்கல்ல. ஒரு நாட்டிலே வாழுற அத்தனை பேருக்கும் அந்த நாடு சொந்தம். இல்லையா மருமகன்?” கேட்டவாறே அப்பா நீண்டதொரு பெருமூச்சை ஊதினார்.

“இலங்கை நாட்டை நான் நேசிக்கிறேன். என் தாயை நேசிப்பது போல நான் நேசிக்கிறேன். என் இறுதி மூச்சை அங்கேயே விடுவதற்கு நீங்களெல்லாம் எனக்கு உதவி செய்யணும். சரி. இப்போ எனக்கு நேரமாகுது. ரைமுக்குப் படுத்தால்தான் நித்திரை வரும். அக்கம்பக்கத்தார்ர சத்தத்தாலே ராவைக்கு சிவராத்திரிதானோ என்னவோ?”கூறிவிட்டு அப்பா மெதுவாக எழுந்தார்.

“ஒரு கிழமையிலே ரெண்டு நாட்கள் மட்டும்தானேப்பா இந்தச் சத்தங்கள். மற்ற நாட்களிலெல்லாம் ராவும் பகலும் மரண அமைதிதானே. தேவையற்ற சத்தங்களை எழுப்பி மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடாது என்பதில் இந்தக் கனடா நாட்டின் சட்டங்கள் பாராட்டப்பட வேண்டியதுதான். இல்லையாங்க?” என்றேன் நான் என் அவரைப் பார்த்து.

அப்பாவின் ஆசை குறித்து நாங்கள் பலப்பல தடவைகள் கூடிக்கூடி ஆலோசித்தோம். எங்களுக்குச் சொந்தமானதென்று ஓர் அங்குல காணிதானும் இலங்கையில் இல்லை. சொந்தக்காரர்கள் எங்கெங்கே வசிக்கிறார்கள் என்ற விபரம் எதுவும் எங்களிடம் இல்லை. அம்மாவையும் அழைத்துச்

சென்று பொருத்தமானதோர் இடத்தில் வசிக்கவேண்டுமென அப்பா அடம் பிடிக்கிறார். நான்கைந்து மாதங்களாக அப்பாவை எப்படியோ அடக்கி வைத்திருந்தாலும் அவரின் நச்சரிப்பு என்னவோ வரவர அதிகரித்துக்கொண்டே வந்தது. 'வயதான அவரது ஆசை பூர்த்தியடையாமல் அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால்...?'என்ற எண்ணம் மேலெழுந்து எங்களைத் தாக்கியது.

நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருந்தோம். அப்பாவை முதலில் நான் மட்டும் அழைத்துச் சென்று அவர் விரும்பும் பொருத்தமானதோர் இடத்தில் வீடொன்றை வாடகைக்கு எடுத்த பின் அம்மாவை வர வைப்பது என்பதுதான் அந்த முடிவு. நாங்கள் இலங்கைக்குப் போகவிருக்கிறோம் என்பதை அறிந்த மஹாஜ் தன்னையும் அழைத்துச் செல்லுமாறு அடம் பிடித்தான். தாய்ப்பால் குடிக்கும் ஷம்லாவை அவரிடம் விட்டு விட்டு வர முடியாது. என் மூத்த மகனையும் அம்மாவையும் அவரிடம் விட்டுவிட்டு ஒரு ஏப்ரல் மாத முற்பகுதியில் இலங்கை வந்தோம்.

ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி அப்பாவின் சொந்தக்காரர் ஒருவர் விமான நிலையத்தில் எங்களை வரவேற்றார். கடற்கரைப் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு அழைத்துச் சென்று விட்டார். நாங்கள் சில நாட்கள் அங்கு தங்கி எங்கே சென்று வசிப்பதென திட்டம் தீட்டவேண்டி இருந்தது.

நீண்ட வருடங்களுக்குப் பின் சொந்த நாட்டுக்கு வந்த அப்பா கட்டுநாயகாவிலிருந்து ஹோட்டல் வரும்வரை பாதைகளையும், கட்டிடங்களையும், கடைகளையும், வாகனங் களையும் பார்த்து வியந்தார். "இத்தனை வருடங்களுக்கிடையில் இத்தகையதொரு வளர்ச்சியும் மாற்றமுமா?" என அடிக்கடி கூறினார்.

ஹோட்டல் அமைந்திருந்த பிரதேசம் சிங்களவர்கள் செறிந்து வாழும் ஒரு பகுதியாக இருக்கலாம். முதல் நாள் இரவு அசதி மிகுதியால் ஆழமாக நித்திரை கொண்ட என்னை அடுத்த நாள் விடிவதற்கு முன் மஹாஜ் அசைத்து எழுப்பினான்.

"என்ன மகன்?" கேட்டேன்.

"உங்களுக்குக் கேட்குதா?"

"எது மகன்?"

"நல்லா காது கொடுங்க. அதோ. என்ன சத்தம்மா அது?"

"அடட. அதைச் சொல்றீங்களா? சமீபத் திலே எங்கோ ஒரு பௌத்த கோயில்லே பண சொல்றாங்க"

"பண என்றா?"

"நமக்குத் தேவாரம் போல. புனித புத்தரைப் பற்றியும் அவருடைய போதனைகளைப் பற்றியும் பாடல்களாக சொல்றாங்க."

"ஓ!"

"நானும் அந்தச் சத்தத்திலேதான் கண் முழிச்சேன். நீண்ட நேரமா ஒலித்துக்கொண்டிருக்கு." என்றார் மற்றொரு கட்டிலில் போர்த்தியவாறு படுத்திருந்த அப்பா.

எங்களைத் தேடி பலர் வந்தனர். எல்லாமே கனடாவில் வைத்து நாங்கள் செய்த ஏற்பாடுதான். இலங்கைக்குப் போகிறோம் எனக் கேள்வியுற்று சொந்தக்காரர்களுக்குக் கொடுப்பதற்காக எங்களிடம் தந்து அனுப்பிய பல பொதிகள் கைமாறப்பட்டன.

அன்று பிற்பகல் ஷம்லாவை அப்பாவிடம் விட்டு விட்டு மஹாஜும் நானும் கடைத் தெருவுக்குச் சென்றோம். ஒடுங்கிய பாதைகளில் முச்சக்கர வண்டிகள் குறுக்காலும் மறுக்காலும் ஓடின. மோட்டார் சைக்கிள்களின் உறுமல்கள் காதைப் பிளந்தன. வாகனங்களின் ஹார்ன் ஒலிகள் தொடராக ஒலித்தன. தெருப் புழுதி காற்றுடன் கலந்து பரவி மூக்கை அரித்தது. ஹோட்டல்களில் மிகக் கூடிய சப்தத்தில் வானொலிகள் பாடின. சந்தைச் சதுக்கத்தில் தொண்டை வீங்கக் கத்தி ஈக்கள் மொய்க்கும் மீன்களும் மரக்கறி வகையறாக்களும் விற்கப்பட்டன. திறந்த வடிகான்களின் அருகே மூக்கைப் பொத்திப் பிடிக்க வேண்டிய அளவுக்கு துர்நாற்றம் வீசியது.

"என்னம்மா இது எல்லா இடத்திலேயும் ஒரே சத்தம்? இந்த சத்தத்துக்கு மத்தியிலே எப்படித்தான் இவங்களெல்லாம் வாழுறாங்களோ?"மஹாஜ் கேட்டான்.

நான் எதுவும் பேசவில்லை. வெள்ளி மற்றும் சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் கனடாவில் கடைப்பிடிக்கப்படும் அமைதி கொலுவோச்சும் வாழ்க்கைக்குப் பழகிப் போன மஹாஜ் இப்படியெல்லாம் கேட்பானென நான் தெரிந்து வைத்திருந்தேன். எங்களைப் பார்க்க வந்தவர்களிடம் விசாரித்து நாட்டின் நானா பக்கங்களிலும் வசிக்கும் சொந்தக்காரர்கள் பலரைக் கண்டு பிடித்தோம். அவர்களில் சிலர்

**பகல் பொழுதுகள் எப்படியோ கழிந்தாலும் இரவு வேளைகள் தூங்கா இரவுகளாக ஆகின. விடியுமட்டும் ஒலித்த கர்ணகடூரச் சப்தங்கள் முற்றுமுழுதாக நித்திரையை விரட்டின. கைக்குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், தொழில் செய்யப் போவதற்காக அடுத்த நாள் எப்போது விடியும் எனக் காத்திருக்கும் அன்றன்டாடம்காச்சிகள், சிந்திக்கும் புலமைசார் மக்கள் என பலருக்குமே இத்தகைய ஒலிகள் ஊறு விளைவித்தன.**

வந்து அப்பாவைப் பார்த்து கட்டியணைத்து கண்ணீர் சிந்தினர்.

கொழும்பு புறநகரப் பகுதியொன்றில் வசிக்கும் சொந்தக்காரர் ஒருவரின் வீட்டில் சில நாட்கள் தங்கி நின்று அந்தப் பகுதி அப்பாவுக்குப் பிடிக்குமென்றால் அங்கேயே பொருத்தமானதொரு வீட்டை வாடகைக்கு எடுக்கலாமென்று தீர்மானித்தோம். குடி புகுந்தோம்.

அந்த வீடு அமைந்திருந்த பகுதியில் நிறைய சிங்களவர்கள் வசித்தனர். மதிய நேரத்தில் அங்கு வந்த நாங்கள் பிற்பகலில் ஊரைச் சுற்றிப் பாாத்தோம். எங்களுக்காக இணைந்த குளியலறையுடன் கூடியதான அறையொன்று ஒதுக்கித் தரப்பட்டது. இரண்டு கட்டில்கள். பகலெல்லாம் எறித்த வெய்யில் மங்கிக்கொண்டிருந்தது. இருள் மெதுமெதுவாக கௌவத் தொடங்கியது.

வீட்டுக்குச் சற்றுத் தூரவுள்ளதோர் இடத்திலிருந்து மிகப் பெரிய சப்தத்தில் யாரோ இடைவிடாது ஒலிபெருக்கியூடாகக் கதைப்பது செவிப்பறைகளில் மோதியது. அதைத் தொடர்ந்து சிங்கள மொழியிலான பக்திப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. வீட்டில் ஆளுடன் ஆள் கதைக்கமுடியாத அளவுக்கு சப்தம். சுற்றாடலின் அமைதியைக் குலைக்கும் சப்தம்.

"என்னதான் நடக்கிறது? இப்படியொரு பெரிய சப்தம்!" அப்பா வீட்டுக்காரரின் மனைவியிடம் விசாரித்தார். கூட்டிக் கழித்துப் பார்த்தால் அந்தப் பெண் எனக்கு மதினி முறையானவர்.

"அவங்கட பன்சலயிலே ஏதோ விசேசமாம்."

"அதற்காக இப்படியொரு பெருஞ் சத்தத்தில் சூழ வசிக்கும் மக்களையெல்லாம் தொல்லைப் படுத்தலாமா?" அப்பா மீண்டும் கேட்டார்.

"இதைப் போய் யாரிடம் கேட்கலாம்? சகிச்சுக்கொள்ள வேண்டியதுதான்."

பாடல் கர்ணகடூரமாக ஒலித்துக் கொண்டிருக்கும்போது படபடவென்ற சப்தத் துடன் மோட்டார் சைக்கிளொன்றின் ஸ்டாட் சப்தம் செவித் துவாரங்களைப் பொத்த வைத்தது. அதைத் தொடர்ந்து சைக்கிளின் வேகத்தை உச்சத்துக்கு அதிகரிக்கும் சப்தம். சிறிது இடைவெளியில் இன்னுமொரு மோட்டார் சைக்கிள் ஆரம்பமாகும் பலத்த ஒலி. இரண்டினதும் வேக அதிகரிப்புச் சப்தம். இவை ஒன்றுக்குப் பின் மற்றொன்றாக தொடர்ந்து ஓடிக்கெண்டிருக்கும் சப்தம். அதனிடையே பக்திக் கீத ஒலிச் சப்தம்.

"என்ன மதினி இப்படி காதடைக்கிற சத்தமா இருக்கே. என்ன நடக்கிறது?"நான் கேட்டேன்.

"மரக் கிணற்றுக்குள்ளே மோட்டார் சைக்கிள் ஓடுறாங்க"

"கொஞ்ச நேரத்தாலே நிண்ணுடுமா?"

"ஏன் கேக்கிறீங்க?"

"ஷ்ம்லாவை நித்திரையாக்கணும். அப்பா நேரத்துக்குப் படுக்கணும்."

"எனக்கு நாளைக்கு ஸ்கூல்லே எக்ஸாம் இருக்கு. நானும் ராவைக்கெல்லாம் படிக்கணும்."என்றாள் எனக்குப் பக்கத்தில் நின்றிருந்த மதினியின் மகள்.

"உனக்கும் படிக்க ஏலாது. இந்தப் பக்கத்திலே வசிக்கிற ஒரு பிள்ளைக்கும் படிக்க ஏலாது. இந்தச் சத்தம் கொஞ்ச நாளைக்கு விடியவிடிய கேட்டுக்கொண்டுதானிருக்கும்" என்றாள் கடுகடுப்புடன் மதினி.

"இதிலே பொலிஸ் தலையிட்டு சுற்றாடலுக் குத் தொல்லை கொடுக்கறாங்கன்னு சட்ட



நடவடிக்கை எடுக்க ஏலாதா?”

“இது ஒரு மதம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிதானே. நமக்கேன் வீண் வம்பு என்று அவங்களெல்லாம் சும்மா இருப்பாங்க”

“இல்லை மதினி. போலிஸ் இதிலே தலையிடணும்” என்றேன் நான் விட்டுக் கொடுக்காமல்.

“அவங்க தலையிட்டு இதைத் தடைசெய்தா அரசியல்வாதிகள்ற கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும்.”

அன்று இரவு நித்திரை கொள்வதும், அலறி விழிப்பதும், சப்தமிட்டு அழுவதுமாக ஷம்லா விடியவிடிய தொல்லைப்படுத்தினாள். காலையில் விடிந்ததும் தான் சொட்டும் கண் மூடித் தூங்கவில்லையென அப்பா புறுபுறுத்தார்.

சற்றுத் தூரத்திலிருந்த வீடொன்றிலிருந்து பலத்த சப்தத்தில் வானொலி ஒலித்தது கேட்டது.

பகல் பொழுதுகள் எப்படியோ கழிந்தாலும் இரவு வேளைகள் தூங்கா இரவுகளாக ஆகின. விடியுமட்டும் ஒலித்த கர்ணகடூரச் சப்தங்கள் முற்றுமுழுதாக நித்திரையை விரட்டின. கைக்குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளிகள், பாடசாலை மாணவர்கள், தொழில் செய்யப் போவதற்காக அடுத்த நாள் எப்போது விடியும் எனக் காத்திருக்கும் அன்றன்டாடம்காச்சிகள், சிந்திக்கும் புலமைசார் மக்கள் என பலருக்குமே இத்தகைய ஒலிகள் ஊறு விளைவித்தன.

அப்பா தொடர்ச்சியாக வசிப்பதற்கு அந்த இடம் அறவே பொருத்தமற்றது என்ற தீர்மானத்துக்கு வந்த நாங்கள் அடுத்துக் குடியேறியது பெரும்பான்மையாக தமிழ் மக்கள் வதியும் ஒரு பிரதேசத்திலாகும்.

தொலைபேசி ஊடாக நாங்கள் ஏற்பாடு செய்த அந்த வீடு எனது அம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரரொருவருக்குச் சொந்தமானது. புதிதாகக் கட்டப்படட அந்த வீட்டில் இதுவரை யாரும் குடியிருக்கவில்லை. அவசியமான சில தளபாடங்களையும், சமையலறை உபகரணங்களையும் போட்டுத் தந்த மாமா “நீங்க சொல்றாப் போல சில நாட்களுக்கு இருந்து பாருங்க. இடம் பிடிச்சிருந்தா அக்காவையும் எடுப்பீய்ங்க. ஒரு சின்ன வாடகை தந்தாப் போதும். நீங்க கனடாவுக்குப் போனாலும் நானும் என்ட மனிசியும் அவங்களைப் பார்த்துக்கொள்வோம்”என்றார்.

இரண்டுநாட்கள்அமைதியாகக்கழிந்தன.நானும் மஹாஜும் அங்காடிக்குச் சென்று சமையலுக்குத் தேவையான பொருட்களையெல்லாம் வாங்கி வந்தோம். அவன் எனக்கு உதவி செய்ய நான் சமைத்தேன்.

ஒரு பிற்பகல் சற்றுத் தூரத்திலுள்ள கோவிலொன்றிலிருந்து தவில் சப்தத்துடனான நாதஸ்வர ஒலி காற்றில் தவழ்ந்து வந்தது. தொடர்ந்த அந்தச் சப்தம் மாலை ஆறு மணியளவில் நிறுத்தப்பட்டு பக்தி கீதங்கள் ஒலிக்கப்படத் தொடங்கின. ஒன்று முடிய மற்றொன்றாக ஒலித்துக்கொண்டே இருந்தன. அமைதியாக இருக்க வேண்டிய இரவு ஒலிச் சவுக்கடிகளால் பெரிதும் தாக்கப்படடது.

“கோவில்லே ஏதாச்சும் விசேசமா?”அப்பா மாமாவிடம் கேட்டார்.

“கோவில்லே திருவிழா தொடங்கிட்டு”

“அதுக்காக சுற்றாடலை இப்படி மாசு படுத்தலாமா?”

“அது இங்கே பழக்கமாயிட்டு. திருவிழா முடியும் வரை இப்படித்தான். இந்தக் கோவில் முடிய மற்றக் கோவில்ல தொடங்கும்.”

மாமா கூறியதைக் கேட்டு அப்பா நீண்டதொரு பெருமூச்சை ஊதினார்.

“அப்போ தினசரி எனக்கு சிவராத்திரிதான். இல்லையா மகள்?” அப்பா என்னிடம் கேட்டதற்கான காரணம் எனக்குத் தெரியும். வயதான அவருக்கு நித்திரை கொள்வதற்கு ஆழமான அமைதி வேண்டும். அது இல்லாவிட்டால்?

"உங்களுக்கு மட்டும் இல்ல அப்பா. ஷம்லாவும் ரொம்பப் பிரச்சினைப் படுத்துவாள்" என்றேன் நான்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. விடிய விடிய மந்திர ஒலிகளையும், தனித் தவில் ஆவர்த்தனங்களையும், சில வேளைகளில் தவிலுடன் இணைந்த நாதஸ்வர சப்தத்தையுமாகக் கேட்டவாறு கட்டிலில் புரண்டு கொண்டிருந்த நாங்கள் சற்று நேரத்துக்கு முன்னர்தான் கண்ணயர்ந்து இருந்தாலும் மிகப் பலமாக ஒலித்த சீனவெடிச் சப்தத்தில் திடுக்குற்று எழுந்தோம். அப்போதுதான் கண்ணயர்ந்துகொண்டிருந்த ஷம்லா துடித்துப் பதைத்து எழுந்து அரற்றத் தொடங்கினாள்.

கடந்த இரவு நித்திரை இல்லாததால் பகலெல்லாம் தலைசுற்றுவது போன்றதோர் உணர்வு. வீட்டின் வாசலை அண்டிய பாதையில் இடைக்கிடை வாகனங்கள் ஓடின. மோட்டார் சைக்கிள்கள் பாரிய சப்தத்தை எழுப்பியவாறு சர்ர்..சர்ர்..என விரைந்தன. வாகனங்கள் வராத இடைவெளியினுள் அந்தப் பகுதியைச் சேர்ந்த சிறுவர்கள் பாதையில் கிரிக்கட் விளையாடினார்கள். வாகனங்களைக் கண்டதும் சிதறி ஓடி பின்னர் மீள் வாங்கினர். பாதை ஓரமாக நின்று அவர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்ப்பதற்காக மஹாஜ் என் அனுமதியுடன் சென்றான்.

பக்கத்து வீடுகளில் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் சாம்பாரான ஒலிகள் பலத்துக் கேட்டன.

பொழுது சாய்வதற்கு முன்னால் இருந்தே கோவிலில் மேளக் கச்சேரி பலத்த ஒலியில் ஒலிக்கத் தொடங்கியது. மிகக் குறைந்த சப்தத்தில் ஒலிக்கும்போது தன்னை மறந்து தேனிசையாகக் கேட்கக்கூடிய பிரபல வித்துவான்களின் நாதஸ்வர இசை அதி உச்ச ஒலியில் ஒலிக்கப்படும்போது தகரப் பெட்டிகளில் தட்டுவது போன்று சகிக்கமுடியாக அபஸ்வரமாகக் கேட்டது.

"ராவைக்கு நமக்கு சிவராத்திரிதான். கோவிலுக்கு வருபவர்கள் மட்டும் கேட்கக்கூடியவாறு இவைகளை ஒலிக்கலாமே. இசை கேட்க விரும்புபவர்கள் வலியவே வந்து கேட்பார்கள்தானே. எதற்காக மற்றவர்களும் கேட்டேயாக வேண்டும் என்ற சுயநலத்துடன் ஒலிபெருக்க வேண்டும்? மற்றவர்களின் மீது எதற்காக ஆதிக்கம் செலுத்த வேண்டும்?" அப்பா பொரிந்து தள்ளினார்.

மஹாஜ் வீடு திரும்பினான். அடிக்கடி தனக்குத் தானே சிரித்துக்கொண்டான். சில சமயங்களில் வாய்விட்டும் சிரித்தான்.

"ஏன் சிரிக்கே?" ஷம்லாவுக்கு தாய்ப்பாலைப் பருக்கியவாறே நான் கேட்டேன்.

"அம்மா. உங்களுக்குத் தெரியுமா? இந்தப் பகுதியிலே வசிக்கும் பையன்களின் பெயர்களெல்லாம் டேய், நாயே, பேயா.. என்பதுதான்மா" என்றான் சிரித்தவாறு.

என்னால் சிரிப்பை அடக்க முடியாமல் இருந்தது.

"அவங்க ஆளுக்கு ஆள் அப்படி விளித்துக்கொள்கிறார்களாக்கும்" என்றேன்.

"இல்லம்மா. நான் அவங்க விளையாடு றதைப் பார்த்துக்கொண்டு நின்ற அத்தனை நேரமும் வேறு ஒரு பெயரைத் தானும் அவங்க சொல்லலைம்மா. டேய், பேயா, நாயேன்னுதான் ஆளையாள் அழைக்காங்க."

"நீங்க ஒன்டு செய்ங்க"

"என்னம்மா?"

"எந்தக் காரணம் கொண்டும் நீங்க அவங்களோட சேர்ந்து விளையாடாதீங்க. அப்புறம் கனடாவுக்குப் போன பின்னாடி உங்க நண்பர்களையும் நீங்க அப்படித்தான் அழைப்பீங்க" என்றேன்.

அப்பாவுக்கு அந்தப் பகுதியில் வசிக்க விருப்பமே இல்லை. வேறு ஏதாவது ஓர் அமைதியான இடத்துக்குப் போக வேண்டுமென அடிக்கடி சொல்லத் தொடங்கினார்.

றொறன்டோவில் நாங்கள் தொடர்மாடி யொன்றில் வசிக்கும்போது முன் வீட்டில் ஒரு முஸ்லிம் தம்பதிகள் வசித்தனர். அவர்களுக்கும் எங்களுக்கும் உடன்பிறவாத சகோதர ஒற்றுமை அப்போது நிலவியது. நாங்கள் கல்கேரிக்கு வந்துவிட்டாலும் அவர்கள் இன்னும் அங்கேதான் வசிக்கிறார்கள். அந்தப் பெண்ணின் மூலமாக நாங்கள் இலங்கை வந்திருப்பதைக் கேள்வியுற்ற அவளது அண்ணன் இக்பால் எங்களைப் பார்க்க நிறைய பழங்களுடன் ஒரு பிற்பகல் வந்தார். அவரிடம் எங்கள் பிரச்சினையைக் கூற, தான் வசிக்கும் பகுதியில் பொருத்தமானதோர் இடத்தைப் பார்த்து அறிவிப்பதாகச் சொல்லிச் சென்றார்.

சிறிது நாட்களில் அவர் அறிவித்ததைத் தொடர்ந்து நாங்கள் அவருடைய பகுதிக்கு

வசிக்கச் சென்றோம். அவர் எங்களுக்காக பொருத்தமாதோர் வீட்டை ஏற்பாடு செய்திருந்தார். பெரும்பான்மையான முஸ்லிம் களையும் மிகச் சிறிய தொகையினரான தமிழர்களையும் கொண்டதொரு பகுதி அது. எங்களுக்காக ஏற்பாடு செய்த வீடு முஸ்லிம்களும் தமிழர்களும் இணைந்து வாழும் ஒரு பகுதியில் அமைந்திருந்தது.

நாங்கள் எங்கள் சூட்கேஸ்களுடன் வீட்டுக்குள் சென்ற சிறிது நேரத்தில் அந்த நகரத்திலுள்ள பல பள்ளிவாசல்களிலிருந்தும் தொழுகைக்காக அழைக்கும் ஓசை வானதிர ஏக நேரத்தில் கேட்கத் தொடங்கியது. அப்பாவும் நானும் ஆளையாள் பாாத்துக்கொண்டோம். சிறிது நாட்கள் அங்கேயும் தங்கிப் பார்க்கலாம் என்ற வைராக்கியத்துடன் கட்டில்களுக்கு பெட்சீட்களை மாற்றினோம்.

சில மணித் துளிகளில் மீண்டும் தொழுகைக்கான அழைப்பொலி செவிப்பறை யைத் துளைத்தது. இது மீண்டும் தொடர்ந்தது. அடுத்த நாள் விடிவதற்கு முன்னரான மரண அமைதியைக் கிழித்துக்கொண்டு மிகப் பலத்த சப்தத்தில் ஒலித்த பாங்கு ஒலியினால் துணுக்குற்று ஷம்லா அலறிப் புடைத்து கண் விழித்து பெருத்த ஓசையில் அழத் தொடங்கினாள். ஆஸ்மா நோய் நீங்கியிருந்த அப்பாவின் அமைதியான தூக்கம் கெட்டுவிட்டதனாற் போலும் சடுதியாகக் கண் விழித்தார். நாங்கள் யாரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. இலங்கைக்கு வந்த நாள் தொடக்கம் சூழலுக்கு ஏற்படும் இத்தகைய ஒலித் தொல்லையை தினசரி அனுபவித்துக்கொண்டுதானே வருகிறோம்.

நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கு முன்னால் சிறியதொரு விளையாட்டு மைதானம். பிற்பகலில் நிறைய பையன்கள் அங்கு வந்தார்கள். அநேகர் ஏழு வயதுக்கும் பதினைந்து வயதுக்கும் இடைப்பட்டவர்கள். நானாவித விளையாட்டுகளில் ஈடுபட்டார்கள். ஆளையாள் விளிக்கும்போதெல்லாம் டேய், நாயே, பேயா என்ற வார்த்தைகளையே பயன்படுத்தினார்கள். சில சந்தர்ப்பங்களில் பெண்களின் உறுப்பொன்றைக் கூறி அதனுடைய மகனே என்றும், அதன் நாயே என்றும் எவ்வித கூச்சமுமின்றி விளித்தனர். அவர்களின் உரையாடல்களை வாசலில் நின்றவாறு செவியுற்ற எனக்கு வாந்தி எடுக்க வேண்டும் போலிருந்தது.

அன்று இரவு எட்டு மணி சுமாருக்கு ஏதோ ஒரு பள்ளிவாசலிலிருந்து யாரோ ஒருவர் பலத்த தொனியில் மத போதனை செய்தது ஒலி பெருக்கியூடாக நகரம் முழுதும் கேட்டிருக்க வேண்டும். தலையிலடித்தாற் போல் எங்களுக்கும் கேட்டது.

அதற்கடுத்த நாள் அத்தகைய மத போதனை இரண்டு அல்லது மூன்று பள்ளிவாசல்களிலிருந்து ஏக நேரத்தில் நீண்ட நேரம் கேட்டது.

நாலாவது நாள் இக்பால் எங்களைச் சந்திக்க வந்தார்.

"நான் கொழும்புக்கு வியாபார விசயமா போயிருந்தேன். எப்படி சார் வீடு சௌக்கியமா?" மிக மரியாதையுடனும் பக்குவத்துடனும் அப்பாவிடம் கேட்டார்.

அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும்போது "ஏன் இக்பால். உங்கட ஊர்லதான் நிறையப் பள்ளிவாசல்கள் இருக்குதானே. அந்தப் பள்ளிவாசல்களைச் சேர்ந்த மக்களுக்கு மட்டும் கேட்கக் கூடியதாக ஒலி பெருக்கியை விட்டுட்டு ஒலிப்பெட்டியைப் பாவிக்கலாமே. இப்போ ஒலிப்பது போன்று மிகப் பலத்த சப்தத்தில் ஒலிக்க வைப்பது பக்கத்துப் பக்கத்திலே இரு சமூகங்கள் வாழும் ஓர் இடத்துக்கு அவ்வளவு நல்லதில்லை இல்லையா?".என அப்பா கேட்டார்.

"ஏன் சார் உங்களுக்குக் கஷ்டமா இருக்கா?"

"கஷ்டமோ இல்லையோ. என் மனதுக்குப் பட்டதைச் சொல்றேன். உண்மையிலேயே ஆண்டவன் அமைதியைத்தான் படைத்திருக் கிறான். ஒலி எழுப்புதல் என்பதே சுற்றாடலுக்கு நாம ஏற்படுத்தும் ஒரு வித இடைஞ்சல்தான். காட்டிலே வாழுற மிருகங்களைக் கூட ஒலி எழுப்பி தொல்லைப் படுத்துவது சட்டப்படி குற்றம். அதே குற்றத்தை ஆயிரக்கணக்கான தொல்லைகளுடனும் கஷ்டங்களுடனும் வாழுற மனுசர்களுக்கு ஏற்படுத்தலாமா?." என்றார் அப்பா.

"நாங்க இதுக்குப் பழகிட்டோம் சார்."

"நீங்க பழகலாம். ஆனா மற்றவங்களைப் பற்றியும் யோசிக்கணும். அது சரி. உங்க வீட்டுக்கு முன்னாலே ஒருவர் வந்து நின்று உங்களைக் கேட்காம பெருஞ் சத்தத்தில் மத போதனை செய்தா அவரைப் பத்தி என்ன நினைப்பீங்க?" அப்பா கேட்டார்.

"கொஞ்சம் மென்டல் என்று".

"அப்படீன்னா அந்தப் பெரிய சப்தத் திலே ஒலிபெருக்கியிலே மத போதனை செய்றாங்களே. எல்லோரையும் கேட்டா செய்றாங்க?. அப்படிக் கேட்காமச் செய்தா போதனை செய்ற அவரைப் பத்தி நீங்க என்ன நினைப்பீங்க?" அப்பாவின் கேள்விக்கு இக்பால் அங்கிள் பதில் சொல்லவில்லை.

நாங்கள் அந்த இடத்திலிருந்தும் நீங்குவதாக முடிவுசெய்தோம்.

என்னுடைய அவர் கூறியதாகச் சொல்லி ஒருவர் கைத்தொலைபேசியில் என்னுடன் தொடர்புகொண்டார். அவருடன் கதைத்து அவரால் ஏற்பாடு செய்த ஓர் இடத்துக்கு அடுத்ததாக வசிப்பதற்காகச் சென்றோம்.

அந்தப் பகுதியில் நிறைய கிறிஸ்தவர்கள் வசித்தனர். பல கிறிஸ்தவ ஆலயங்கள் இருந்தன. உள்ளூராட்சித் தேர்தலொன்று நடைபெறப் போவதாக சுவர்களில் நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டிருந்தன.

நாங்கள் சென்ற முதல் நாள் பின்னேரமே எங்களைத் தொடர்ந்து துரத்தும் கர்ணகடூர ஒலி கேட்டது.

இல்லத்துக்கு சமீபமாக தேர்தல் தொடர்பான பிரச்சாரக் கூட்டமொன்று நடைபெற்றது. அதில் தலைமையுரை ஆற்றியவர் முதற்கொண்டு ஏனைய அனைத்துப் பேச்சாளர்களுமே போருக்கு அழைப்பதைப் போன்றதோர் உணர்ச்சிப் பிரவாகத்தில் அடித் தொண்டையினால் ஒலியெருக்கியூடாக அலறத் தொடங்கினர். கூட்டம் நள்ளிரவு வரை நீடித்தது. இருப்புக் கொள்ள முடியாமல் வயதான எனது அப்பா துடித்தார். தலையிலடித்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது எனக்கு.

ஏன் இத்தகையதோர் உணர்ச்சி வெறி? மக்களை எதற்காக இவர்கள் தயார்படுத்துகிறார்கள்? எதற்காக சுற்றாடலுக்கு இத்தகையதொரு தொல்லையைக் கொடுக் கிறார்கள்? விடை காணமுடியாத கேள்விகள் என்னை அலைக்கழித்தன. கனடாவில் ஒரு தேர்தலென்றால் இணையங்களின் மூலம் குறிப்பிட்டதொரு மண்டபத்துக்கு ஆட்களை அழைத்து தங்களது கொள்கைகளைச் சொல்வார்கள். யாரையுமே வைய மாட்டார்கள். ஆனால் இவர்கள்? தனிப்பட்ட ரீதியாக ஆளையாள் வார்த்தைகளால், கடும் சொற்களால் தாக்குகிறார்கள்.

அன்றிரவும் நித்திரையில்லாமல் நாங்கள் அல்லாடினோம்.

அடுத்தநாள் அதிகாலையிலேயே ஏதோ வொரு தேவாலயத்திலிருந்து கிறிஸ்தவ கீதங்கள் கர்ணகடூர ஒலியில் ஒலிக்கத் தொடங்கி நீண்ட நேரத்துக்கு நீடித்தது. பக்கத்து வீடுகளில் வானொலி, தொலைக்காட்சி சப்தங்கள் இடைவிடாது ஒலித்தன.

நாங்கள் இலங்கைக்கு வந்து மூன்று மாதங்கள் முடிவடைய இன்னும் சில தினங்கள் மட்டுமே இருந்தன.

"மகள். இப்போ என்ன செய்வதாக உத்தேசம்?"ஒருநாள் காலையில் அப்பா கேட்டார்.

"நீங்கதான் சொல்லணும்"

"எல்லோரும் கனடாவுக்குத் திரும்பப் போயிடுவோம்"

"ஏன் இப்படியொரு முடிவு?" அவரின் முகத்தை உற்றுப் பார்த்துக் கேட்டேன்.

"இது சரி வராது. நான் எதிர்பார்த்த மாதிரி இங்கே அமைதியாக வாழ முடியாது. அங்கே குளிரில் நடுங்கினாலும் அமைதி கிடைக்கிறது. சுற்றாடல் தூய்மையாக உள்ளது. அது நமக்குப் பழகிப் போய் விட்டது. நீ போகும்போது என்னையும் கனடாவுக்கே அழைத்துப் போயிடு" அழாக்குறையாக அப்பா கூறினார்.

அவர் பிடித்தால் அணுங்குப் பிடிதான்.

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குப் போவதற்காக நாங்கள் காரொன்றில் பயணம் செய்துகொண்டிருந்தோம். இடையில் பெட்றோல் நிரப்புவதற்காக கார் நின்றபோது அன்றைய தினச்சுடர் பத்திரிகையொன்றை வாங்கிக்கொண்டேன்.

சில மணித்தியாலங்களில் விமான ஆசனத்தில் சௌகரியமாக உட்கார்ந்துகொண்டு கையிலிருந்த பத்திரிகையைப் பிரித்தேன்.

யாரோவொரு பாராளுமன்ற உறுப்பினர் மக்களின் வரிப்பணமான அரசநிதியிலிருந்தும் அபிவிருத்தி வேலைகளுக்காக அவருக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து வாங்கப்பட்ட ஒலிபெருக்கி யொன்றை வணக்கத்தல மொன்றின் நம்பிக்கையாளரொருவருக்குக் கையளிக்கும் புகைப்பட மொன்று முன் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

❍ ❍ ❍

# றொபேர்ட் ஹோம்ஸ் பார்வையில் யாழ்ப்பாணத்தின் சாதி முறை

**கந்தையா சண்முகலிங்கம்**

யாழ்ப்பாணம் 1980 (Jaffna 1980) என்ற நூல் கலாநிதி டபிள்யூ. றொபேர்ட் ஹோம்ஸ் என்ற அமெரிக்கரால் எழுதப்பட்டது. இவர் 1947 முதல் 1960 வரை உள்ள பதின்மூன்று வருட காலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூ ரியில் வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1960இல் அவர் அமெரிக்கா திரும்பி அங்கு ஆசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் இந்தியாவில் புல்பிரைட் பவுண்டேசன் (Ful bright Foundation) என்ற கல்வி நிறுவனத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். 1978 - 1980 காலத்தில் யாழ்ப்பாணம் மீண்டும் வந்த ஹோம்ஸ் வட்டுக்கோட்டை வளாகத்தில் தம் மனைவியுடன் தங்கியிருந்து ஆய்வை மேற்கொண்டு இந்நூலை எழுதினார்.

பத்து அதிகாரங்களையும் 550 பக்கங் களையும் கொண்ட இந்நூல் யாழ்ப்பாணம் பற்றிய சமூகவியல் நூல் என்னும் சிறப்புடைய முதல் நூல் ஆகும். 'ஹோம்ஸ் ஓர் யாழ்ப்பாணத்துத் தமிழர்' என்று ஒரு பிரபலஸ்தர் அந்நாளில் அவருக்குப் புகழாரம் சூட்டினாராம். அந்தளவிற்கு யாழ்ப்பாணத் தமிழர்களைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தவர் ஹோம்ஸ். யாழ்ப்பாண வாழ்க்கை அனுபவம் என்பதற்கு மேலாக அவர் கள ஆய்வுகளை மேற்கொண்டு தகவல்களைத் திரட்டினார். ஆய்வாளர்களின் நூல்களையும் கட்டுரைகளையும் கற்றுத் தம் அறிவை ஆழமாக்கிக் கொண்டார். வாழ்க்கை அனுபவம், கள ஆய்வு, இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற மூன்றும் அவரின் ஆய் வுக்குத் துணையாக அமைந்தன. இந்நூல் முழுவதையும் பற்றிய அறிமுகம் ஒன்றைச் செய்வதை விடுத்து நூலின் ஐந்தாவது அத்தியாயமான Caste (சாதி) என்ற விடயம் பற்றி ஹோம்ஸ் கூறியிருப்பவற்றை இங்கு எடுத்துக் கூறவுள்ளேன். பேர்ஜர், பவ்வன், கென்னத் டேவிட், பாங்ஸ் போன்ற



மானிடவியலாளர்களும் சமூகவியலாளர்களும் யாழ்ப்பாணத்தின் சாதிமுறை பற்றி ஆய்வுகளை வெளியிட் டுள்ளார்கள். ஆனால் இவ்வாய்வுகள் பெரும்பான்மை அருவமான கோட்பாட்டுப் பிரச்சினைகளைப் பற்றியன. ஹோம்ஸ் அவர்களின் நூலில் சாதி பற்றிய எளிமையான விளக்கம் உள்ளது. கோட்பாடு சார்ந்த விடயங்களையும் அவர் எளிமைப்படுத்திக் கூறுகிறார். இன்னொரு முக்கியமான விடயம் இந்த நூலின் ஐந்தாவது அத்தியாயம் 42 பக்கங்கள் கொண்டது. இந்த அத்தியாயம்

ஏறக்குறைய 40 வரையான உபதலைப்புக்களில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பும் பற்றி சராசரி ஒரு பக்கத்திற்குள் சுருக்கமாகச் சொல்லி விடுகிறார். அத்தியாயம் முழுவதையும் படித்து முடிக்கும் பொழுது 'சாதி' பற்றிய முழுமையான பார்வை ஒன்றைப் பெற முடிகிறது. சாதி முறையின் தீமைகளை எடுத்துச் சொல்லும் மனிதாயவாதியாகவும் சீர்திருத்தவாதியாகவும் இருப்பதோடு சமூகவியலாளர் ஒருவருக்குரிய ஆய்வு நேர்மையும், நடுவு நிலையையும் ஹோம்ஸ் கட்டுரையில் வெளிப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் சாதி முறைபற்றி ஹோம்ஸ் கூறியிருக்கும் கருத்துக்களில் மிக முக்கியமானவற்றை இக்கட்டுரையில் சுருக்கமாகக் கூறவுள்ளேன்.

**நால்வருண மாதிரி**

யாழ்ப்பாணத்திற்கு வெளியே உள்ளவர்களால் இன்றுவரை புரிந்து கொள்ளப்படாத ஓர் உண்மையை ஹோம்ஸ் தொடக்கத்திலேயே மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். இந்துக்களின் நால் வருணக் கோட்பாடு யாழ்ப்பாணச் சாதி முறைக்குப் பிரயோகிக் கப்படக் கூடியதல்ல என்று ஹோம்ஸ் கூறுகிறார்.

'யாழ்ப்பாணத்தில் 600 - 800 பிராமணக் குடும்பங்கள் மட்டும் உள்ளன. ஏனைய (மூன்று) வருணங்கள் பற்றி இங்கு யாருமே குறிப்பிட்டுப் பேசுவதில்லை (பக் 219) என்று ஹோம்ஸ் உண்மை நிலையைத் துலக்குகிறார். பிராமணரை முதன்மையாகக் கொண்ட மாதிரி Model யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. அங்கு பிராமணர் எதிர்ப்பு இயக்கம் என்ற பேச்சுக்கே ஏன் இடமில்லாமல் போயிற்று? தமிழகத்தில் தோன்றிய பகுத்தறிவு வாதத் திற்கும் நாத்திக வாதத்திற்கும் ஏன் இங்கே ஆதரவாளர்கள் இருக்கவில்லை? என்ற கேள்விகளுக்கான சரியான விடையை நாம் பெற்றுக் கொள்வதற்கு நால்வருணமாதிரி யாழ்ப்பாணத்துக்குப் பொருந்தாது என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**சாதி என்ற சொல்**

'சாதி' பற்றிய உணர்வு யாழ்ப்பாணத்தில் மிகுதியாக உள்ளது. ஆனால் 'சாதி' என்ற சொல்லை வாயால் உச்சரிப்பதற்கே யாழ்ப் பாணத்தவர்கள் தயங்குகிறார்கள். சாதி என்ற சொல்லை அந்நியர்கள் தயக்கமின்றிச் சொல்கிறார்கள். யாழ்ப்பாணத்தவரோ குரலைச் சிறிது தாழ்த்தி அந்த விடயம் பற்றிப் பேசுவதோடு, இச்சொல்லையே தவிர்த்து விடுகிறார்கள். 'It is not exactly a nice or polite word' என்கிறார் ஹோம்ஸ். ஆங்கிலம் படித்த தமிழர்கள் சாதி என்ற சொல்லுக்குப் பதில் 'சமூகம்' (கொம்யூனிட்டி - Community) என்ற சொல்லையே உபயோகிக்கிறார்கள். 'குலம்' என்ற தமிழ்ச் சொல்லும் உபயோகிக்கப்படுகிறது என்றும் ஹோம்ஸ் கூறுகிறார். சாதிகளின் பெயர்கள் யாவும் சாதிக்குரிய தொழில்களோடு சம்பந்தமுடையன. இன்று (1980இல்) யாழ்ப்பாணத்தில் சாதிக்கும் தொழிலுக்கும் இடையிலான தொடர்பு அறுந்து விட்டது. பெரும்பாலானோர் தம் சாதிக்குரியதல்லாத தொழில்களையே செய்கிறார்கள். சில சாதிகளுக்குரிய தொழில்கள் முற்றாக அழிந்து விட்டன. உதாரணம் பல்லக்கு காவுதல் என்ற தொழில் இன்று இல்லை. நெசவு பலரும் செய்யும் தொழிலாகி விட்டது. தச்சு வேலை, கொல்ல வேலை, மேசன் வேலை ஆகிய தொழில்களைச் செய்து வந்தவர்கள் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாக வெளிநாடுகளிற் போய்விடும் நிலையில் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறப்படும் பிரிவினரில் பலர் இத்தொழில்களைச் செய்வோராக மாறு கின்றனர். (பக் 221). அமெரிக்க மிசனரிகள் 1840இல் மானிப்பாயில் மிசன் அச்சகம் ஒன்றைத் தாபித்தார்கள். அந்த அச்சகத்தில் உயர் சாதிக் கிறிஸ்தவ இளைஞர்கள் தயக்கமின்றி வேலையில் இணைந்து கொண்டனர் என்று டாக்டர் டானியல் பூர் குறிப்பிட்டார். அச்சு வேலைக்குரிய சாதி அன்று இருக்கவில்லை. அந்த வேலைக்குரிய கருவிகளைக் கண்ணுற்ற இளைஞர்கள் தச்சு வேலையை தமக்குத் தந்து தம்மை அவமதிப்பதாகவே கருதியிருப்பர். ஆனால் அச்சகத் தொழில் (Printing Business) அதற்குப் பயன்பட்ட யந்திரம் என்பன அவர்களுக்கு அந்த எண்ணத்தை உண்டாக்கவில்லை. வேலையில் விரும்பி இணைந்தனர் என்று டானியல் பூர் கூறிய கதையை மேற்கோள் காட்டி 'யந்திரமயமாதல் சாதியை விலக்கி விடுகிறது' என்று கூறுகிறார்.

**நீடித்து நிலைக்கும் சாதி**

யாழ்ப்பாணம் கல்வியில் முன்னேறிய போதும் சாதி உணர்வில் இருந்து விடுபட முடியாமல் இருப்பதையும் ஹோம்ஸ் குறிப்பிடுகிறார்.

'அரசியல் மட்டத்தில் மிகப் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியிலும் தொடர்ச்சியாகப் பல விடயங்கள் புகுத்தப்பட்டன. ஆயினும் கிராம மட்டத்தில் சமூக முறை சிறிதளவே இந்த நீண்டகால எல்லையில் மாறியது.' என்று பாங்ஸ் நூலில் இருந்து மேற்கோள் காட்டும் ஹோம்ஸ் இது குறிப்பிடத்தக்க முக்கியமான இயல்பு என்று கூறுகிறார்.

ஹோம்ஸ் பல துணுக்குகள், கதைகள் மூலம் விடயங்களைத் தெளிவு படுத்துகிறார். உயர்சாதி அல்லாத ஒரு குடும்பம் புதிதாக வீடு ஒன்றைக் கட்டி வீடு குடிபுகுதல் நடத்தியது. அக்குடும்பத்தவர் யாவரும் படித்தவர்கள். 'கௌரவமான பதவிகளில்' இருப்பவர்கள். வீட்டுக்காரர் யாழ்ப்பாணத்தில் ஒரு அலுவலகத்தில் வேலை செய்பவர். அவர் தன் அலுவலக நண்பர்களை வீடு குடிபுகுதல் விருந்தில் பங்கு கொள்வதை விரும்பினார். ஆனால் ஒரு சிக்கல். தனது வேளாள நண்பர்களைத் தனது புதிய வீட்டிற்கு விருந்துண்ண அழைப்பது முறையன்று. அச்சிக்கலுக்கு இலகுவான தீர்வு ஒன்றை அவர்கள் கண்டனர். அலுவலகம் ஒரு பொது இடம். அப்பொதுவிடத்தில் 'தீட்டு' புகும் சாத்தியம் இல்லை. அவர்கள் அலுவலகத்திலேயே விருந்தை வைத்தனர். யாவரும் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டனர். இச்சம்பவம் 1979 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

ஹோம்ஸ் இன்னொரு கதையையும் சொல்கிறார். இளமையில் தீவிரவாதியாக இருந்த உயர்சாதி வேளாளர் ஒருவர், இப்போது ஓய்வு பெற்று வீட்டோடு இருக்கிறார். இளமையில் அவர் சம போசன இயக்கத்தை நடத்தியவர். அவர் வீட்டுக்கு வரும் தாழ்த்தப்பட்டவர்கள் இன்றும் வராந்தாவின் ஓரத்தில் நின்றபடி அவருடன் பேசுவார்கள். அவர் சொல்லுவார் 'ஏறி உள்ளே வாரும் வந்து இருந்தால்தான் உம்முடன் பேசுவேன்' அவரிடம் வரும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இது மிகுந்த அசௌகரியமானதாக இருக்கும். அவர் அவர்களுக்கு பீங்கான் 'கப்'இல் தேநீர் குடிப்பதற்கு கொடுப்பார். தனி ஒருவராக நின்று சாதி வழமையை எதிர்த்துக் கொண்டு அவர் இருக்கிறார் என்று ஹோம்ஸ் தன் கதையை முடிக்கிறார்.

**சாதி – வரைவிலக்கணம்**

பேராசிரியர் பாங்ஸ் நூலினை மேற்கோள்காட்டி ஹோம்ஸ் சாதி பற்றிய வரைவிலக்கணம் ஒன்றைத் தருகிறார்.

1.சாதி அகமணம் என்ற விதியைக் கடைப்பிடிக்கும் குழு. ஒரு சாதியினர் பிற சாதிகளுக்குள் திருமணம் செய்வதில்லை.

2.சாதி என்ற கருத்துடன் 'தீட்டு' (Pollution) பற்றிய எண்ணம் சம்மந்தம் உடையது.

3.தீட்டு என்ற எண்ணம் இருப்பினும் சாதிகள் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவை, பொருளாதாரம், அரசியல், சமயம் என்ற விடயங்களில் பரஸ்பர தங்கியிருத்தல் உள்ளது. (ஆகவே தீட்டு ஒரு முழுமையுடைய எண்ணமாகச் செயல் முறையில் இல்லை)

4.சாதிகள் ஒரு படித்தர ஒழுங்கில் உள்ளன. மரபு வழிப்பட்ட பல நடைமுறைகள் சாதியை குறியீட்டு வடிவில் வெளிப்படுத்துகின்றன.

**குறிச்சிகளும் உட்சாதிகளும்**

யாழ்ப்பாணத்தில் எல்லாச் சாதிகள் மத்தியிலும் உட்சாதிகள் உள்ளன என்று ஹோம்ஸ் கூறுகிறார்.

'எங்களுடைய ஆக்கள்' என்ற பேச்சு வழக்குத் தொடர் உட்சாதியைக் குறிப்பதற்குப் பயன்படுகிறது. ஏனெனில் உட்சாதிகளுக்குத் தனித்தனிப் பெயர்கள் இல்லை. உட்சாதிகள் குறிப்பிட்ட குறிச்சிகளுள் (Strips) வதிவிடத்தைக் கொண்டிருக்கும். ஒரு கிராமத்தின் ஒரு குறிச்சியில் வாழும் வேளாளர் சாதியினர், அக்கிராமத்தின் இன்னொரு குறிச்சியில் வாழும் வேளாளருடன் திருமண உறவு வைத்துக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் வீடுகளில் உணவு உட்கொள்ள மாட்டார்கள். சமூகத்தளத்திலும் பொருளாதார ரீதியான சிறு கொடுக்கல் வாங்கல்களைத் தவிர வேறுவகை உறவுகளும் மிகக் குறைவு என்றும் ஹோம்ஸ் குறிப்பிடுகிறார். கிராமம் முழுமையையும் இணைக்கும் ஐக்கியம் இல்லை. குறிச்சிக்குள் தான் ஐக்கியம் உண்டு. குறிச்சிகளிடையே

அந்தஸ்துப் போட்டியுண்டு. சாதி வழமைகள் இயல்பான ஒன்றாகப் போய்விட்டன. உயர் சாதியினரும் தாழ்த்தப்பட்டவர்களும் அவ்விதிகளின்படி நடந்து கொள்கின்றனர். ‘எப்போதாவது சாதி வழமை மீறப்படும் போது இரு தரப்பாருமே சங்கடத்தை உணர்கின்றனர். (கிராமத்துக்குள்) சண்டைகள் மிக மிக அரிதாகவே தோன்றும். (Fights are exceedingly rare), என்றும் ஹோம்ஸ் எழுதுகின்றார். ஹோம்ஸ் சாதியின் காவலன் ஒருவரின் மனப்பான்மையில் இப்படி எழுதுகிறாரோ என்ற முறையில் சிலர் ஐயம் தெரிவிக்கலாம். வெளிப்படையான வன்முறையை விட நவீன சமூகவியலாளர்கள் உள்ளமைந்து இயக்குவதாய் இருக்கும் அமைப்பியல் வன்முறையை முக்கியப்படுத்துவர். வெளிப்படையான சாதி அடக்குமுறை நிகழ்வுகளையும் அவர் பட்டியல் இட்டுள்ளார்.

**கொள்ளலும் கொடுத்தலும்**

மரபு வழிப்பட்ட சாதி முறையை ஆராய்ந்த மானிடவியலாளர்கள் சாதியின் அடிப்படையிலான பரிவர்த்தனை முறை (exchange system) உள்ளூர் மட்டத்தில் செயற்படுவதை எடுத்துக் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணத்தின் சாதி முறை பற்றி ஆராய்ந்த கென்னத் டேவிட் என்ற மானிடவியலாளர் சாதிகளிடையான கொள்ளல் - கொடுத்தல் உறவு யாழ்ப்பாணக் கிராமங்களினதும், ஆங்காங்கே உள்ள சிறு நகரங்களினதும் குடியிருப்பு முறையை தீர்மானித்திருப்பதை விளக்கும் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இக்கட்டுரையின் தலைப்பு Spatial Organization and Normative Schemes in Jaffna. என்பதாகும். இக்கட்டுரை Modern Ceylon Studies, Vol 4, Jan - July *1973* ஆய்விதழில் வெளியாகியது. வர்த்தகம் செய்யும் பொழுது வியாபாரியும், பொருளைக் கொள்வனவு செய்பவரும் பேரம் பேசுதலில் (Bargaining) ஈடுபடுவர். அத்தோடு கொள்ளலும் கொடுத்தலும் ‘சந்தை’ என்ற பொது இடத்தில் (Neutral Territory) நடைபெறுகிறது. இப்பின்னணியில் வர்த்தகமும் அதனோடு இணைந்த பேரம் பேசுதலும் படித்தர ஒழுங்கிலான சாதி முறைக்கு எதிரான ஒரு கருத்து என்று கென்னத் டேவிட் கூறுகிறார். டேவிட்

## எழும்பாக் கூடுகள்...!

மனிதனின் எச்சங்கள்
எம் மண்ணில் புதைந்து
இதிகாசம் கூறும்
வெறுப்பு சொற்கள்

அகழ்வு நடவடிக்கையில்
அனுதாபம் பெருக்கெடுக்கக்கூடும்
மனிதம் குறுக்கிட்டு
மனம் வருந்தக்கூடும்...
மனநிறைவுடன்
பிணம் புதைக்கும் போது
மனிதம் எங்கே போனது ?

சரி விடுங்கள்!!
சவம் புதைக்கும் போது
மனிதம் இறந்து
மனம்' தனித்திருக்கலாம்...
மூக்கு ஓட்டை வழியே
மூச்சுக்காற்று நுழைந்து
மணம் வீசி
முனங்கவில்லையா ?

கண் மணிக்குள்
காட்சி நுழையும் போது
கண்ணீர் ததும்பவில்லையா ?
கரம் என்ன
மறுக்கவில்லையா ?
மரத்துப்போனதா ?

எந்த மன்னராட்சியில்
மண்ணாகிப்போன மனிதர்கள் என்று
ஆராய்ச்சி நடத்தலாம்
அழிந்த உயிர்கள்
எழுந்து நடக்குமா ?
விடைகள் முழுவதும்
விக்கல் அடிக்கும்
உண்மைகள் அனைத்தும்
ஊமையாகக்கூடும்

உள்ளுணர்வுகள் மட்டும்
உரியவரை வதைக்கும்
மனிதனாக இருந்தால் மட்டும்
மனித உணர்வுகள் பேசும்.

மிகிர்தலை ஏ. பாரிஸ்

வார்த்தைகளில் 'Bargaining is Antithetical to Hierarchy! எப்படி டானியல் பூர் கூறிய கதையில் வரும் நபர்கள் இயந்திரங்களோடு வேலை செய்யும்போது சாதியால் வரும் 'துடக்கு' பற்றி அக்கறைப்படவில்லையோ அப்படியே வர்த்தகம் செய்வோரும் சாதியைக் கவனிப்பதில்லை. வர்த்தகம் சாதியை வேரறுக்கிறது. இளமையில் கிளர்ச்சிச் சிந்தனையாளராக இருந்தவர் தம் முதுமையிலும் கிளர்ச்சி வாதியாக இருக்கிறார். அவர் இளைஞர் காங்கிரஸ் அமைப்புடன் இணைந்து சமபந்தி போசனத்தை நடத்தியவர். ஆயினும் முதுமைக் காலத்தில் தன் வீட்டு விறாந்தைக்குள் ஏறி வந்து இருக்கையில் அமர்ந்து தேநீர் அருந்தும்படியும் தம்மோடு உரையாடும் படியும் தன்னிடம் வரும் 'தாழ்த்தப்பட்டவர்களை' வற்புறுத்தி அழைக்கிறார் எனினும் விறாந்தையின் ஓரத்தில் நிற்கும் அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். காரணம் அம்முதியவரின் வீட்டு விறாந்தை பொது இடம் (Neutral Territory) அன்று. சாதிகளுக்கிடையிலான இடையூடாட்டம் சாதிக் குறியீடுகளைக் கொண்டது. இதனை மானிடவியலாளர்கள் 'Caste symbolism' என்பர். புது வீடு குடிபுகுதல் விருந்தில் பங்கு கொண்டவர்களும் பொதுவான இடம் ஒன்றைத் தேடித் தம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டனர். கண்டியின் சாதியமைப்பை ஆராய்ந்த நியுடன் குணசிங்க, நூர் யல்மன் போன்ற ஆய்வாளர்கள் ஹோம்ஸ் கூறியிருப்பதைப் போன்ற பல கதைகளைக் கூறியுள்ளனர். சாதி முறை நிலவும் இடங்களில் சாதி உறவுகளில் அவை நடைபெறும் இடம் (Space அல்லது Locality) குழமைவு (Context) என்பன முக்கியம் என்பதை அவர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆகையால் யந்திரமயமாக்கலும், வர்த்தகமும் சாதியைத் தகர்த்தன. ஆயினும் கிராமம் என்ற எல்லைக்குள் அது சமாதான சகவாழ்வு வாழ்வதைக் காண முடிகிறது. இருந்த போதும் யாழ்ப்பாணத்தில் காலனித்துவ ஆட்சிக்காலம் முதல் கைவினைத் தொழில்களும் வர்த்தகமும் வளர்ச்சி பெற்றன. பண்டத்தரிப்பு, சங்கானை, சுண்ணாகம், சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி போன்ற சந்தை நகரங்கள் வளர்ச்சி பெற்றன. யாழ்ப்பாண நகரமும் அதைச் சூழவுள்ள பகுதிகளான அரியாலை, நாயன்மார்கட்டு, கள்வியங்காடு, வண்ணார்பண்ணை. நாச்சிமார் கோவிலடி, ஓட்டுமடம், ஆகிய இடங்களையும் உள்ளடக்கிய பகுதிகளில் சாதிகளின் புவியியல் பரம்பல் வித்தியாசமானது. றொபேர்ட் ஹோம்ஸ் தமது நூலில் கலாநிதி டபிள்யூ எல். ஜயசிங்கம் கலாநிதிப்பட்ட ஆய்வுக்காகச் சமர்ப்பித்த (பிரசுரிக்கபடாத) ஆய்வேடான The Urban Geography of Jaffna (யாழ்ப்பாணத்தின் நகரப் புவியில்) என்பதையும் மேற்கோள் காட்டுகிறார்.

**மூன்று வகைக் குடியிருப்புக்கள்.**

கென்னத் டேவிட் யாழ்ப்பாணத்தில் மூவகைக் குடியிருப்புக்கள் உள்ளன என எடுத்துக் கூறினார்.

*1.*வேளாளர் சாதி நில உடைமையாளர்களின் விவசாயக் கிராமக் குடியிருப்பு

*2.*கடற்கரையோர மீனவர் கிராமங்களின் குடியிருப்பு

*3.*நகரத்தை சார்ந்து கோவில் சந்தை என்பனவற்றைச் சூழ அமையும் கைவினைச் சாதிகளும், பிற எல்லாச் சாதிகளும் வாழும் குடியிருப்புக்கள்.

மூன்று வகைப் புவி வெளியில் space நான்கு வகையான பரிவர்த்தனை உறவுகள் இருப்பதை கென்னத் டேவிட் விளக்குகிறார் அவை

1. வேளாளர்களுக்கும் கட்டுப்பட்ட சாதிகளுக்கும் (Bound Castes) இடையிலான உறவுகள்.
2. கட்டுப்படாத சாதிகளுக்கும் (Un Bound Castes) வேளாளர் உட்பட எல்லாச் சாதியினருக்கும் இடையிலான உறவுகள்.
3. ஓரளவு கட்டுப்பட்ட தன்மையும். கட்டுப் படாத தன்மையும் கொண்டுள்ள கலப்புச் சாதிகள் பிரதானமாக கட்டுப்பட்ட சூழலில் கொள்ளும் உறவுகள்.
4. கலப்புச் சாதிகள் சில பிரதானமாக கட்டுப்படாத (Primarily Not Bund) சூழலில் கொள்ளும் உறவுகள்.

மேலே கலப்புச் சாதிகள் **(Mixed Castes)** என்ற தொடர், விவாகம் மூலம் கலப்புற்ற சாதிகள் என்ற அர்த்தம் உடையதல்ல. அது கட்டுப்பட்ட, கட்டுபடாத என்ற இரு இயல்புகளையும் கலந்த என்ற பொருளில்

உபயோகிக்கப்பட்டுள்ளது. பக் 229 - 233 வரை நான்கு பக்கங்களில் றொபேர்ட் ஹோம்ஸ் விபரித்திருக்கும் விடயங்களை வாசகர்கள் நன்கு புரிந்து கொள்வதற்கு உதவும் முகமாக கென்னத் டேவிட்டின் மூலக் கட்டுரையில் இருந்தே பல விபரங்களை மேலே தந்துள்ளேன்.

**சாதியும் வர்க்கமும்**

சாதியும் வர்க்கமும் ஒன்றல்ல என்ற புரிதலைக் கொண்டவராக இருக்கும் ஹோம்ஸ் பெரும்பாலான ஆய்வாளர் குறிப்பிடத் தவறும் ஓர் உண்மையை (High Cast Victims) என்ற தலைப்பில் ஒரு பந்தியில் (பக் 233) கூறுகிறார். அதன் தமிழாக்கத்தைக் கீழே தந்துள்ளேன்.

'வேளாளர், சாதி முறைமையின் உச்சப் படியில் உள்ளவர்கள். நடைமுறையில் அவர்களின் உயர்வு பற்றிய ஐயம் எதுவும் இல்லை ஆயினும் 1970க்களை நெருங்கும்போது வேளாளர்களில் எண்ணிக் கையில் சிறு தொகையினரானோர் இரக்கத்திற்குரிய வறுமையில் அல்லல் படுவதைக் காண முடிந்தது. அவர்களின் பொருளாதாரக் கஷ்டங்கள் தாங்கொணாத் தன்மையின. அவர்களின் நிலை அவர்களுக்கு அருகே வாழும் தாழ்த்தப்பட்ட சாதியினரான கூலித்தொழிலாளர்களின் நிலையை விட மோசமானது. இவர்களைச் சாதி முறையின் கைதிகள் என்றே கூறலாம். தாழ்த்தப்பட்ட சாதியினர் கூலித் தொழில்களைச் செய்ய முடியும். வீட்டு வளவுகளில் செய்வதற்கு அவர்களுக்கு வேலைகள் பல உள்ளன. பெரும்பாலான வேளாளர்கள் கூலி வேலைகளை செய்ய விரும்புவதில்லை. கூலி வேலை, தம் சாதி அந்தஸ்தைக் குறைத்துக் கீழ்மைப்படுத்தி விடும் என அவர்கள் கருதுகின்றனர். கர்வத்தோடும் தாங்கொணா வலியோடும் அவர்கள் வாழ்க்கையை ஓட்டுகின்றனர். இடைக்கிடையே அவர்களி டையே தற்கொலை மரணங்களும் சம்பவிப்பதுண்டு.

இக்கட்டுரையை நிறைவு செய்யும் முன்னர் நூலின் உள்ளடக்கத்தை விளக்கும் முகமாக பத்து அத்தியாயங்களினதும் தலைப்புக்களைக் கீழே தந்துள்ளேன்.

1. அறிமுகம்
2. வீடும் அன்றாட வாழ்க்கையும்
3. குடும்பமும் திருமணமும்
4. சமயம்
5. சாதி
6. கல்வியும் இளைஞர் சமுதாயமும்
7. அரசாங்கமும் அரசியலும்
8. சுகாதாரம்
9. யாழ்ப்பாணத்தின் பொருளாதாரமும் வாழ்க்கையும்
10. யாழ்ப்பாணத்து விவசாயி

மாற்றமுற்றுக்கொண்டிருக்கும் யாழ்ப் பாணம் 1980இல் எவ்வாறு இருந்தது என்ற விபரிப்பாகவே இந்நூல் அமைந்துள்ளது. 'சாதி' என்ற அத்தியாயமும் 1980 இல் யாழ்ப்பாணத்தில் சாதி பற்றிய விபரிப்பாகவும் பகுப்பாய்வாகவுமே உள்ளது எனலாம்

❍ ❍ ❍


**நூல் : என் மாதாந்திர ஒய்வூதியம்!**
**ஆசிரியர் : இணுவில் பவா**
**விலை: இந்திய ரூபா 50/-**

ஓர் ஆன்மீகவாதியும் இந்துமத குருவுமான பவாக்குருக்கள் எழுதிய 10 சிறுகதைகளின் தொகுப்பு இது. ஆசிரியர் பல்துறை சார்ந்தவர்களுடனும் பழகக் கிடைக்கும் வாய்ப்பினாலே அவர்களின் குறை நிறைகளை அறிந்து அவற்றைக் கருக்களாகக் கொண்டு சிறுகதைகளை வடித்துள்ளார். இத்தொகுப்பில் உள்ள கதைகளில் 'புளியமரம்;, 'உத்தரதரிசனம்;, 'வினையால் ஒரு வெண்புறா; என்பன கடந்த மூன்று தசாப்தங்களில் தமிழர்கள் பட்ட பாதிப்புகளை விளக்குகின்றன. ஏனைய கதைகள் சமூகம் சார்ந்த பல்வேறு விடயங்களைக் கூறுகின்றன. சிந்தனையைத் தூண்டும் சிறுகதைத் தொகுதி.




# தேம்ஸ் நதித் தீரத்திலே...




சென்ற அத்தியாயத்தில் நிலத்துக்கடியில் ஓடும் பாதாள ரயில்கள் பற்றிய கட்டுரையை எழுதியிருந்தேன். அதனை வாசித்துவிட்டு இலண்டனில் வாழும் நூலகர் என். செல்வ ராஜா அவர்கள் அது தொடர்பான மேலதிக செய்தி ஒன்றினை அனுப்பியிருந்தார். 150 வருடங்களுக்கு முன்னர் முதல் முதலில் ஓடிய பாதாள ரயிலின் ஓவியம் அங்குள்ள புகையிரத நிலையமொன்றில் வரையப் பட்டுள்ளதாம். அந்த ஓவியத்தைப் பிரதிபண்ணி நினைவு முத்திரை ஒன்று சென்ற வருடத்தில் பாதாளரயிலின் 150 ஆவது வருட நிறைவு தொடர்பான கொண்டாட்டத்தின்போது வெளி யிட்டார்களாம். அந்த முத்திரையின் படத் தையும் அவர் அனுப்பி வைத்திருந்தார்.

இலண்டன் சென்று சமீபத்தில் நாடு திரும்பிய பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் வேறு ஒரு தகவலைத் தந்தார். இந்த ரயில்களில் மக்களோடு மக்களாக இலண்டன் பாராளுமன்றப் பிரதிநிதிகள், மந்திரி பிரதானிகள் பயணம் செய்வார்களாம்!

அவர் இதனைக் கூறியபோது முன்பு வாசித்த பத்திரிகைச் செய்தியொன்று என் நினைவில் வந்தது. முன்னைய பிரதமராக இருந்த ரோனி பிளயரின் மனைவி செறி பிளயர் ஒருமுறை ரயிலில் ரிக்கற் இன்றிப் பயணம் செய்தாராம். அதிகாரிகளினால் அது கண்டு பிடிக்கப்பட்டு அவர் 10 பவுண்ஸ் அபராதம் செலுத்தவேண்டி ஏற்பட்டது.




150 ஆவது வருட நிறைவு நினைவு முத்திரை

இலண்டன் ரயில்களில் மக்கள் பிரதிநிதிகள் மக்களோடு மக்களாகப் பயணிக்கும்போது நமது நாட்டில் எங்களது பிரதிநிதிகள் எத்த கைய பந்தாக்களுடன் நடமாடுகிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்தேன்.

ஓர் அற்புதமான காலை வேளையில் நானும் மனைவியும் மைத்துனரின் மகள் சந்தியாவும் இலண்டனின் மையப்பகுதியாகிய தேம்ஸ் நதித் தீரத்தை அடைந்தோம். இலண்ட னின் இதயம் என்று கூட இந்தப் பகுதியைச் சொல்வார்கள். இலண்டன் நகரின் எழில் கொஞ்சும் அழகையும் நகர வாழ்வையும் பிரதிபலிக்கும் மையப்புள்ளியாக தேம்ஸ்நதி வளைந்தும் நெளிந்தும் மிக அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்தத் தேம்ஸ் நதியின் தீரத்திலேதான் இலண்டன் நகரின் சரித்திரம் தோன்றியது என்பது வரலாறு. பொதுவாக நதிக்கரைகளிலேதான் நாகரீகங்கள் தோன்றி வளர்வது வழக்கம். ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர், கி.மு. 43ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரோமானியர்கள் முதன் முதலில் இந்த தேம்ஸ் நதிக்கரையிலே வந்து குடியேறினார்களாம். இலண்டனின் அழகும், பாதுகாப்பான சூழலும் நாடுகள் தேடிப்பயணம் செய்த ரோமானி யர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. அவர் கள் அங்கு தங்கி தேம்ஸ் நதியின்மேல் பாலங்களை அமைத்து நதிக்கரையோரங்களில் வாழத்தலைப்பட்டனர். ரோமேனியர்கள் இங்கு வந்தபோது ஆதிவாசிகள் அங்கு வசித்து வந்ததாகச் சரித்திரச் சான்றுகள் உள்ளன.





**இலண்டன் பிறிட்ஜ்**

நதியின் கரையோரமாக வீடுகளையும் கட்டடங்களையும் அமைத்ததோடு வசதியாக அவர்கள் அங்கு ஒரு நகரையும் அமைத்துக் கொண்டார்கள். அந்த நகருக்கு **'லண்டூனியம்'** என்று பெயரிட்டார்களாம். அவர்கள் அன்று வைத்த பெயரே பின்னர் இலண்டன் எனத் திரிபடைந்துவிட்டது. இந்நகரின் அருகில் உள்ள கடலில் பயணம் செய்யும் கப்பல்கள் தேம்ஸ் நதிக்கும் வந்தன. அதன் காரணமாக நகர் வளர்ச்சியடையத் தொடங்கியது. அக் காலத்தில் சுமார் 50000 பேர்வரை அங்கு வாழ்ந்தார்கள் என அறிய முடிகிறது. ஆனால் ஏதோ காரணத்தால் இந்த ரோமானியர்கள் இலண்டனை விட்டுத் தமது சொந்த நாட்டுக்குச் சென்று விட்டார்கள். கைவிடப்பட்ட நிலையில் இருந்த லண்டுனியம் வெறிச்சோடிப் பாழடைந்தது. கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்தன. இந்நிலையில் சுமார் ஐநூறு ஆண்டுகளின் பின்னர் டென்மார்க் படைவீரர்கள் அங்கு வந்தனர். அவர்கள் நகரைச் சேதப்படுத்தத் தொடங்கினர். அப் போது அரசராக இருந்த அல்பிரட் என்பவர் டென்மார்க் வீரர்களை வெளியேற்றிவிட்டு நகரைப் புனருத்தாரணம் செய்தார். அவ் வேளையில் பிரான்சிய மன்னனாகிய வில்லியம் என்பார் நாட்டைக் கைப்பற்றி இலண்டனைப் புதிதாக நிர் மாணித்தார் என வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. எட்டாவது ஹென்றி மன்னரின் காலம்வரை இலண்டன் படிப்படியாக வளர்ச்சி கண்டது.

1665ல் சுகாதாரமற்ற சூழ்நிலையில் 'கொள்ளை' நோய் இலண்டனைப் பாதித்தது. இந்தக் கொள்ளை நோயால் ஏறத்தாழ 12000 பேர் ஒருகிழமையில பலியானார்கள் என அறியமுடிகிறது.

02-09-1666இல் ஏற்பட்ட மிகப் பெரிய தீ (The Great Fire) இலண்டனின் முக்கால்வாசிப் பகுதி யைச் சாம்பராக்கி விட்டது. 13000 வீடுகள் நான்கே நாட்களில் எரிந்து சாம்பராகின. 25இலட்சம் மக்கள் இதனால் தங்கள் வசிப்பிடங்களை இழந்தார்களாம். சரித்திரப் புகழ் பெற்ற சென்ற் போல்ஸ் தேவாலயம் உட்பட மொத்தம் 80 தேவாலயங்கள் அந்தத் தீவிபத்தால் சாம்பராகியதாக வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.

பீனிக்ஸ் பறவை சாம்பரில் இருந்து உயிர்த்தெழுவது போல இலண்டன் நகரம் புதிதாய் மீண்டெழுந்தது. 1675-1711 காலப் பகுதியில் சென்ற் போல்ஸ் தேவாலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது.

11ஆம் நூற்றாண்டில் அத்தேசத்தின் தலை நகராக விளங்கிய லண்டன், 18ஆம் நூற்றாண்டில் உலகின் பல நாடுகளுக்குத் தலைநகராக மாறியது.

நாங்கள் தேம்ஸ் நதியைச் சென்றடைந்த தும் அங்கிருந்த பாலமொன்றிலிருந்து நதியின்மேல் பார்வையைச் செலுத்தினோம். நதி அப்படியொன்றும் அகலமானதாகவோ ஆழமானதாகவோ தெரியவில்லை. கரை என்று ஒன்றைக் காணவில்லை. அங்கு சுவர் களைக் கட்டிப் பல கட்டிடங்களை எழுப் பியுள்ளார்கள். நதியில் ஏராளமான ஓடங்களில் உல்லாசப் பயணிகள் பயணித்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

தேம்ஸ் நதியில் நீர் வற்றுவதில்லை. வருடத்தின் 12 மாதங்களிலும் நீர் ஓடிக்கொண்டே இருக்கும் என்ற தகவலை சந்தியா எமக்குக் கூறினாள். இலண்டனில் மொத்தக் குடிநீர்த் தேவையின் மூன்றில் இரண்டு பகுதி தேம்ஸ் நதிமூலமே நிறைவேற்றப்படுகிறது எனவும் அறிய முடிந்தது. இலண்டனில் பெரும்பாலான வீடுகளில் குளிப்பதற்கும் ஏனைய தேவை களுக்கும் தேம்ஸ் நதியின் தண்ணீரே உபயோகிக்கப்படுகிறது. குடிப்பதற்கு இந்

நீரைச் சுத்தப்படுத்தி அனுப்புகிறார்கள். இங்குள்ள வீடுகளில் 24 மணி நேரமும் குழாயைத் திறந்தால் தண்ணீர் கொட்டுகிறது. தண்ணீருக்கான பஞ்சம் எக்காலத்திலும் இருந்ததில்லையாம்.

வெஸ்ட்மின்ஸ்டர் (Westminster) என்ற இடம், தேம்ஸ் நதியின் வடக்குக் கரையில், இலண்டனின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இலண்டனின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் பெருமைமிக்கதுமான பல இடங்கள் இங்குதான் உள்ளன. வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனை, பக்கிங்காம் அரண்மனை, வெஸ்ட் மின்ஸ்டர் இடம், வென்ஸ்மின்டர் தேவாலயம், போன்ற முக்கிய இடங்கள் இங்கு உள்ளன. இந்த வெஸ்ட்மின்ஸ்டர் பகுதி இங்கிலாந்து அரசின் இடமாகவும் பின்னர் பிரித்தானிய அரசின் இருப்பிடமாகவும் ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் இருந்து வந்திருக்கிறது.

பிரித்தானியாவின் பாராளுமன்றத்தை 'வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை' என்றும் அழைப்பார்கள். இது உலகப் பாரம்பரியக் களங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. இந்தப் பாராளுமன்றத்துக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. முதன்முதலில் பாரளுமன்றத்துக்கான ஒரு தனிக்கட்டிடம் இருக்கவில்லை. 1547ல் அங்குள்ள புனித ஸ்டீபன் தேவாலயத்தில் மக்கள் பிரதிநிதிகள் கூடி பாராளுமன்றச் செயற்பாடுகளை நடத்தினர். 1834இல் ஏற்பட்ட தீவிபத்தில் அத்தேவாலயம் தீக்கிரையானது. அதனைத் தொடர்ந்து அத்தேவாலத்தின் கீழ்ப்பகுதியொன்றில் நாடாளுமன்றச் செயற்பாடுகள் இடம்பெற்றன. 1941இல் இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனியரின் குண்டுவீச்சில் இந்தப் பாராளுமன்றமும் அழிந்தது. இன்றைய பாராளுமன்றம் 1950இல் ஸேர் கையில்ஸ் கில்பர்ட் என்பவரின் கட்டிடக் கைவண்ணத்தில் உருவாகியது.

உலகப்புகழ் பெற்ற 'பிக்பென்' மணிக்கூட்டுக் கோபுரம் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் வடக்கு முனையில் அமைந்திருக்கிறது. நான்கு பக்கங்கள் கொண்ட மணிக்கூண்டுகளில் இதுவே உலகின் மிகப்பெரியதாகும். இதில் உள்ள மணி 13500 கிலோ எடைகொண்டது. இம்மணிக்கூண்டுக் கோபுரம் 1858 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி கட்டி முடிக்கப்பட்டது. இதன் மொத்த





தேம்ஸ் நதிக்கரையில்



Big Ben



**பாராளுமன்றம் – இலண்டன்**



**10ஆம் இலக்க வீடு – பிரதமர் இல்லம்**

உயரம் 315 அடி. இது 200 அடிவரை செங்கல்லால் கட்டப்பட்டது. மணல் நிறத்திலான சுண்ணாப்புக்கல் மேற்புறப்பூச்சுடன் கூடியது. கோபுரத்தின் உயரத்தைப் பொறுத்தவரை உலகின் மூன்றாவது உயரமான கோபுரமாக இது கணிக்கப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனி இந்த மணிக்கூண்டுக் கோபுரத்தைக் குண்டுவீசித் தகர்க்க முயன்றும் அது முடியாமல் போயிற்று.

பிரித்தானிய ஒலிபரப்பக் கூட்டுத்தாபனத்தின் ஒலி, ஒளிபரப்பாகும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் சரியான கால அளவு இந்த பிக்பென் மணியோசைதான். அந்த ஓசை பிரித்தானிய ஒலி ஒளி ஊடகங்களூடாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இங்கிலாந்தின் அரசி எலிசபெத் அரியணையில் அமர்ந்து 60 வரடங்களைப் பூர்த்தி செய்ததன் நினைவுக் கொண்டாண்டத்தின்போது 2012 ஆம் ஆண்டில் இந்த மணிக்கூண்டு 'எலிசபெத் கோபுரம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இருந்தபோதிலும் மக்கள் வாயிலிருந்து பிக்பென் என்ற பெயரை மாற்ற முடியவில்லை.

இந்த பிக்பென் மணிக்கூண்டிலிந்து எழும் மணியோசை இலண்டனில் பல கிலோமீற்றர் வரை கேட்கிறது. பகல் பன்னிரண்டு மணி அடிப்பதைக் கேட்டு மகிழ்வதற்கு மக்கள் அங்கு கூடிவிடுகிறார்கள். நாங்களும் அந்த ஓசையின் அழகையும் இனிமையையும் கேட்டு மகிழ்ந்தோம்.

அருகில் உள்ள பாராளுமன்றத்தில் தொடர் கூட்டம் நடந்து கொண்டிருந்தால் அதனை மக்களுக்கு அறியத்தரும் வகையில் இந்த மணிக்கூண்டின் உச்சியில் சிகப்பு நிற வெளிச்சம் ஏற்றப்பட்டிருக்குமாம்.

தேம்ஸ் நதியின் மேலே பல பாலங்கள் காணப்படுகின்றன. அவையாவும் சீரான முறையில் பராமரிக்கப்படுவதையும் காணமுடிகிறது. எந்த நேரத்திலும் இந்தப் பாலங்களில் உல்லாசப பயணிகள் நிறைந்து காணப்படுகின்றனர்.

இந்தப்பாலங்களில் முக்கியமான பாலமாகத் திகழ்வது உலகப் புகழ்பெற்ற 'லண்டன் பிறிட்ஜ்'. இந்த இலண்டன் பிறிட்ஜ் பற்றி இன்று மூன்று வயதுக் குழந்தைக்கும் தெரிகின்றது. எப்படியெனில் அவர்கள் செல்லும் Nursary முன் பள்ளிகளில் "London Bridge is Falling down … my Fair Lady.." என்கிற பாடலைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ரி.வி.களிலும் சிறுவர்களுக்கான அலைவரிசையைத் திறந்தால் இந்தப் பாடல் அடிக்கடி ஒலிக்கிறது.

அவர்களது பாடப்புத்தகத்திலும் படத்துடன் இந்தப்பாடல் இருக்கிறது. இலண்டன் பாலம் உடைந்து விழுகிறது என்ற கருத்தில் இந்தப்பாடல் ஒலிக்கிறது. நாங்கள் சிறு வயதில் 'நிலா நிலா வா.. வா.. நில்லாமல் ஓடிவா.. மலைமேல் ஏறிவா.... மல்லிகைப்பூ கொண்டுவா..' என்று பாடித்திரிந்த Nersary Rhymes போன்றது தான் இந்தப்பாடலும். இப்போது எங்கள் குழந்தைகளின் பாடல்களில்

ஆங்கிலம் புகுந்து கொண்டது காலத்தின் கோலம்!

நானும் மனைவியும் இலண்டன் புறப்படு வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டபோது அதனைக் கவனித்த எனது மூன்றரை வயது நிரம்பிய பேரனும் எங்களுடன் வரவேண்டும் என்றான். 'தாத்தா, நான் இலண்டன் பிறிட்ஜை பார்க்க வேண்டும்' என்றான். குழந்தையிடம் நாம் எப்படித்தான் மறுப்புக் கூறுவது? மௌனமாக இருந்தோம். தனது பாடக் கொப்பியில் தான் பார்க்கப்போகும் லண்டன் பிறிட்ஜை நீலக் கலர்ச் சோக்கட்டியால் வரைந்து காட்டினான். தனது ஸ்கூல் பாய்க்கில் ஒரு சில உடுப்புகளை எடுத்துவைத்து எமது பயணப் பொதிகளின் அருகில் வைத்தான். எங்களது மௌனம் அவனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவனது முகம் வாடிவிட்டது.

எனது தந்தையின் பெயர் தியாகராச ஐயர். எனது பேரனுக்கும் அதே பெயரை எனது மகன் வைத்திருக்கிறார். நான் எனது தந்தையை 'ஐயா' என்று அழைப்பது வழக்கமாக இருந்தது. இப்போது பேரனை 'குஞ்சையா' என்று அழைப்பதை வழக்க மாக்கிக் கொண்டிருக்கிறேன்.

'சரி குஞ்சையா, லண்டன் பிறிட்ஜ் பார்க்கக் கூட்டிப் போகிறேன்' என்று கூறி அவனைச் சமாதானப்படுத்தினேன்.

அன்று இரவு நாங்கள் விமான நிலை யத்துக்குப் புறப்பட்டபோது குஞ்சையா நல்ல தூக்கத்தில் இருந்தான்.

இலண்டன் பிறிட்ஜைப் பார்த்தபோது அந்தப் பிஞ்சுக் குழந்தையின் வேண்டுதலை நிறைவேற்ற முடியாமல் போனது நினை வில் வந்து மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. சந்தோஷமாக இருக்க முடியவில்லை.

இலண்டன் பிறிட்ஜ் என உலகப்பிரசித்தி பெற்ற இந்தப் பாலத்தின் உண்மையான பெயர் 'டவர் பிறிட்ஜ்'. முன்பொரு காலத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ள இடம் பெரிய துறைமுகமாக விளங்கியதாம். அந்த இடத்திலேயே இந்தப்பாலத்தை 1894இல் அமைத்துள்ளார்கள். இலண்டனின் முக்கிய அடையாளமாகத் திகழும் இந்தப்பாலம் 43 மீற்றர் உயரமும் 200அடி நீளமும் கொண்டது. இரண்டு கோபுரங்களுக்கு இடையில் இந்தப்பாலம் கட்டப் பட்டுள்ளது. இந்தப்பாலம் ஆங்கிலக் கட்டிடப்பாணியில் 'கோதிக்' Gothic முறையில் கட்டப்பட்டது.

இந்தப்பாலத்தின் அருகே சில பிரமாண்டமான கட்டிடங்கள் இருக்கின்றன. அவை அரச அலுவலகங்கள். அவற்றை விட ஹோட்டல்களும், மியூசியம், வீடுகள், மதுபானக்கடைகள் ஆகியவையும் காணப் படுகின்றன.

பாலத்தில் ஏறிநின்று பார்த்தபோது தேமஸ் நதியில் சூரிய கிரணங்கள் பட்டு நதி தங்கப்பாளம் போலப் பளபளத்துக் கொண் டிருந்தது.

பாலத்தின் அடியில் கப்பல்கள் போகும் போது, பாலம் நடுவில் இரண்டாகப் பிரிந்து மேலெழுந்து கப்பலுக்கு வழிவிடும் பொறிமுறையுடன் இப்பாலம் அமைக்கப் பட்டுள்ளது. பாலத்தின் மேலுள்ள தெருவில் பஸ்கள், கார்கள் எதிரும் புதிருமாக ஓடிய வண்ணம் இருக்கின்றன. பாலத்தின் இருமருங்கிலும் பாதசாரிகளுக்கான பாதைகள் அமைந்துள்ளன.

இந்தப் பாலத்தில் ஆங்காங்கே உட்கார்ந்து கொள்ள இருக்கைகள் உள்ளன. அந்த இருக்கைகளில் எங்கு பார்த்தாலும் இளஞ் சிட்டுக்களைக் காணமுடிந்தது.

இந்தப்பாலத்தைப் பார்த்துவிட்டு சிறிது தூரம் நடந்து சென்றோம். அங்கே 'டவ்னிங் ஸ்றீற்' Downing Street என்ற புகழ்பெற்ற தெரு இருக்கிறது. பிரித்தானியாவின் முதலாவது ஹவார்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான சேர் ஜோர்ஜ் டவ்னிங் (1642) என்பவரின் ஞாபகார்த்தமாக இந்தத் தெருவிற்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

இந்தத் தெருவின் பத்தாம் நம்பர் வீடு பிரித்தானியப் பிரதமரின் வாசஸ்தலமாகும்.

இந்த தேம்ஸ் நதியின் தீரத்தில் மெலும் பல அற்புதக் காட்சிகளை நாங்கள் பார்த்து மகிழ்ந்தோம். அவை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

❍ ❍ ❍

# மழையில் நனைந்த பூனை



## ஏனெஸ்ற் ஹெமிங்வே

தலைசிறந்த அமெரிக்க இலக்கிய வாதி. 1953 இல் புலிட்சர் விருது, 1954 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு. முதலில் ஒரு நிருபராகவும், முதலாம் உலக யுத்த காலத்தே அம்பியூலன்ஸ் சாரதியாகவும் பணியாற்றினார். அம்பியூலன்ஸ் சாரதியாகப் பெற்ற அனுபவத்திற் கருவானது அவரது ‘A Farewell to Arms” எனும் நூல். பின்னர் வெளிநாட்டுத் தூதுவராகவும் பாரிஸில் பணியாற்றினார்.

தந்தை ஒரு வைத்தியர். தாய் ஒரு இசை வல்லுனர். இசைக்கச்சேரிகள் வைத்தபடி கிராமம் வழியே தாயார் சுற்றித் திரிவதை வெறுத்த ஹெமிங்வே, வேட்டையாடல், மீன்பிடி என்பவற்றில் இன்பம் காணும் ஒருவராகவும், தோப்புகள் வழியே தனிமை யை நாடி ஓடுபவராகவும் இருந்தார். அம்பியூலன்ஸ் சாரதியாகப் பணிபுரிகையில் விபத்திற் சிக்கியதில் ஆறு மாதங்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் காலத்தே, அக்னே எனும் தாதியுடன் காதல் வயப்பட்டார். அக்னே அவரைக் கைவிட்டு இன்னொருவரை மணந்தபோது ரொம்ப நொறுங்கிப் போனார். ஒன்றன்பின் ஒன்றென நான்கு திருமணங்கள்.

ஆபிரிக்கப் பயணம் ஒன்றில் விமான விபத்தில் சிக்கி இறுதிக்காலம் வரை நோயில் துவண்டார். பொருளாதாரச் சிக்கல்கள், பணத்தேவை பற்றிய கவலைகள், தனதான பாதுகாப்பு பற்றிய கவலைகள், நோய், அடிக்கடி சந்தித்த விபத்துக்கள் யாவும் வெகுவாய் அவரை வாட்டி வதைக்க Key west, Florida, Cuba என மாறி மாறி வசித்து ‘The Dangerous Summer’ நூலை வெளியிட்ட பின்னர் ஒரு கோடைகாலத்தே கியூபாவில் தற்கொலையும் செய்து கொண்டார்.

பூனைக்குட்டிகள் எப்போதும் அவருக்கு நேஸம் தந்தவையாக இருந்தன. இக்கதையும் மழையில் நனைந்த ஒரு பூனைக்குட்டியைப் பற்றி எடுத்தியம்புகிறது. இப்பூனைக்குட்டி தனிமையில் வாடும் ஒரு பெண்ணின் அன்பும், அருகாமையும் வேண்டிய மனோபாவத்தை மறைமுகமாகச் சுட்டி நிற்கின்றது.

இத்தாலிய ஹோட்டல் ஒன்றில் விடுமுறையைக் கழிக்க வருகிறார்கள் ஒரு அமெரிக்கத் தம்பதியர். பாஷைதெரியாமையாலும் அவர்கள் தனிமைப்படுகிறார்கள், கணவனது அன்பும், காப்புமின்மையாலும் அப்பெண் தனக்குத் தானே தனிமைப்பட்டும் இருக்கிறாள்.




**Ernest Hemingway**
*(பிறப்பு ஜூலை 21, 1899*
*இறப்பு ஜூலை 2, 1961)*



**தமிழில்:**
**கெகிறாவ ஸுலைஹா**

இரண்டு அமெரிக்கர்கள் மட்டுமே அந்த ஹோட்டலில் நின்றிருந்தார்கள். தத்தமது அறைக்கும், அறையிலிருந்து வெளியேயும் படிகள் வழியாக பயணம் செய்து கொண்டிருக்கும் கடந்து செல்லும் இம்மனிதர்களில் எவரையும் அவர்களுக்குப் பரிச்சயமிருக்கவில்லை. கடலுக்கு முகம் காட்டியபடி இரண்டாம் மாடியில் அவர்களது அறையிருந்தது. கூடவே, யுத்த நினைவுச் சின்னத்துக்கும், பொதுப் பூங்காவுக்கும் முகம் காட்டுகின்ற விதத்திலும் இருந்தது. அவ்வறை. பச்சை நிற இருக்கைகளும், பென்னம் பெரிய தென்னை மரங்களும் பொதுமக்களது பூங்காவில் இருந்தன. சீரான காலநிலை நிலவுகையில், ஒரு ஓவியன் தன் சதுரச் சட்டகத்தோடு எப்போதும் அங்கே அமர்ந்திருப்பான். கடலையும், பூங்காவையும் எதிர்கொண்ட வண்ணமாய் அமைந்திருக்கிற, கண்கவர் வண்ணப்பூச்சில் மின்னிப் பளபளக்கிற அந்த ஹோட்டலையும், உயர்ந்து வளர்ந்திருக்கும் தென்னை மரங்களது தோற்றவமைப்பையும் நேஸித்தே ஓவியர்கள் அங்கு வருகை தந்தனர். யுத்த நினைவுச் சின்னத்தைப் பார்வையிடுவதற்காக நீண்ட தூரம் பயணப்பட்டு இத்தாலியர்கள் அங்கே வந்தார்கள். வெண்கலத்தாலான அந்நினைவுச் சின்னம் மழைநீரில் மின்னிப் பளபளத்தது. மழை பெய்தவண்ணமிருந்தது. தென்னைமர ஓலைகளிலிருந்து மழைத்துளிகள் வீழ்ந்தபடியிருந்தது சொட்டுச் சொட்டாக. செம்மண் பாதைகளில் மழைநீர் தேங்கித் தேங்கி நின்றது ஆங்காங்கே. கடல், மழைக்கூடு அலையெழுப்பி முன்னோக்கி வருவதும், மறுபடி நகருவதாயும் இருந்தது. நினைவுச் சின்னத்துக்கருகேயிருக்கும் சதுக்கத்திலிருந்து வாகனங்கள் நகர்ந்த வண்ணமிருந்தன. சதுக்கத்தின் குறுக்காக அமைந்திருக்கும் உணவு விடுதியின் பரிசாரகன் ஒருவன் வெறுமை சூழ்ந்து கிடக்கும் சதுக்கத்தை அவதானித்தபடி, வாசலடியில் நின்றிருந்தான்.

அந்த அமெரிக்க மனைவி வெளிப்புறம் அவதானித்தபடியே யன்னலண்டை நின்றிருந் தாள். வெளியே சரியாக யன்னலுக்கு நேரெதிர்த் திசையில் கீழே மழைநீர் சொட்டுகின்ற பச்சை நிற இருக்கைகளில் ஒன்றின் அடியில் ஒரு பூனை குறுகிப் போய் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. நனையாமல் ஒதுங்கிக் கொள்ள அது முழு முயற்சி மேற்கொண்ட வண்ணமிருந்தது.

"நான் கீழே போய் அந்தப் பூனைக் குட்டியைத் தூக்கிக் கொண்டு வரப் போகிறேன்." அமெரிக்க மனைவி சொன்னாள்.

"நான் அதைச் செய்கிறேன்." அவளது கணவன் கட்டிலிலிருந்தபடியே பதிலளித்தான்.

"இல்லை, நான் எடுத்துவரப் போகிறேன். அந்தப் பரிதாபகரமான பூனைக்குட்டி நனையா திருக்க மேசைக்கடியில் இருந்து கொண்டு படாதபாடு படுவது போலிருக்கிறது."

கணவன் கட்டிலின் ஓரத்தே தன் காலடியில் தலையணைகள் இரண்டை வைத்து குறுக் கலாய்ச் சாய்ந்தபடி, தொடர்ந்து புத்தகம் வாசிப்பிலேயே மூழ்கியிருந்தான்.

"நனையாதே" அவன் சொன்னான்.

மனைவி படிகள் வழியே கீழிறங்கி நடக்கவாரம்பித்தாள். அங்கு நின்றிருந்த ஹோட்டல் சொந்தக்காரன், அவள் தனது அலுவலகத்தைக் கடந்துபோவது கண்டு, தலைதாழ்த்தி அவளுக்கு மரியாதையாக வணக்கம் செலுத்தினான். காரியாலயத்தின் தொலைவு மூலையொன்றில் அவனது மேசை போடப்பட்டிருந்தது. கொஞ்சம் வயதுதான் என்றாலும், நல்ல உயரமான திடகாத்திரமான தேகம் அவனுக்கு.


"மழை பெய்கிறது." அம்மனைவி இத்தாலிய பாஷையில் சொன்னாள். அவளுக்கு அந்த ஹோட்டல் முதலாளியைப் பிடித்திருந்தது.

"ரொம்பச் சீரற்ற காலநிலை நிலவுகிறது அம்மணீ" மங்கிய அவ்வறையின் தொலைவு தூரத்தே மேசையருகே நின்றபடியே அவன் சொன்னான். அவளுக்கு அவனைப் பிடித்திருந்தது. முறைப்பாடுகளை ஆழ்ந்த கவனத்தோடு செவிசாய்க்கும் அவனது தன்மையை அவள் ரொம்ப நேஸித்தாள். அவ்வியல்பை அவள் ரொம்ப ஆராதித்தாள். ஒரு ஹோட்டல் பிரதானியாக அவன் பிரச்சினைகளை உணர்ந்து, உள்வாங்கும் ஒருவனாகயிருப்பது அவளுக்கு மிகவுமே பிடித்திருந்தது. அவளுக்குச் சேவகம் செய்ய விரும்பும் இயல்பினனாய் அவனிருப்பதை அவள் மிக விரும்பினாள். அவனது

வயதான தீட்சண்யமான முகபாவமும், அவனது பெரிய கைகளும் அவளுக்குப் பிடித்துப் போயிருந்தன. அவனை ரொம்ப ஆராதித்தபடியே அவள் கதவைத் திறந்து வெளியே பார்த்தாள். மழை படு பயங்கரமாய்ப் பெய்தது. இறப்பர் குல்லாய் ஒன்றோடு, ஆள் நடமாட்டம் அறவேயில்லாத சதுக்கத்திலிருந்து சிற்றுண்டிச்சாலைக்குள் ஒரு மனிதன் வந்து புகுந்தான். அந்தப் பூனைக்குட்டி அதே இடத்திலேயே நிற்கக் கூடும். அந்த மூலைவரைக்கும் சிலவேளை அவளுக்குப் போக முடியலாம். கதவடியில் நிற்கையில் அவளது தலைக்கு மேலே ஒரு குடை விரிந்திருப்பது கண்டு வியந்து பார்த்தவள், அங்கே தன் அறைச் சேவகி நின்றிருப்பதைக் கண்டாள். புன்னகை பூத்த முகத்தோடு சேவகி சொன்னாள் இத்தாலிய பாஷையில் "நீங்கள் நனைந்துவிடக் கூடாது." நிச்சயமாக அந்த ஹோட்டல் முதலாளிதான் அவளை அங்கு அனுப்பி யிருக்க வேண்டும்.

**நூல்: கம்பனில் நான்**
**ஆசிரியர் : அகளங்கன்.**
**வெளியீடு : யாழ். இலக்கியவட்டம்.**
**விலை : ரூபா 400/-**

*கம்பராமாயணத்தில் மிகுந்த விருப்பும் ஈடு பாடும் கொண்டுள்ள கலாநிதி அகளங்கன் அவர் களின் கம்பராமாயண ஆளுமையை இந்நூல் வெளிப்படுத்துகிறது. இந்நூலில் இரசனைக் கட்டுரைகளும் ஆய்வுக் கட்டுரைகளுமாக இரண்டு வகையான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. "சூர்ப்பனகை ஒரு நகைச்சுவைப் பாத்திரமா?" என்ற கட்டுரை இரசனையும் சர்ச்சையும் கொண்டது. "வாலி சுக்கிரீவன் முதலானோர் குரங்குகளா?", "கம்பன் கவனிக்கத் தவறியவை", "இராமன் சீதை காதல் இராமாயணத்துக்கு அவசியம் தானா" "தசரதரும் மனைவியரும்" ஆகிய கட்டுரைகள் விவாதத்துக்குரியவை. இக்கட்டுரைகள் உட்பட 16 கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. படித்துப் பயன் பெற, சிந்தனையைத் தூண்ட உகந்த நூல் இது.*




சேவகி குடைபிடித்து அருகே நடக்க, அப்பெண்மணி சரளைக்கல் மண்பாதை வழியாக நடந்து மேலே தன்னறை யன்னலுக்கு சரியாக நேரெதிரே வந்து நின்றாள். அந்த மேசை பச்சைப் பசேல் என்ற நிறத்தில் தோற்றமளிக்குமளவு மழையில் நன்கு கழுவப்பட்டிருந்தது. ஆனால், பூனைக்குட்டி போய்விட்டிருந்தது. சட்டென்று ஒரு ஏமாற் றத்தை அவள் உணர்ந்தாள். சேவகி அவளை நேராகப் பார்த்தாள்.

"அம்மணீ.. எதைத்தேடி நீங்கள் இங்கே..?" இத்தாலிய பாஷையில் கேட்க, "இங்கே ஒரு பூனைக்குட்டி இருந்தது"அமெரிக்க இளம்பெண் கூறினாள்.

"ஒரு பூனைக்குட்டி..?" சேவகி சிரித்தாள்.

"மழையில் நனைந்தபடி ஒரு பூனை..?"

"ஆமாம், ஆமாம். இந்த மேசையடியில்" சொல்லியவள் மேலும் தொடர்ந்தாள். "எனக்கந்த பூனைக்குட்டி வேண்டும். நான் மிக வேண்டுகிறேன். எனக்கொரு பூனைக்குட்டி வேண்டும்."

அவள் ஆங்கிலத்தில் பேசியபோது, சேவகி முகம் ஒன்றும் புரியாதது போல இறுக்கம் கொண்டது.

"வாருங்கள் அம்மணீ, நாம் உள்ளே போகலாம். நீங்கள் நனைந்து விடுவீர்கள்." அவள் சொன்னாள்.

"ஆமாமாம். நானும் அப்படித்தான் நினைக்கிறேன்." அமெரிக்கப் பெண் சொன்னாள்.

அவர்கள் மண்பாதையைக் கடந்து வந்து கதவடியாக உள்ளே நுழைந்தார்கள். சேவகி குடையை மடிப்பதற்காக வெளிப்புறமாக நின்று கொண்டாள். அமெரிக்கப் பெண்மணி தன்னறையைக் கடந்து போகையில், தன் இருக்கையிலிருந்து எழுந்து மறுபடியும் தலைதாழ்த்தி அவளுக்கு மரியாதையோடு வணக்கம் சொன்னான் ஹோட்டல் சொந்தக் காரன்.

மனசுக்குள் சின்னதாய் ஏதோ ஒரு உணர்வு. அந்த முதலாளி மெல்லிசாய் ஏற்படுத்திவிட்ட உணர்வுதான் எனினும், அது மிக முக்கிய மான உணர்வாகத் தோன்றியது அவளுக்கு. ஒரு சின்னக்கீறலேயது, ஆயினும் முக்கியத் துவம் தரப்பட்ட ஒரு ஆளுமை யாக தான் உணரப்படத் தக்களவில் ஏதோ ஒரு



சலனம் அந்தச் சின்னப் பெண்ணுள். படிகளில் ஏறினாள். ஜோர்ஜ் வாசிப்பில் மூழ்கி கட்டிலிலேயேதான் கிடந்தான் இன்னுமே.

“பூனை கிடைத்ததா உனக்கு?”புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு அவன் அவளைக் கேட்டான்.

“அது போய்விட்டது.”

“ஆச்சரியமாகயிருக்கிறதே” எங்கே போயிற்று அது?” வாசிப்பில் மூழ்கியிருந்ததால் அயர் வுற்றிருந்த கண்களுக்கு ஓய்வு கொடுக்கிற நோக்கில் அவன் வெறுமனே கேட்டான்.

அவள் கட்டிலில் அமர்ந்தாள். “அது எனக்கு ரொம்பவும் வேண்டும்.” அவள் சொன்னாள். “ஏன் எனக்கு அது இந்தளவு தேவை என்று, அதை நான் ஏன் இந்தளவு விரும்புகிறேன் என்று எனக்குப் புரியவில்லை. எனக்கந்த பூனைக்குட்டி வேண்டும். பாவம் அது. ஒரு பரிதாபமான பூனைக்குட்டி”

ஜோர்ஜ் மறுபடி வாசிப்பில் ஆழ்ந்தான்.

அலங்கார மேசையின் கண்ணாடி முன்னே போய் அமர்ந்தாள் அவள். கைக்கண்ணாடி ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டு தனது தோற்றத்தை அதிலே அவதானித்துக் கொண்டாள் அவள். தன் முன்புறத் தோற்றத்தை முதலிலும், பின்னழகை பிறகும் பார்த்துக் கொண்டாள் அவள். மறுபடியும் பின்புறத் தோற்றத்தையும், தன் கழுத்துப் பகுதியையும் கண்ணாடிக்கூடாகப் பார்த்துக் கொண்டாள் அவள்.

“நான் என் கூந்தலை வெட்டாமல் விட்டால் என்ன? அது நன்றாகயிருக்கும் என்று தோன்றவில்லையா உங்களுக்கு..?” கண்ணாடியில் தன் தோற்றத்தை அவதானித்தபடியே அவனைக் கேட்டாள் அவள்.

ஒரு பையனுடையதைப் போன்று கழுத்தளவில் மட்டும் வளர்ந்திருக்கும் அவளது ‘கிளிப்’ குத்தியிருந்த கூந்தலை ஜோர்ஜ் ஒருமுறை பார்த்துக் கொண்டான் இப்போது.

“அது இருப்பது போலவேயிருந்தால் எனக்குப் பிடிக்கும்.”

“எனக்கது அலுத்துப் போய் விட்டது. பையனைப்போலத் தோற்றமளிப்பது எரிச்சலூட் டுவதாகயிருக்கிறது எனக்கு.” அவள் பகர்ந் தாள்.

ஜோர்ஜ் அவனது இருப்பு நிலையை சற்று மாற்றிக் கொண்டான் கட்டிலிலிருந்தபடியே. அவள் பேசத் தொடங்கும் வரை அவள் மீதான பார்வையை அவன் நீக்கியிருக்கவில்லை.

“நீ அழகாகத் தோற்றமளிக்கிறாய்.” அவன் சொன்னான்.

அலங்கார மேசை மீது கைத்தளவாடியை வைத்துவிட்டு மறுபடியும் யன்னலண்டை போய் நின்று கொண்டாள் அவள். இருளாகி விட்டிருந்தது.

“என் தலைமுடியை நீளமாய் வளர்த்து முடிச்சு போட்டுக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது எனக்கு..” அவள் சொன்னாள். “எனக்கு என் மடியில் உட்கார்ந்து கொள்ள ஒரு பூனைக்குட்டி வேண்டும். அதன் உடல் தடவி விட, அது சிலிர்த்துக் கொள்ளும் அழகை ரசிக்க வேண்டும்.”

“அப்படியா?” கட்டிலிலிருந்தபடியே ஜோர்ஜ் கேட்டான்.

“அத்தோடு நான் விரும்பியவாறான உணவுட்கொள்ளும் முறையில் என் மேசை

அமைந்திருக்க வேண்டும். எனக்குச் சில மெழுகுவர்த்திகள் வேண்டும். கண்ணாடி முன் நின்று என் நீண்ட கூந்தலை சுருளாக்கி வாரிக் கட்டிக் கொள்ள வேண்டும். எனக்கொரு பூனைக்குட்டி வேண்டும். எனக்குச் சில புதிய ஆடைகளும் வேண்டும்."

"வாயை மூடிக்கொண்டு எதையாவது எடுத்து வாசியேன்.." அலுத்துப் போய் சொன்ன ஜோர்ஜ், மறுபடியும் வாசிப்பில் ஆழ்ந்தான்.

அவனது மனைவி யன்னலூடாக வெளியே பார்த்தாள். இருள் மூடிக் கவிந்து கிடந்தது. தென்னை மரங்களின் ஓலைகள் வழியே மழை சொட்டிக் கொண்டேயிருந்தது.

எனக்கொரு பூனைக்குட்டி வேண்டும்" அவள் சொன்னாள்.

"எனக்கொரு பூனைக்குட்டி வேண்டும். எனக்கு இப்போதே ஒரு பூனை வேண்டும். என்னால் நீண்ட கூந்தல் வளர்க்க முடியாவிடினும், எனக்கென எந்த வினோதமும் இல்லையெனினும் எனக்கொரு பூனை வைத்திருக்க முடியும்." அவள் சொன்னாள்.

ஜோர்ஜ் எதற்கும் செவி சாய்க்கவில்லை, அவன் பேசாமல் புத்தகம் வாசித்துக் கொண்டேயிருந்தான். அவனது மனைவி சதுக்கத்திலிருந்து வந்து கொண்டிருக்கும் ஒளியை யன்னலூடாகப் பார்த்துக் கொண்டே யிருந்தாள். யாரோ கதவைத் தட்டினார்கள்.

"வாருங்கள்." புத்தகத்திலிருந்து பார் வையை அகற்றி, ஜோர்ஜ் பார்த்தான்.

வாசலடியே சேவகி நின்றிருந்தாள். உடம்போடு அணைத்து இறுக்கி வைத்தபடி கைகளில் ஒரு அழகான ஆமையோட்டு வடிவினாலான புதிய இன பூனையொன்றை அவள் பொத்தி வைத்திருந்தாள்.

"இடைஞ்சல் தருவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்." அவள் சொன்னாள். அம்மணிக் காக இதைக் கொண்டு வந்து கொடுக்குமாறு எஜமான் வேண்டிக் கொண்டார்."

From:- ETC/PRINSETT- English Literature, Short Stories, An International Society of Education Publication 1995.

❍ ❍ ❍

# விடைகள் அண்மையில் இல்லை

-மொழிவரதன்

அவர்கள்
காரில்லாது நடை பயின்று
என்று வருவார்கள்
காரில் சென்றாலும்
கரிய நிறப்பூச்சின்றி
என்று செல்வார்கள்
பரபரப்பில்லாது வீதியில்
பந்தா இல்லாமல் இவர்கள்
பாதையில் என்று நடப்பார்கள்
எடுபிடி அடிதடி ஆட்கள்
இல்லாமல் என்று உலாவுவார்கள்
வாக்களித்த மக்கள் மத்தியில்
மக்களோடு மக்களாய்
என்று வசிப்பார்கள்
சந்தியில் சந்தையில்
தேங்காய் மாங்காய்
மரக்கறி என்று வாங்குவார்கள்
மலைகளில் குறுக்குப் பாதைகளில்
நெருத்திக் கானில் லயத்தினில்
திண்ணையில் பிள்ளைக்காம்பராவில்
எம்மலசல கூடத்தில்
என்று இவர்கள் காற்றடம் பதியும்
ஆபிரிக்க விடுதலைச் சிங்கமே!
நெல்சன் மண்டேலாவே!
கரகரத்த தென்னிந்தியத் தலைவனே!
காமராஜரே!
சீனத்து சிற்பியே மாஓசேதுங்கே
ரஸ்ய விடிவெள்ளியே! லெனினே!
நீங்கள் கல்லறைகளில்
துயின்றது போதும்
நீங்கள் உயிர்த்தெழுதல்
வேண்டும்
இது காலத்தின் தேவையாம்

# ஆசி கந்தராசாவின் 'கறுத்தக்கொழும்பான்' கட்டுரை நூலுக்கான முன்னுரை



– ஜெயமோகன்



[ 1 ]

எங்களூரில் அந்தக் காலத்தில் பட்டாளத்துக் காரர்கள்தான் உலகச் சாளரங்கள். வடசேரி கனகமூலம் சந்தைக்கு காய்கறி வாங்கச் செல்வது, சுசீந்திரம் தேர்த் திருவிழா, திரு வனந்தபுரம் பத்மநாப சாமி ஆறாட்டு விழாவுக்குச் செல்வது தவிர எங்களூரில் பயணம் மேற்கொள்பவர்கள் அரிது. பெரும்பாலானவர்கள் 'என்ன சாமி சொல்லுகது? குளித் துறைக்கு அப்புறம் ராச்சி யமில்லை. தேங்காப்பட்டினம் கடலாக்கும்' என நம்புகிறவர்கள்

அப்படிப்பட்ட சூழலில் இரும்பு லாடம் கட்டிய சப்பாத்துகளும் பச்சைக்கம்பிளிச் சீருடையும் டிரங்குப்பெட்டியுமாக வரும் பட்டாளத்துக்காரர்கள் அச்சமும் ஆர்வமும் ஊட்டும் அபூர்வப்பிறவிகள். அவர்களில் சிலர் லடாக் வரைக்கும் சென்றவர்கள். பனிமலைகளையும் பாலைவனங்களையும் கங்கையையும் பிரம்மபுத்திராவையும் பார்த்த வர்கள். ரேஷன் வந்துசேராமல் பன்னி ரண்டு நாள்வரை பட்டினி கிடந்தவர்கள். படுகாயம்பட்ட காலுடன் நூறு கிலோமீட்டர் நடந்தவர்கள். பட்டாளத்தான் வந்துவிட்டால் ஊரே சுற்றிலும் திரண்டுவிடும்.

நான் அவதானித்தது, பட்டாளத்தான்களிடம் வரும் மாறுதலை. ஒருமுறை முருகேசனா சாரியின் மனைவியை அச்சுதனுடன் சேர்த்து யட்சிகோயில் முடுக்கில் பிடித்தார்கள். ஊரே ரகளைப்பட்டது. ஊரே கூட்டங்களாகக் கூடி நின்று வம்புபேசியது. எங்கும் கொந்தளிப்பு. ஊர் அழியுமா இருக்குமா என்ற ஐயம் பரவலாக நிலவியது.


பட்டாளத்தான் சோமன் அண்ணா சிரித்தபடி 'விடுடே முருகேசா, அவள இத்திரி வெள்ளம் கோரி நல்லா குளிக்கச்சொல்லு... மண்ணு தின்னுத உடம்பு' என்றார். 'வேணுமானா நீ அவன் பெஞ்சாதிகிட்ட கேட்டுப்பாரு... இப்பம் என்ன?'

இவர் ஏன் இவ்வளவு எளிதாக எடுத்துக்கொள்கிறார் என்று அன்று திகைப்பாக இருந்தது. ஆனால் அத்தனை பட்டாளத் தான்களிடமும் அந்தச் சிரிப்பு இருந்தது. உலகம் இவ்வளவுதான் என அறிந்தவனின் புன்னகை அது. மனித உறவுகளை, வாழ்வை, மரணத்தை அறிந்து தெளிந்தவனின் அங்கதம் அவர்களின் ஒவ்வொரு சொல்லிலும் இருந்தது.

அ.முத்துலிங்கத்தின் எழுத்துக்கள் தமிழில் வெளிவர ஆரம்பித்தபோதுதான் நான் வாசித்தவரை அந்த பட்டாளத்தானின் சிரிப்பு தமிழிலக்கியத்தில் பதிவாகியது. உலகநாடுகள் தோறும் அலைந்து, விதவிதமான இனங்களை மொழிகளை பண்பாடுகளைச் சந்தித்து, பேதங்களையும் ஒருமைகளையும் உணர்ந்து நிதானமடைந்தவரின் புன்னகை அவரது எல்லா வரிகளிலும் இருந்தது. தோளோடு தோள் இடித்துக்கொண்டு வாழும் தமிழ்ச்சூழலின் இருட்டில் அந்த புன்னகையின் வெளிச்சம் மிகப்பெரியதாகத் தெரிந்தது

சின்னச்சின்ன விஷயங்கள் வழியாக பெரியபெரிய மனநாடகங்களை நடித்து, கொந் தளித்து கொப்பளித்து வாழும் தமிழர்களில் கணிசமானவர்களுக்கு அந்த புன்னகை எரிச்சலூ ட்டியதென்பதையும் கண்டிருக்கிறேன். சமகாலம் எரிந்துகொண்டிருப்பதாக அவர்கள் பாவனை செய்தார்கள். கடந்தகாலம் உடைந்து சரிவதாக எண்ணிக்கொண்டார்கள். அதன் ரட்சகர்களாக தங்களை கற்பிதம் செய்துகொண்டார்கள். அவர்களுக்கு எல்லாம் வாழ்க்கையல்லவா என்ற முத்துலிங்கத்தின் புன்னகையை புரிந்துகொள்ளவேமுடியவில்லை. ஆனால் மெல்லமெல்ல நவீனத்தமிழின் முதன்மையான படைப்பாளியாக அவர் தன் பீடத்தை அடைந்தார்

அ.முத்துலிங்கத்தின் உலகைச்சேர்ந்த இன்னொரு எழுத்தாளர் ஆசி கந்தராசா. முத்துலிங்கத்தின் மொழி நடையை ஆசி கந்தராசா நினைவுபடுத்துவது சொற்றொடரமைப்பினால் அல்ல, உள்ளார்ந்த புன்னகையின் வெளிச்சத்தால்தான். உள்ளே விளக்கேற்றி வைக்கப்பட்ட படிகக்கட்டிபோல மொத்த எழுத்தையும் அந்தப்புன்னகை மிளிரச்செய்துவிடுகிறது.




[ 2 ]

ஆசி கந்தராசாவின் எழுத்தை மிகவும் தற்செயலாகத்தான் நான் அறிமுகம் செய்து கொண்டேன். பத்துவருடங்களுக்கு முன்பு சாதாரணமாக வாசிக்க ஆரம்பித்த கதை என்னை உள்ளிழுத்துக்கொண்டது. நான் நாய்ப்பிரியன் என்பதனால்தான் நாய் பற்றிய அக்கதையை வாசித்தேன். நாயின் உடல்மொழி, மனப்போக்கு பற்றிய நுண்ணிய விவரணைகள் இவர் ஓர் எழுத்தாளர் என்ற எண்ணத்தை உருவாக்கின. தாய்லாந்தில் நாயின் நாக்கை சாப்பிட்டுவிட்டு ஆஸ்திரேலியா வரும் உரிமையாளரைக் கண்டு அவரது செல்லநாய் பதுங்கிக்கொள்ளும் கதைமுடிவில் சட்டென்று இன்னொரு உலகம் திறந்துகொண்டது.

இன்றுவரை என் நினைவில் நிற்கக்கூடிய, நான் பல மேடைகளில் உரையாடல்களில் குறிப்பிட்டுவரும் கதை அது. மண்மீதுள்ள உயிர்வலையில் கொல்வதும் தின்பதும் மிகமிக இயல்பானது என்ற எண்ணம் எல்லா அசைவ உணவுக்காரர்களைப்போலவே எனக் கும் உண்டு. ஆனால் அது ஒரு புறவய யதார்த்தமே என்றும் அதற்கப்பால் நாமறியாத அகவயமான ஓர் உண்மை உள்ளது என்றும் உயிர்க்குலங்கள் பிரியத்தின் பரிமாற்றமென்னும் வலையாலும் கட்டப்பட்டுள்ளன என்றும் கொலை எந்நிலையிலானாலும் அந்தவலையை அறுக்கிறது என்றும் உணர்ந்தேன் என்று தோராயமாகச் சொல்லிவிடலாம். நாய்க்கும் எனக்குமான உறவு ஆடுக்கும் எனக்குமான உறவைவிட அந்தரங்கமானதாக இருப்பது நான் ஒருபோதும் அதை தின்னப்போவதில்லை என்பதனால்தானா என நினைத்து நுண்ணிய அதிர்ச்சி ஒன்றை அடைந்தேன். இன்றுவரை திறந்துகொண்டே இருக்கும் புனைகதை அது.

அக்கதையை வாசித்தபின் ஆசி கந்தராசா அவர்களை நானே தொடர்புகொண்டேன். அக்கதை பற்றி நானும் நண்பர்களும் நடத்தி வந்த சொல்புதிது இதழில் மதிப்பு ரையும் எழுதினேன். அப்போது அவர் யாரென்றே தெரியாது. ஆஸ்திரேலியாவில் ஒரு பல்கலை கழகத்தில் பேரா சிரியராகப் பணியாற்றுகிறார், உயிரியல் நிபுணர் என்று பிற்பாடுதான் அறிந்தேன். மேலும் ஐந்தாறு ஆண்டுகள் கழித்து என் ஆஸ்திரேலியப் பயணத்தில் நான் அவரை நேரில் கண்டேன். அவருடன் சிலநாட்கள் தங்கவும் பயணம் செய்யவும் வாய்த்தது

அப்போது அவர் சொன்ன ஒரு வரி மீண்டும் என் பிரக்ஞையை அதிரச்செய்தது. ‘உயிரியல் விதிகளின்படி எல்லா உயிர்க் கரிமப்பொருட்களும் உணவே’ அதை உண வல்லாமலாக்கும் அம்சம் என்ன, உணவாக ஆக்கும் அம்சம் என்ன என்பதே வினா. ஆப்ரிக்காவில் பச்சை மாட்டிறைச்சி உண் பதைப்பற்றி அவர் எழுதியிருந்த வரிகளை விவாதித்தபோது அதைச் சொன்னார்.

ஒருவேளை அறிவியலில் சாதாரணமாக கூறப்படும் ஒரு விதியாக அது இருக்கலாம். ஆனால் எனக்கு அது விரிந்தபடியே சென்றது. இந்த உலகத்தின் மாபெரும் உயிர்ப்பெருவெளி மொத்தமாகவே உணவுதான். அந்தக்குவியலில் கிடந்து பட்டினியால் சாகிறான் மனிதன். உணவல்ல பிரச்சினை, உணவை அடையும் அறிவை அடையவில்லை என்பதுதான்.

[ 3 ]

ஆசி கந்தராசா அவரது கல்விப்பணிகள் நடுவே மிகமிகக் குறைவாகவே எழுதி யிருக்கிறார். அவரது நூல்கள் ஒரு வாசகனாக எனக்கு வெவ்வேறு நிலங்களில் வெவ்வேறு அறிவுப்புலங்களில் உலவி வரும் அனுபவத்தை அளிக்கின்றன. ஆகவே என்றும் என்பிரியத்துக்குரிய எழுத்தாளர் அவர். சமீபத்தில் ஆப்ரிக்கா சென்றிறங்கியபோது அவரும் அ.முத்துலிங்கமும் எழுதிய ஆப்ரிக்கப் பயண அனுபவக்குறிப்புகளைத்தான் நினைவு கூர்ந்தபடி இருந்தேன். குறிப்பாக விண்டுக்கின் சந்தையில் வாட்டிய மாட்டிறைச்சி உண்ணும்போது.

அறிவியலாளரின் எழுத்து என்பதனால் ஆசி கந்தராசா எழுத்து தொடர்ச்சியாக தகவல்களை அளித்துக்கொண்டே செல்லும் தன்மை கொண்டிருக்கிறது. இந்நூலின் முதல் கட்டுரையான கறுத்தகொழும்பான் ஓர் உதார ணம். கறுத்தகொழும்பான் என்ற ஈழத்து மாம்பழ வகையை ஆஸ்திரேலியாவில் கொண்டு வந்து பரப்ப முயலும் உடையார் மாமாவின் முயற்சியின் பதிவாக மட்டுமே இந்தக் கட்டுரை தன்னை முன்வைக்கிறது. அந்த மாமரத்தின் இயல்புகள், மாம்பழ விவசாயம் பற்றிய தகவல்கள், டர்பனில் நிகழும் சர்வதேச மாம்பழ மாநாடு, அன்னியத்தாவரங்களுக்கு ஆஸ்திரேலியா வைத்துள்ள கட்டுப்பாடுகள், ஆஸ்திரேலியாவின் வணிகச்சூழல் கனி களை மதிப்பிடும் முறை என இது ஒரு தகவல்தொகுதி.

ஆனால் கட்டுரை முடியும்போது இந்தக்கட்டுரை மாம்பழத்தைப்பற்றியதே அல்ல என்ற விரிவு உருவாகிறது. பாராச்சூட் விரிந்துகொள்ளும் தருணம்போல. இது ருசியின் கதை. யாழ்ப்பாணத்து ருசி. யாழ்ப்பாணத்தின் பாரம்பரியத்தின் இனிமை. அந்தக்கோணத்தில் நம் பார்வை திரும்பியதுமே ஒவ்வொரு புள்ளியாக பெரிதாகத் தொடங்குகிறது. பார்க்க அழகில்லாத கனி அது. பளபளப்பற்றது, உருண்டுதிரளாதது, ஆகவே உடனடிச் சந்தை மதிப்பற்றது.

அதை ஆஸ்திரேலிய மண்ணுக்குக் கொண்டுவரத்தான் எவ்வளவு தடைகள். கறுத்த கொழும்பான் என்ற அதன் பெயரே தடை. அது நிற ஒதுக்குதலுக்கு உள்ளாகிறது. ஆனால் தன் சுவையால் எப்படியோ அது வந்து சேர்ந்துவிடும், வேரூன்றிவிடும். அந்தப்புள்ளியில் அந்தப் பெயர் மீது என் கவனம் நிலைத்தது- கறுத்த கொழும்பான்! இவர் எதைப்பற்றிப்பேசுகிறார் என மனம் வியந்தது!

மிகத்தேர்ந்த புனைகதையாளனின் திறனுடன் இந்த இரண்டாவது தளத்தை ஆசி கந்தராசா இக்கட்டுரைக்குள் இணைத் திருக்கிறார். கட்டுரை மாம்பழத்தைப்பற்றி மட்டும்தான். மாம்பழ மாநாட்டுக்காகவே டர்பனுக்குச் செல்கிறார்கள் உடையார் மாமாவும் கதைசொல்லியும். அங்கே மாம்பழ மாநாட்டினூடாக ஆப்ரிக்காவின் குடியேறிகளின் வாழ்க்கையின் கோட்டுச்சித்திரம் வருகிறது. தங்கள் பண்பாட்டை அவர்கள் இழந்துள்ள விதம் கச்சிதமாகச் சொல்லப்பட்டபின்பு கட்டுரை மீண்டும் கறுத்தகொழும்பானுக்கு மீள்கிறது.

இந்ததொகுதியில் உள்ள எல்லாக் கட்டுரைகளிலும் இந்த இரண்டாவது தளம் அடிச்சரடாக ஓடிக்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் ‘தலவிருட்ச’மான பனை யைப்பற்றிப் பேசும் கட்டுரை ஈச்சமரம் தென்னைமரம் என்று நினைவுகளின் ஓட்டம்போல பல புள்ளிகளைத் தொட்டுச் செல்கிறது. யாழ்ப்பாணம் முதல் அரேபியா வரை நீள்கிறது. இந்த மரங்களின் ஆண்பெண் பேதம்பற்றிய விவரணை அதிகபக்கங்களை எடுத்துக்கொள்வது ஏன் என்பதை அரேபியப் பாலையில் அடிமைகளொப்ப பணியாற்றும் இந்தியத் தொழிலாளர்களைப் பற்றிய குறிப்பு விளக்குகிறது. இந்த இணைப்பை உருவாக்கிக்கொள்ளும் வாசகர்களுக்கு மிகச் சிறந்த புனைகதையளவுக்கே மனஎழுச்சியை, வாழ்க்கைநோக்கை அளிக்கக்கூடியவை இக் கட்டுரைகள்.

எனக்கு இவற்றின் கட்டமைப்பில் உள்ள புதுமைதான் முதன்மையாக மனம் கவர்கிறது. உலகமயமாதல் பற்றிய கட் டுரை சாதாரணமாக ‘கொட்டை உள்ள புளியாகப்பார்த்து வாங்கி வா என்றாள் அம்மா’ என ஆரம்பிக்கிறது. பின் மிக இயல்பாக ‘புளியங்கொட்டையைப் பார்க்கும்போது பீட்டர் நினைவுக்கு வரு கிறான் என்று தாவுகிறது. பீட்டரின் ஊர் உகாண்டா. இந்த அழகிய கதைகூறல் குறை ‘உலகக்கிராம’த்தில் இவை நிகழ்கின்றன என்ற பரவசத்தை அளிக்கின்றது.

சமீபகாலமாகவே ஆபிரிக்க நிலம் எனக்கு பெரிய ஈர்ப்பை உருவாக்கியபடியே உள்ளது. ஆசி கந்தராசாவின் எதியோப்பியா பற்றிய கட்டுரையை நான் முன்னதாகவே தட்டச்சுப்பிரதியாக வாசித்திருந்தேன். வீடு என்பது மகிழ்ச்சியாக இருப்பதற்கு மட்டுமே, ஆகவே வீட்டுக்குள் நுழைந்தபின் எந்தக்கவலையையும் வைத்திருப்பதில்லை என்ற அபேராவின் வரி அன்றும் மனதை அதிரச்செய்தது. இப்போது வாசிக்கையிலும் உள்ளத்தை மலரச்செய்கிறது.

[ 4 ]

தன்னைப்பற்றி உண்மையை எழுதுபவன் உலகைப்பற்றிய உண்மையை எழுதுகிறான். உலகை சரியாக எழுதுபவன் தன்னைப்பற்றி எழுதிவிடுகிறான் என ஒரு கூற்று உண்டு. ஆப்ரிக்கா அரேபியா ஆஸ்திரேலியா என உலவும் இந்த பெரும்பயணியின் கட்டுரைகள் யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம் என்றே ஒலிக்கும் விந்தையை இப்படித்தான்புரிந்துகொள்கிறேன்.

❍ ❍ ❍




**எ**ந்தையும் தாயும் இருந்து குலாவிய எங்களின் தாயக பூமி வலி வடக்கு.

வலிவடக்கு என்கின்ற போதே எங்கள் நிலத்தில் நாங்கள் கண்ட வாழ்வின் பெருமையில் நெஞ்சம் நிமிர்கின்றது.

நிலவளம் கடல் வளம், இவற்றினை வசப்படுத்தும் ஆற்றல்மிக்க மனிதவளம். கடின உழைப்பே எங்கள் முந்தையர் எமக்குச் சொல்லித் தந்த பாடமாகும்.

கல்லைப் பிளந்து நீரெடுத்து காசுப் பயிர் வளர்த்தோம், கடலைத் துளைத்து அஞ்சாது மீன்வளம் சேர்த்தோம். குடாநாட்டின் பொருளாதாரம் விவசாயத்தையும் மீன்பிடியையும் ஆதாரமாகக் கொண்டது. இந்தப் பொருளாதார கட்டமைப்பில் கணிசமான அளவு பங்களிப்பினை வலிகாமம் வடக்குப் பகுதி வழங்கியுள்ளது. விவசாயத்தைப் பொறுத்த வரையில் வளமான செம்மண், செழிப்பான காசுப்பயிர்களின் பெருக்கத்திற்கு துணையாய் அமைந்தது. மீன்பிடியைப் பொறுத்தவரையில் கண்டமேடுகளைக் கொண்ட குடாநாட்டின் கரையோரம் குடா நாட்டின் பொருளாதாரத்திற்கு மட்டுமன்றி இலங்கையின் பொருள் வளத்திற்கும் பெருந் துணையாக இருந்தது. 1970களில் நாட்டின் மீன் உற்பத்தியில் 60% பங்களித்தது யாழ்ப்பாணம்.

விவசாயம் மீன்பிடி போலவே ஏனைய தொழில் வளத்திலும் சிறந்து விளங்கியது இந்தப் பிரதேசம். தமிழர் பிரதேசத்தின் ஒரே பெரும் தொழிற்சாலையான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை அமைந்ததும் வலிவடக்கில்தான். சீமெந்து தொழிற்சாலையின் சங்கொலியுடன்தான் இந்த பிரதேசத்து மக்களின் அன்றாட வாழ்வின் பொழுதுகள் விடிந்தன. இந்த தொழிற்சாலைக்கும் புறம்பாக அலுமினியத் தொழிற்சாலை, வாளித் தொழிற்சாலை, மட்பாண்ட தொழிற்சாலைகள் நெசவுத் தொழிற்சாலைகள் என நீளும் பல்வேறு சுயதொழில் முயற்சிகளினாலும், வளம் பெற்றது வலி வடக்கு.

வலிவடக்கு முழுமையும் கல்வி நிறுவனங்கள் பலவும் நிறைந்து அறிவியல் வளத்தையும் காத்தமை குறிப்பிடத்தக்கது. சுதேச பண்பாட்டின் எழுச்சிக்கு அடிப்படையான தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி தொடக்கம் இந்தப் பிரதேசத்தின் கிராமங்கள் தோறும் எண்ணற்ற கல்விச் சாலைகள் அமைந்து விளங்கின.

இது போலவே மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்கவென பிரதேச வைத்திய சாலை, இருதய வைத்திய சாலை, புற்றுநோய் வைத்தியசாலை என வசதிகள் நிறைந்திருந்தன. கூடவே சமூக உணர்திறன்மிக்க கூட்டுறவு இயக்கத்தின் தொடக்க மையமாகவும் இலங்கை முழுவதற்குமான முன்னோடி கூட்டுறவு கட்ட மைப்புக்களை கண்ட பிரதேசமாகவும் வலி வடக்கு விளங்கியது.

வலிவடக்கின் கிராமங்கள்தோறும் அமைந்த ஆலயங்களின் அருள் வீச்சினால் இந்தப்பிரதேச மக்களின் ஆன்மீகம் செம்மைப்பட்டது. கிராமத்துக் கோயில்களில் இருந்து ஈழத்து வரலாற்று பெருமைகளை தம்மகத்திற்கொண்ட பெருங்கோயில்கள்வரை இப்பிரதேசத்து மக்களின் வாழ்வியலோடு இவை இரண்டறக் கலந்திருந்தன. கீரிமலை நகுலேஸ்வரர், மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயில் போன்ற வரலாற்று புகழ்பெற்ற கோயில்களோடு கிராமங்கள் தோறும் வாழ்கின்ற மக்களின் வரலாற்று பெருமிதங்களாக ஊர்கள் தோறும் அமையப் பெற்ற வீரபத்திரர் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள் என நீளும் நூற்றுக்கணக்கான வழிபாட்டிடங்கள்.

ஆலயங்களை மையமாகக் கொண்டு உயிர்ப்படைந்த தமிழர் பண்பாட்டின் கலைகள் யாவற்றினதும் ஊற்றுக்கண்களாகவும் வளர் கலை நியமங்களாவும் வலிவடக்கின் கிராமங்கள் விளங்கின. பண்ணிசை, நாதஸ்வரம், தவில், உடுக்கை, கரகாட்டம், காவடியாட்டம், காத்தவ ராயன் கூத்து, வசந்தன் நாடகம், என நீளும் பாரம்பரிய கலைகளின் ஆளுமைகள் பலரை நம் தேசத்துக்கு ஆக்கியது வலிவடக்கு. பின்நாட்களில் அறிமுகமான இசைநாடக மரபு தொடக்கம் நவீன நாடக விகசிப்புகள் வரை வலி வடக்கின் சாதனைகள் உலகறிந்தவை. இந்த கலைநிறை அனுபவங்களுக்கு ஊடாக வலி வடக்கு வாழ் மக்களின் மனங்களும் பொழுதுகளும் அழகாகக்கப்பட்டன. இவர்களது கலை அளிக்கைகளினால் சூழவுள்ள கிராமங்களினதும் ஏனைய பிரதேசங்களினதும் கலை அழகும் செழுமை கண்டது.

சமூக வாழ்வின் அனைத்து முகங்களிலும் வலி வடக்கின் பிள்ளைகளின் முத்திரை பதிந்தது. கல்வி, அரசியல், கலை, பண்பாடு, ஆன்மீகம் என விரியும் அனைத்து புலங்களிலும் வலிவடக்கின் கிராமங்களின் அமைப்புக்களின் பங்கும் பணி களும் நிறையவே இருந்தன. மரபார்ந்த பண்பாட்டு வழியான அமைப்புக்களுடன் முற்போக்கான இளைஞர்களைக் கொண்ட அமைப்புக்களையும் இப்பிரதேசம் கொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்துணை பெருமை வாய்ந்த வலிகாமம் வடக்கின் வாரிசுகள் என்ற பெருமிதத்தில் 25 ஆண்டுக்கு முன் விழுந்த இடியின் அனர்த்தங்கள் இன்னமும் முடிந்த பாடில்லை. இடம்பெயர், புலம்பெயர், இருப்பின் அவலங்கள் தொலைந்த பாடில்லை. 'நலன்புரி நிலையங்கள்' என்ற நல்ல பெயர் வைக்கப்பட்ட அகதி முகாம்களுக்குள்ளும் நெருக்கடியாக ஒரு வீட்டிற்குள் பல குடும்பங்கள் என உறவினர் இல்லங்களுக்குள்ளும் இன்றுவரை அல்லல்படும் மக்களின் கதைகள் நெஞ்சைப் பிழிவன.

இருபது சதுர அடிகளுக்குள் அமைக் கப்பட்ட கூடுகள் / வீடுகள், ஆயிரக் கணக்கான மக்களுக்கென அமைந்த 10 - 15 மலசலகூடங்கள், 2 - 3 என மட்டுப் படுத்தப்பட்ட குழாய்க்கிணறுகள்: உலக சுற்றுப்புற சூழல் தொடர்பான பிரகடனங்கள் நியமங்கள் அனைத்தையும் கேள் விக் குறியாக்கும் நிலைமைகள். இந்த 'நலன்புரி' நிலையங்களின் புதிய தலைமுறை பிள்ளைகள் எதிர்கொள்ளும் உள - சமூக பிரச்சினைகள் மிக மிக கொடுமையானவை. ஏனைய ஒத்த வயதுப் பிள்ளைகளுடன் பழகும் சந்தர்ப்பங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் கேள்விகள் துயர் நிறைந்தவை. "உங்கட வீடு முகாமே உங்களுக்கென்று வீடில்லையோ" என்றவாறான நிலைமைகள் தரும் தாழ்வு மனப்பாங்கிலிருந்து மீட்பதற்கு மார்க்கமறியாத நிலை. மயிலிட்டி போன்ற பிர தேசங்களில் ஆழ்கடலில் தொழில் செய்து செழிப்போடு வாழ்ந்த பல மீனவக்குடும்பங்கள் இன்று கூலித்தொழிலாளர்களாய் இம்முகாம் களுக்குள் முடங்கி கிடக்கையிலே அவர்கள் பிள்ளைகளின் கல்வி முடக்கத்திற்கும் அது காலாகின்றமை பல குடும்பங்களின் துயர இருப்பாகும். இந்த நலன்புரி முகாம்களில் உள்ள மூத்த தலைமுறையினரின் ஒரே விருப்பமும் வேண்டுதலும் "எங்களை எங்கட வீட்டில இருக்க வழிசெய்ய மாட்டீர்களா" கண்ணீர் மல்க சபாபதிப்பிள்ளை முகாம் ஐயா கேட்கிறார். சாகமுந்தி ஒருக்கா எங்கள் ஊரைப்பார்க்க வழிசெய்ய மாட்டீங்களா? அதே முகாமில் இருந்து ஒரு ஆச்சியின் குரல்.

நாளை என்ற நம்பிக்கையோடு காத்திருந்த இம்மக்களின் ஆத்ம நம்பிக்கை மீது இடிமேல் இடியாக விழுகின்ற அண்மைய செய்திகள்.

"நிலத்திற்கு பதிலாக நிலம்"

"நிலத்திற்கு பதிலாக நஷ்டஈடு" எனும் நிவாரண வாய்ப்பாடுகள் தாய்நிலத்தை எங்கள் பண்பாட்டின் பூமியை வேண்டி நிற்கும் உயிர் வலிக்கு எப்படி ஈடாக முடியும்...

"எங்கள் ஊர் அலவத்தை வீரபத்திரரை பிரிந்த போதும் அவர் வீதியில் புழுதி கிழம்ப நாங்கள் ஆடிய வீரபத்திரர் வசந்தன் லயத்தினை எங்கள் உயிர்த்துடிப்பாய் இன்னமும் காத்திருக்கின்றோம். மீளவும் எங்கள் நிலத்தில் அந்த வாழ்வை மீள் காணும் பெரும் நம்பிக்கையோடு" என ஏங்கும் எங்கள் ஆத்ம குரலுக்கான ஒரே பதில் :


**வீரபத்திரர் கோயில் வீதி**
**செம்பாட்டு மணற் பரப்பில்**
**நாதஸ்வரக் கச்சேரி**
**மேளச்சமா லயங்களிலே**
**நாம் கலந்த நாட்கள் உடன் வேண்டும்**

**ஊமைக்குழல் ஊதி.. ஊதி..**
**ஐயோ!**
**நெஞ்சு வெடிக்கும் இந்த அவலம் முடிக்க**
**ஒரே ஸ்ருதியில் ஆயிரமாய் நாதஸ்வரங்களில்**
**அடானா அலைகளே எழுக**
**பல்லாயிரமாய் தவில்களே முழங்குக**
**நம் பிறவிப் பயன் மீள வேண்டும்.**

❍ ❍ ❍

**நூல் : ஈழத்து முச்சந்தி இலக்கியம்**
**ஆசிரியர்: பேராசிரியர் செ. யோகராசா**
**வெளியீடு மகுடம் பப்பிளிகேசன்**
**விலை : ரூபா 200/-**

ஈழத்து முச்சந்தி இலக்கியம் என்ற இந்நூல் இத்துறை சார்ந்து ஈழத்தில் வெளிவருகின்ற முதல் நூலாகும். 'ஓரளவு வாய் மொழிப்பாடல்கள்', அல்லது 'பாதி வாய் மொழிப்பாடல்கள்; பற்றிய அறிமுகம், பாடு பொருள், வரலாற்று முக்கியத்துவம், ஆகியவற்றை மூன்று இயல் களாக வகுத்து ஆசிரியர் நூலினை ஆக்கித்தந்துள்ளார். இந்த மரபு மட்டக்களப்பு பிர தேசத்திலும் மலைய கத்திலும் இன்றுவரை உயிர்ப்புடன் இருந்து வருகிறது. வெகு ஜன இலக்கியமான இத்துறை சார்ந்த நூலினை வெளிக் கொணர்ந்த ஆசிரியர் பாராட்டுக்குரியவராகிறார்.





# புரிதல்

- அஜூரன்

சிறுகதை

அம்மா வீட்டில் இல்லாத அதிகாலை வெங்கலக் கடையினுள் யானை புகுந்த மாதிரித்தான் இருக்கும் வசந்தனுக்கு. சாப்பாட்டைக் கட்டிக் கொடுத்து அவனை வேலைக்கு அவள் அனுப்பும் வரை அந்த வீடு இரண்டுபடும். அவன் போகும்வரை அவள் படும்பாடு போதும்போதும் என்றாகும். அவன் போனதும் ஒரு சுடுகாட்டு அமைதி நிலவும் அந்த வீட்டில்...

இவனைக் கட்டிக்கப் போகிறவள் தாய் வீட்டில் இருந்து எதைக் கொண்டு வந்தாலும் அவள் இருந்த வீட்டில் ஒரு அறையை எப்போதும் அவளுக்காக வைத்திருக்கச் சொல்லி விட்டே வரவேண்டும். இவனோட கோவித்துக் கொண்டு தாய் வீட்டிற்கு அடிக்கடி போய் தங்கி வரத்தான்.

நான் சாப்பாட்டுக்குள்ள கையை வைத்துக் கொண்டு எட்டிப் பார்க்கிறேன் கௌரி பிள்ளையையும் தூக்கிக் கொண்டு பெட்டியைக் கையில் எடுத்துக் கொள்கின்றாள். திரும்பி என்னைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையில்

நான் ஓடிப்போய்ப் பிள்ளையைப் பறித்து “நீ போகாத கௌரி என்னை மன்னித்துக் கொள்” என்று கேட்பன் என்று. நானா....அப்படிச் சொல்வது.

என்ர வசந்தியக்காதான் அம்மா இல்லாதபோது எனக்குச் சாப்பாடு போட்டுத் தருவார். சாப்பாடு தந்த கையோடு தண்ணியும் எடுத்துத் தருவார்

அவள் தான் “உனக்கு வாற மனைவி உன்னைக் கட்டிக் கொண்டு என்ன பாடு படப் போகிறாளோ” என்றவள்.

நான் அம்மா பிள்ளை எனக்கு என்ர அம்மா மாதிரி பொம்பிளைதான் நான் கேட்டன். அக்காவும் அம்மாவும் தான் கௌரியைப் போய்ப் பார்த்தவர்கள்.

என்ர அக்காவக் கட்டின அத்தானும் தன்ர அம்மாவைப் போல பொம்பிளை பார்த்தவராம். அக்காவைக் கட்டின நாலு மாதத்திலேயே அத்தான் அக்காவைப் பற்றிப் புழுகின புழுகு என்றால் ஊரில உயர் தரத்தில் 4 A எடுத்த மாதிரி அல்லவா அத்தான் சேட்டிபிக்கேற் கொடுத்தார்.

அத்தானின் சொந்தக்கார நண்பர் மூலம்தான் கௌரியை எனக்கு கலியாணம் பொருத்தியவர்கள்.

இப்ப நான் என்ன கேட்டுப் போட்டன். சாப்பாடு முடிய “ஏன் எனக்குத் தண்ணிய கிளாசில எடுத்து வைக்கவில்லை” எண்டுதானே.



“போய் எடுத்துக் குடியுங்கோ” எண்டு எப்படிச் சொல்லலாம்.



கல்யாணம் செய்து வந்து நாலு மாதம் எதோ நான் அரசன் மாதிரியும் அவா சேவகி மாதிரியும் பணிவிடை செய்தவள், பிள்ளை ஒன்று பிறந்தவுடன என்னை ஒதுக்கிப் போட்டு பிள்ளையைக் கவனிப்பது என்ன முறையில நியாயம்.

இப்ப பிள்ளை வேண்டாம் என்று எத்தனை முறை டாக்டரிட்டைக் கொண்டுபோய் மருந்து எடுத்துக் கொடுக்க எல்லாத்தையும் தலகாணிக்குக் கீழ் வைத்துப் போட்டு நல்ல ஊமை நாடகம் நடாத்திப் போட்டாள்.



"ஒரு இரண்டு வருடம் பிள்ளை பிறக்கிறதைத் தள்ளி வைப்பம்" என்று சொன்னபோது "ஓம் ஓம்" என்று நரிக்கள்ளி எப்படி என்னை நம்ப வைத்தவள்.

அது மட்டுமே பிள்ளை தங்கின நாள் முழுவதும் "அம்மா வீடு அம்மா வீடு" என்று அங்கேயே தங்கி தன்ர இஸ்ரப்படி நடந்து கொண்டவள்தானே. எனக்குக் கோபம் வரும்தானே.

தொலைபேசி மணி அடிக்குது இது வெளிநாட்டு அழைப்புத்தான். அதுவும் அக்கா வசந்தி தான் எடுக்கிறா.

"கலோ யார்?"

"நான் கௌரி, பிள்ளையின்ர பால் போத்தலை விட்டுப் போட்டு வந்திட்டன். கொண்டு வந்து தாங்கோ"

"நான் பால் போத்தல் கொண்டு போய்க் கொடுக்கிறதா?"

"போன மாதிரி வந்து எடுத்துக் கொண்டு போ" என்று சொல்ல முந்தியே போனை வைத்துப் போட்டாள்.

பிள்ளையைக் காட்டி எல்லா வேலையையும் என்னை வைத்து செய்வித்துப் போடுவாள்.

"'வேலைக் கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு' என்று சும்மாவா சொன்னவர்கள். என்னோட கலியாணம் கட்டின மற்றப் பெடியன்கள் எப்படி தங்கட மனைவியோட இருக்கிறாங்க உடனே பிள்ளையைப் பெறாமால் சந்தோசமாகத்தானே இருக்கிறாங்க.

அவன் திருநாவு கலியாணம் கட்டி, வீட்டுக்கு ஒரு கட்டிலோ கதிரையோ வேண்டிப் போடாம வெறும் காட்போட் மட்டையில தான் படுத்துறங்கிக் குடும்பம் நடத்துறான்.

யாரும் அவன்ர வீட்டில வரக் கூடாது. தங்களை எந்த இடைஞ்சலும் செய்யாமல் இருக்க இது ஒரு தந்திரம்.

தொலைபேசி அடிப்பது கூட காதில் விழாமல் இருந்து யோசிக்கிறன்.

அவள் தான் இந்த நேரம் எடுக்கிறாள்.

"என்ன?" என்று கடுமையான குரலில் கேட்கிறேன்.

அக்கா ... "கனடாவில் இப்ப சரியான சாமமாக இருக்குமே"

"வசந்தன் என்ன நடக்குது."

"நீ எப்பவோ சொன்னது இப்ப நடக்குது"

"அக்கா நீ தீர்க்கதரிசியா? அல்லது நீ தீர்க்கதர்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்படியானவளைக் கட்டித் தந்தியா சொல்லு."

"நீ ஒரு படிச்ச முட்டாள் வையடா போன"

அன்று போனை வைச்சவள் தான், ஒரு வருடமாய்ப் பேச்சு இல்லாமப் போச்சு.

கௌரி ஒரு மாதமா பிள்ளை இருக்கும் போதே போனவள் பிள்ளையின் பிறந்த நாளும் நெருங்கி வரும் போதுதான் தபாலில் இரண்டு கடிதம் இருந்தது. ஒன்று பிள்ளையின் பிறந்தநாள் கொண்டாடும் திகதியும் மண்டப விலாசமும், மற்றது விவாகரத்து விண்ணப்பமும்.


இது முழுக்க முழுக்க என்னை பயமுறுத்தி தன் வழிக்கு என்னை திசை திருப்பிற நாடகம்.

நான் விட்டுக் கொடுக்கக் கூடாது. கௌரி விட்டுப் போன பிள்ளையின் பால் போத்தல் இன்னும் அப்படியே மேசையில் இருக்கிறது.

அந்தப் போத்தலை கையில் எடுத்து வைத்துக் கொண்டு பார்க்கிறேன். இன்று நடந்தது போல் இருக்கிறது.

**நூல் : பகிர்ந்துண்ணல்**
**(சிறுவர் இலக்கியம்)**
**ஆசிரியர்: சமரபாகு சீனா உதயகுமார்**
**பதிப்பு : அபிஷேக் பதிப்பகம், நவிண்டில்**

*சிறுவர்களது மன நிலைக்கு ஏற்ப இலகு தமிழில் எழுதப்பட்ட 27 கதைகள் அடங்கிய தொகுப்பு இது. இக்கதைகள் கந்தையா வாத்தியாரப்பு என்பவரால் சொல்லப்படும் சுவாரஸ்யமான கதைகளாக உள்ளன. சாதுர்யக் கதைகள், ஆர்வத்தைத் தூண்டும் கதைகள், தத்துவக்கதைகள், அறநெறிக்கதைகள், சூழலியல் கதைகள், போதனைக் கதைகள், உளவியல் கதைகள், விஞ்ஞானக் கதைகள், முயற்சியைத் தூண்டும் கதைகள், என வகைப்படுத்தக்கூடிய வகையில் மிகவும் உயர்ந்த தரத்தில் சிறுவர்களுக்குப் பயன்பாடுள்ள கதைகளாக இக்கதைகள் அமைந்துள்ளன. சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டவல்ல நூலாகவும் இந்நூல் திகழ்கிறது.*




அம்மா எத்தனையோ முறை வீட்டில் சண்டை பிடித்திருக்கிறா. என்னையும் அக்கா வையும் அடித்திருக்கிறா. நான் செய்த தவறுகளுக்கு எல்லாம் அம்மா தடியால் அடித்து காலே புண்ணாகி இருக்கிறது.

நான் அவர்களை வெறுக்கவில்லை. சமாளித்தேனே.

கௌரி என்னை நம்பி வந்தவள் அவளை ஏன் வெறுத்தேன்.

வாழ்க்கையின் பரிமாணங்கள் புரியவில் லையா? அல்லது போலி வாழ்க்கையின் சுவடுகளைத் தேடி அலைந்து போட்டோமா?

அவள் போனதன் பின், நானே சமைச்சு, நானே போட்டுச் சாப்பிட்டு, நானே தண்ணி எடுத்து குடிக்கிறனே....

"சிக், இந்த மனம் ஒரு உண்மையான குரங்குதான் ஏன் தாவுது ஏன் குதிக்குது எண்டு தெரியாம இருக்கு...'

வீட்டுக்குள் இருக்க முடியாமல் அருகில் உள்ள பூங்கா ஒன்றிற்குப் போய் இருகிறேன். அங்கு உள்ள குளத்தில் உள்ள பறவைகள் நடுவில் கால் ஏலாமல் இருக்கும் பறவைக்கு மற்றைய பறவைகள் உணவு கொண்டு போய் தமது சொண்டால் உணவு ஊட்டுவதையும் பார்க்கிறன்.

நான் பெத்த பிள்ளையின் முகம் ஞாபகத்துக்கு வர மறுக்குது.

நினைவோடு திரும்பிப் பார்க்கிறன். காந்தன் போறான்...

"ஹலோ காந்தன், காந்தன்" அருகில் வருகிறான்.. லதனி அவனைக் கூப்பிடு கிறாள்.

அவன் என்னைக் காணாதது போல் போகிறான்.

காந்தனுக்கும் அவளுக்கும் எவ்வளவு உதவி செய்திருப்பன்.

நான் ஓடிப்போய் காந்தனைப் பின் தொடர்கிறேன்.

"வசந்தன் நில்லுங்கோ.. எங்களை நிம்மதியாக இருக்க விடுங்கோ"

நான் காந்தனின் கையைப் பிடிக்கிறன். என்ர கையை தட்டி விட்டுப் போட்டு லதனி சொல்லிக் கொண்டு விறு விறு என்று போறாள்

'எல்லாம் போச்சு சுற்றி நின்ற நண்பர்கள் இல்லை'. சொந்தங்கள் இல்லை

சகோதரி, அம்மா பேசுவதில்லை. பெற்ற

பிள்ளைக்கு என்ன பெயர் என்று கூடத் தெரியாது. என்ன வாழ்க்கையடா?'

மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. குளிக்கப் போகலாம் என்று நினைத்துக் கொண்டு,

கௌரி சில புத்தகங்களை அடுக்கி வைத்திருந்தாள்.

அதில் ஒன்றை எடுத்து வாசிக்கின்றேன். நான் வாசித்த எந்த எழுத்தும் எந்தச் சொல்லும் பொருள் விளங்கவில்லை.

இடையில் கண் கலங்குகின்றது. ஒரு வார்த்தையை திரும்பத் திரும்ப வாசிக்கின்றேன்.

'கூர்மையான ஆயுத்தை விடவும் பிடிவாதம் கொடூரமானது. எல்லா அழிவையும் தரும்.'

இந்த வாசகத்தில் இருந்த பொருள் நெஞ்சில குத்து குத்தென்று குத்துது. மனதைக் குடையுது

'சீசி என்ன பிடிவாதம்'

புயல் அடித்து ஓய்ந்த தேசம் என் கண்ணில வந்து மறையுது.....

ஞானம் பெற்றவானாக எழும்பி குளிக்கப் போக முற்பட்டனான். எல்லாவற்றையும் துப்பரவு செய்கிறேன்.

கௌரியின் அறையில் இருந்த குப்பை தூசி எல்லாம் தட்டி பிள்ளைக்கு ஒரு அறையில் விளையாட்டு சாமான் வேண்டி அடுக்கிறேன்.

குளித்துவிட்டு மாமி வீட்ட போய் காரை நிறுத்தி விட்டு கதவு மணியை அழுத்தினேன். கௌரி வந்து கதவைத் திறந்தாள்.

அக்கா பிள்ளையை தூக்கி வைத்துக் கொண்டு முன்னால வந்து என்னைப் பார்க்கிறாள். கனடாவில் இருந்த அக்காவும் கௌரியோடு வந்து நிற்கிறா.

என் வாய் அகல விரிகிறது .....

அக்கா என்னைக் கண்டதும் பிள்ளையை கௌரியின் கையில் கொடுத்துவிட்டு என்னைக் காணாதது போல் உள்ள போகிறாள்.

'என்ர ஆசை அக்காவா... இப்படிப் போறது.'

ஓடிப்போய் காலில விழலாம் என்று நினைக்கிறன்.

உள்ள இருந்து அத்தானும் மருமகள் மதுராவும் வருகிறார்கள். அத்தான் என்னிடம் வர எத்தனிக்க அக்கா அத்தானையும் மகளையும் இழுத்துக்கொண்டு உள்ளே போகிறார்.

இப்போது வாயும் கண்ணும் ஓ ..வென்று திறந்து கொள்கின்றது....

ஏதோ சத்தம் வர மாமி வெளியில் வந்து பார்க்கிறார். ஒரு நிமிடம் நாடகப் பாத்திரங்களாக போஸ் கொடுத்துக் கொண்டு நிற்கிறார்கள்

"வாங்க தம்பி, உள்ள வாங்க கௌரி பிள்ளையை அவரிட்டக் குடு"

மாமி சொல்லிக் கொண்டே கௌரியின் கையில் இருந்த பிள்ளையை வேண்டியபடி "சோதி லட்சுமி" என் குஞ்சு என்று கொஞ்சிக் கொண்டு என்னிடம் நீட்டினார்.

தெய்வ சந்நிதியில் குருக்களிடம் அரிச்சனை தட்டை வேண்டிய பக்தனாக நான்.

என் அம்மாவை அப்படியே உரித்துப் படைத்த மாதிரி மகள். அவளை அள்ளி கொஞ்சுறேன் .நிமிர்ந்து மாமியை பார்க்க மாமி தான் பிள்ளை பெயர் 'சோதிலட்சுமி'

என்று சொல்லுறா. அக்காவும் கௌரியும் கொடுப்புக்குள்ள சிரிக்கினம்.

"பெட்டிய எடுத்துக் கொண்டு வாரும் எங்கட வீட்டை போவம்."

நான் சொல்லி முடிக்க முன்னமே கௌரி தயாரா நின்றவள் மாதிரி காரில் போய் ஏறினாள். காருக்குள் மௌனம் சில நிமிடம் இருந்தது. மௌனத்தை கௌரி உடைத்து பிள்ளையின் பெயர் பிடித்திருக்கா என்றாள்

"சோதிலட்சுமி, என்ர அம்மாவின் சோதியையும் உங்கட அம்மாவின் லட்சுமி யையும் சேர்த்து வைத்திருக்கிறிர்கள்"

நான்கு நாளில் எல்லாமே மாறிப் போனேன்.. பிள்ளையின் பிறந்த நாள்விழாவில் கலந்துகொள்ள நண்பர்களும் உறவினர்களும் வந்துகொண்டிருக்கிறார்கள்.

பிறந்த நாள்விழா மிகச்சிறப்பாக நடந்துகொண்டிருக்க பரிசுகளைக் கொடுத்து போட்டோ எடுக்கிறார்கள்.. காந்தனும் லதனியும் என் கையைப்பிடித்து "சந்தோசமா இருங்கோ வாழ்த்துக்கள்..."

நான்கட்டிலிலே படுத்திருக்கிறேன்.. கௌரி பிறந்த நாள் பரிசுப்பொருட்களை பிரித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

கட்டிலில் இருந்து எழும்பிப்போய் கேற்றலில் தண்ணீர் சுடவைக்கிறேன்.. கௌரி வந்து தேநீர் போடுகிறாள்.

❍ ❍ ❍



**வெல்லிதாசன்** திருகோணமலை

வருட இறுதியென்றால் அரச திணைக் களங்கள் பல சுறுசுறுப்படைந்து விடுகின்றன. வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் அத்தனையையும் திருப்பி அனுப்பாமல் செலவு செய்துவிட வேண்டிய நிர்ப்பந்தம். நான் வேலை செய்த நீர்ப்பாசனத் திணைக்களமும் இதற்கு விதிவிலக்கல்ல.

இப்பொழுது காணப்படும் வசதிகள் அந்தக்காலத்தில் கிடையாது. கணினி வசதிகளைக் காணாத காலம் அது. ஆவணங்கள் அத்தனையும் கையால் எழுதி தயாரிக்கப்படுவதோடு, சில ஆவணங்கள் தட்டச்சுசெய்தும் தயாரிக்கப்பட்டன.

இதன் காரணமாக கால தாமதங்கள் தவிர்க்க முடியாதிருந்தன. சில நாட்களில் எமது காரியாலயத்தில் இரவிரவாக வேலை கள் நடப்பதுண்டு.

எது எப்படியாயினும் பம்பரம்போல் வேலை செய்தும் நாளாந்தம் எனது வேலைகளை முடித்து நான் காரியாலயத்தை விட்டு வெளியேற மாலை ஆறு மணிக்கு மேலாகிவிடும். பல நாட்கள் எனது சகதர்மினியின் சகஸ்ரநாம அர்ச்சனையுடனே வீட்டுக்குள் நான் நுழை வதுண்டு.

அன்றும் நேரத்தைப் பார்த்தேன். மாலை ஆறு முப்பதை கடிகாரம் காட்டியது. இனியும் தாமதிக்க முடியாதென மேசையில் குவிந்திருந்த ஆவணங்களை கும்ப லாக அள்ளி எடுத்து கபினெற்றுக்குள் போட்டுப் பூட்டி வைத்துவிட்டு புறப்பட ஆயத்தமானேன்.

“சேர் போக ஆயத்தமோ” என்றான் சிற் றூழியனான மணியம்.

“ஓம் மணியம், இனியும் நிக்கேலாது நாளைக்கு வந்து மிச்ச வேலையளைச் செய்வம்.” என்றேன் நான்.

“சேர் என்ரை ஓவர்ரைம் செக்பண்ணி போட்டியளோ இல்லை...”

“உன்ரை மாத்திரமில்லை ஆற்றை ஓவர்ரைமும் செக்பண்ண நேரம் கிடைக்கேல்ல. உந்த கொந்தறாத்துக்காரங்கள் நாளைக்கு வந்து கழுத்தைப் பிடிக்கப் போறாங்கள். வருடமும் முடிய இன்னும் ஒரு கிழமை தான் இருக்கு அதுக்கிடையிலை எல்லாப் பிசகையும் தீக்க வேனுமெண்டு வந்து நிற்கப்போறாங்கள். இஞ்சினியருக்கு என்ன விளங்கப் போகுது. அவங்கள் வந்தா என்னைச் சாட்டில் போட்டு கப்சிப்பெண்டு இருந்திடுவார். எக் கவுண்டன் வேறை முப்பத்தோராம் திகதிக் கிடையிலை எக் கவுண்ஸ் குளோஸ் பண்ண வேணுடுமெண்ட நச்சரிப்பு. ஓடிற் பாய் வாங்களாம். எனக்கு என்ன செய்யிறதெண்டு விளங்கேல்லை மணியம். வீட்டை போனால் மனிசி வேறை நச்சரிக்கப் போறாள்.”



நான்கதைத்தபடியேஎனது இலாச்சியைப் பூட்டிவிட்டு மீண்டுமொருமுறை இழுத்துப் பார்த்து கதிரையைவிட்டு எழுந்து நின்று மணியைப்பார்த்தேன். இரவு ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது நேரம்.

நான்தான் கந்தோரிலை கடைசியாக வெளிக்கிடும் பிரகிருதி. மற்றவர்கள் எந்தத் தலைபோற விசயமெண்டாலும் சரியா நாலேகாலுக்கு றிஸிஸ்ரரிலை அஞ்சேகால் போட்டிட்டுப் போய் விடுவாங்கள் ஓவரைம் எடுக்கிறதுக்கு ஏத்தமாதிரி.

எனக்கு சும்மா நேரத்தைப் போட்டு ஓவரைம் எடுக்கிறதிலை மனச்சாட்சிக்கு ஒத்து வராது. ஆனாலும் எனக்கான வேலைப்பழு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியதும் கிடையாது. நான் நேரத்துக்குப் போனாலும் நானே செய்ய வேண்டிய வேலைகளை நானே முடித்தாக வேண்டுமென்ற நிலை.

மணியமும் காரியாலயத் கதவைப் பூட்ட ஆயத்தப்படுத்த நானும் வெளியே புறப்பட்டு, கார்கராச்சில் பூட்டி வைக்கப்பட்ட எனது பழைய சையிக்கிளின் பூட்டைத் திறந்து அதை உருட்டியபடி வெளியே வந்தேன். நான் வெளியே வரும்வரை பிரகாசமாக எரிந்த மின்சார விளக்குகள் என்னைப் பயமுறுத்தும் நோக்கிலோ என்னவோ கண்களை மூடிக் கொண்டன. ஒரே கும்மிருட்டு எங்கும்.

மணியமும் கதவுகளைப் பூட்டி விட்டு வந்து என்னோடு இணைந்து கொண்டான். ஏழு மணியாகியும் எமது காரியாலய இரவுக் காவலாளியையும் இன்னும் காணவில்லை. அதனால்,

“ஐயா, இன்னும் வாச்சர் வரேல்லை. அவன் வந்தாத்தான் நான் உங்களோடை வர ஏலும்” எனச் சொல்லி விட்டு கேற்றடியிலேயே அவன் நின்று விட்டான். மணியத்தினதும் எனது வீடும் கிட்டக் கிட்டத்தான் அமைந்திருந்தன. திருகோணமலை நகரத்திலிருந்து மூன்று கட்டைக்கப்பால் அமைந்திருந்த அன்பு வழிப்புரம் புறநகர்ப்பகுதிதான் எமது வசிப்பிடம்.

சைக்கிளிலை லைற்றோ, ரோச்லைற்ரோ இல்லாமல் கௌவிய இருட்டுப் பாதையில் எனது சைக்கில் பயணத்தை ஆரம்பித்தேன். எதிரே வருகின்ற வாகனங்களின் வெளிச் சம் வேறு கண்களைக் கூசவைத்து தடுமாற வைத்தது. வருஷக்கணக்காக எண்ணை காணாத சைக்கில் செயின்வேறை மனிசியின் நச்சரிப்புப் போல மாறிமாறி கொறித்து என்னை ஆத்திரமூட்டிக் கொண்டிருந்தது.

ஏத்தங்களிலை சையிக்கிள் ஏறி விழும்போது சையிக்கிள் செயின் கழண்டு தொங்கி பயணத்தை நிறுத்தியது. இருட்டுக்குள் சையிக்கிளினை நிறுத்தி கைகளால் மெல்ல செயினை எடுத்து கொழுவி சுழட்டிப் பார்த்தேன். சில்லு சுற்ற மீண்டும் சைக்கிளில் ஏறி தட்டு தடுமாறி எனது பயணத்தைத் தொடர்ந்தேன்.

“சீயட்ட கிலோ தெக்காய், சீயட்ட கிலோ தெக்காய் லாபாய் லாபாய்” வீதியோரத்தில் யாரோ கத்திக்கோண்டிருப்பது எனது காதுக்கு கேட்டது. என்ன சீயட்ட கிலோ தெக்காய் என்னவாக இருக்கும்? எதற்கும் போய் பார்ப்போம் என நினைத்த நான் அப்படிக் கூறியவனின் அருகே போய் நின்றேன். எங்கும் இருட்டாக இருந்ததால் ஒரு மெழுகு திரியைக் கொளுத்தி வைத்துக் கொண்டு அதன் ஒளியில் வியாபாரம் நடை பெற்றுக்கொண்டிருந்தது.

சனக்கூட்டம் கும்பலாக நின்றதால் அவர்களை ஒருமாதிரி விலத்தி எட்டிப் பார்த்தேன். மின்னிய மெழுகுவர்த்தி ஒளியில் மீன்களின் கண்கள் பளிச்சிட்டன. “மாத்தையா எண்ட, நல்ல பாரைக்குட்டி மாத்தையோ, சீயட்ட கிலோ தெக்காய்” என்றபடி வியாபாரி மீனை விற்பதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தான். சனத்துக்குள்ளை ஒருவாறு முண்டியடித்து முன்னேபோய் நூறு ரூபாவைக் கொடுத்து இரண்டு கிலோ மீனை வாங்கிய பெருமையுடன் சைக்கிளின் கான்ரிலில் மீன் பையைக் கொளுவி மீண்டும் பயணத்தை ஆரம்பித்தேன்.

அப்பாடா என்ன மலிவு. பாரை மீன் சும்மாவே கிலோ முன்னூறு நானூறு போகும். சில வேளை இப்பிடித்தான் கரவலையளிலை மீன் ஆயிரக்கணக்கிலை பிடிபடும். அடுத்த நாளைக்கு வைக்கேலாத நிலையிலை மனிசன் மலிவா விக்கிறான். என்ரை அதிஷ்டமும் கூடத்தான்.

‘நானும் மனிசியும் மூன்று பிள்ளையளும் கொண்ட குடும்பதுக்கு இரண்டு கிலோ மீன் தாராளம். அதுவும் நாளைக்கு வியாழன்,

வெள்ளி மனிசி மச்சத்தை தொடமாட்டாடாள். விரதம், கோயிலெண்டதாலை நாளைக்கே எல்லா மீன்களையும் சமைக்க வேணும். பொரியல் குளம்பு எண்டு அசத்தலாம். ஒரு காப்போத்தலும் இருந்தால் மீன் பொரியலோட...’ எனக்குள் கற்பனை பண்ணிக்கொண்டே சையிக்கிளை உழக்கிக் கொண்டு ஒருவாறு வீடு வந்துசேர்ந்தேன்.

நான் நினைச்ச மாதிரி வெளிப்படலை சங்கிலி போட்டுப் பூட்டப்பட்டிருந்தது. அதைக் கண்ட எனக்கு கோபம் நூறு பாகையைத் தாண்டியது. களைச்சு விழுந்து வந்து நிற்கும் எனது கோபம் கட்டு மீறியதால் தகரப்படலையில் காலால் உதைந்தேன். எனது உதையை தாங்க முடியாது படலை தடாலென நிலத்தில் பலத்த சத்தத்துடன் விழுந்தது.

“என்னப்பா உங்களுக்கு என்ன வெறியே. கூப்பிட்டால் கதவை திறக்க மாட்டேனே”

“சும்மா கனக்கக் கதைக்காமல் இரு மனிசன் களைச்சு விழுந்து வாறன், நீ கதவைப் பூட்டி வைச்சிருக்கிறாய்”

“ஓ, நீங்கள் கந்தோரிலை இருக்கிற தேவடியாளவையோடை இழிச்சி கதைச்சிப் போட்டு வாங்கோ நான் உங்களுக்காக காத்துக்கிடக்கிறன். வேலையெண்டு போனா நேரத்தோடை வீட்டை வர வேணும். அடுத்த வீட்டு கந்தசாமி அண்ணனும் அரசாங்க உத்தியோகந்தானே பாக்கிறார். பின்னேரம் நாலரை மணிக்கு மனிசன் வீட்டை நிக்கும். உங்களுக்கு மட்டும் ஒரு கண்டறியாத வேலை. காலையிலை சாப்பாடு கட்டிக்கொண்டு எட்டு மணிக்கு வெளிக்கிட்டா இரவு ஏழு மணி செல்லுது வீட்டை வர. அதுக்கிடையிலை நான் படுறபாடு உங்களுக்குத் தெரியுமே. உங்கடை சனியன்கள் போடுற கூத்து தாங்க முடியுமே. அவள் மூத்த சனியன் ரியூசன் போய் இப்பதான் வந்தவள். ஆமான தகப்பன் இருந்தா அவள் உப்பிடி அலைவாளே?”

மனிசி மகேஸ்வரியின் வார்த்தை வரிகளில் அனல் தெறித்தது.

ஒருமாதிரி உள்ளே சென்று சயிக்கிளை நிற்பாட்டிவிட்டு இருட்டுக்குள் ஏதும் தெரியாமல் தடுமாறி படலையை நிமிர்த்தி எடுத்து ஒரு கல்லால் முட்டுக் கொடுத்து விட்டு, மீன் பாக்கை சைக்கிளிலிருந்து பெருமையுடன் கழட்டி மனிசியின் கையில்

# இறக்கை கட்டிப் பறக்கிறது பால்வடியும் பழைய நினைவு

நிலவு தவழும் தெப்பக்குளத்துப் படித்துறை
நெடிய மௌனம்
ஒற்றைக்கால் தவமிருக்கும் கொக்கின் முகத்திலே
தெறித்துவிழும் நீர்த்துளிபோல்
பதுங்கிக் கிடக்கும் பழைய நினைவுகளை
உருண்டை திரட்டி எடுத்து முகத்திலே வீசிவிடுகிறது
பாதம் கடந்து வந்த பிஞ்சுக்காலம்.

அம்மா ஊட்டிய பிடி சோறுக்கு
தம்பியும் நானும் அடிபட்டுக்கொண்டது
மனத்திரையில் வருகிறது

முருகன் கோவிலடி வீதியில்
இரவி அய்யர் எறிந்த வெடி
வெடிக்காது போக
பட்டாசை கையிலெடுத்த என்னால்
பொங்கல் நாள் ஒன்று
ஆசுப்பத்திரியிலே அப்பாவோடு இருந்தது

கல்லூரி நாளில் முடிவெட்டிய கடன் காசை
திருப்பி செலுத்த பின்னாளில் போக கடையுடன் உடையவனை
போர்தின்று போனதால்
நினைவுக்கு வருகிறது முடிதிருத்தியவன் கனிவுமுகம்

அம்மம்மா சொல்லிய கதையின்
சொல்லாத மீதி என்னவாக இருக்குமென
நினைத்து நினைத்து பார்ப்பது

அப்பாவிடம் கேட்க நினைத்தும்
மறந்து போன சின்னச் சின்னக் கேள்விகளை
இனி கேட்கவே முடியாதென்பது
அடிக்கடி வருகிறது நினைவுக்கு

இவற்றைப்போல
ஒன்றோடொன்று தொடர்பற்ற பலவற்றால்
நிறைந்து வழிகிறது நினைவுக்குளம்

இஞ்சித்தேநீர் குடித்தாலும்
கொஞ்சம் கூட சமிக்காத பண்டிகைக்கால விருந்து போல
மாறாமல் மறையாமல்
கண்ட கண்ட நேரத்திலெல்லாம்
தானாக வந்து தரிசித்துச் செல்கிறது
என்றுமே காயாத பால்வடியும் பால்ய நினைவு.

- மட்டுவில் ஞானக்குமாரன்

கொடுத்தேன்.

கனமாக இருந்த மீன் பாக்கைக் கண்டதும் மனிசிக்கு உள்ளம் குளிர்ந்தது போல தெரிந்தது.

“நல்ல பாரை மீனப்பா வருகிற வழியிலை மலிவா வித்தாங்கள். இரண்டு கிலோ நூறு ரூபா”

“என்ன இரண்டு கிலோ நூறு ரூபாவோ?” எனச்சொல்லியபடி மனிசி வீட்டினுள்ளே கொளுத்தி வைத்து மின்னிய படி எரிந்த மெழுகுதிரி வெளிச்சத்துக்கு கிட்டே போய் மீனை வெளியே எடுத்துப் பார்த்தாள்.

“என்னப்பா பொய் சொல்லுறியள் இந்த மீன் கிலோ நானூறுக்கும் வாங்கேலாது எப்பிடி வாங்கினீங்கள்”

“அதுதான் எங்கட அதிஷ்டம். இன்டைக்கு திருகோணமலைக் கடலிலை உப்பிடி ஆயிரக்கணக்கா கரவலைக் காரங்களுக்கு மீன் பிடிப்பட்டதாம். போட்டிபோட்டுக் கொண்டு வாங்கின சனம் கதைச்சதைக் கேட்டனான். அதுவும் நாளைக்கு ஐஸ் போட்டு நாறடிக்கிறதை விட சனங்களுக்கு விக்கச் சொல்லி கரவலை முதலாளி சொன்னவராம். உப்பிடி நல்ல முதலாளியளும் நாட்டிலை இருக்கினதானே. சனம் முண்டியடிச்சதைப் பாத்து நானும் அதுதான் ரண்டு கிலோ நூறு ரூபா கொடுத்து வாங்கிட்டு வந்தனான். வேறை காசிருந்தா கூட வாங்கிருக்கலாம்.” என்றேன் நான் மனைவியைப் பார்த்து.

“ஓமப்பா காசு கூட இருந்தா வாங்கிருக்கலாம் நல்லா பொரிச்சு போத்திலுக்குள்ளை போட்டு வைச்சால் சனி, ஞாயிறு பாவிச்சிக்கலாம்.” மீனைக்கண்ட மனிசியின் கோபம் மாறி குதூகலம் பிறந்ததைக் கண்ட நான் மீன்காரனை கல்யாணப்பரிசிலை தங்கவேல் பைரவனை வாழ்த்துவது போல மானசீகமாக வாழ்த்தினேன்.

திடீரென இதுவரை உறங்கிக் கொண்டிருந்த மின்சாரம் கண்விழித்துக் கொண்டது. வீட்டிலும் வெளியிலும் ஒரே ஒளிச்சிதறல். கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரி இருந்த நான் திடீரென வந்த மின்சார வெளிச்சத்தில் மனிசியைப் பார்த்தேன்.

மனிசியின்ர முகத்திலை இனியில்லை யெண்ட ஒரு புன் சிரிப்பை அன்று தான் நான் கண்டது போல இருந்தது. நல்ல மீன் கிடைச்ச மகிழ்ச்சிப் பிரவாகமோ அது தெரியவில்லை.

போடப்பட்டிருந்த மின் விளக்குகள் திடீரென எரிந்தது போல ரீ.வியும் திடீரென கதைக்கத் தொடங்கியது. அப்போது ரீ.வியில் இரவுச் செய்தி போய்க்கொண்டிருந்தது. போய்க்கொண்டிருந்த செய்தி நிறுத்தப்பட்டு முக்கிய செய்தி என ஒரு செய்தி போனது.

நானும் மனைவியும் அப்படியென்ன முக்கிய செய்தியோ என மிகவும் கவனமாக அந்தச் செய்தியைக் கவனித்தோம்.

‘முக்கிய செய்தி, திருகோணமலை கடற்கரையில் ஒரு வித மீன் கும்பல் கும்பலாக ஆங்காங்கே கரையொதிங்கி யுள்ளதாக எமது திருகோணமலை செய்தியாளர் அறிவித்துள்ளார். அந்த மீன்களை பாவித்த பொது மக்கள் பலர் வாந்தி வயிற்றோட்டம் என்பதால் பாதிக்கப்பட்டு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கரை யொதுங்கிய மீன்கள் ஒரு வித தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.’

ரீ.வி செய்தியை கேட்ட எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு தலை சுத்திக்கொண்டிருந்தது. சுமையலறை வாசலில் நின்ற படி செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்த மனிசியின் முகத்தை அவளுக்குத் தெரியாமற் பார்த்தேன். அதில் எண்ணைச்சட்டி வைத்து எள்ளும் கடுகும் வெடிப்பது போல் தென்பட்டது.

நான் எதிர்பார்க்க வில்லை அவள் தனது கையிலிருந்த மீன் பாக்கை எனது முகத்திலே வீசியெறிய அது எனது கன்னத்தை பதம் பார்த்த படி தொப்பென கீழே விழுந்தது. இவ்வளவு நேரமும் கத்திக் கத்தி காலுக்குள் சுற்றி சுற்றி வந்த பூனையும், நாயும் அந்த மீன் பாக்கின் மேலே படாரெனப் பாய்ந்து இழுபறிப்பட்டு நிலத்திலே மீன்கள் சிந்த இழுத்துக்கொண்டு வெளியே ஓடிக்கொண்டிருக்க,

சீயட்ட கிலோ தெக்காய் அங்கிங் கெணாதபடி எங்கும் பரவி மணம் வீசிக்கொ ண்டிருந்தது.

# ஞானம்: ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழில் போராளிகளின் இலக்கியப் படைப்புகள்: இடம்பெற்றவையும் இடம்பெறத் தவறியவையும் பற்றிய ஒரு தேடல்

தி.திபாகரன்
(ஊடகவியலாளர் - லண்டன்)



கடந்த மூன்று தசாப்த ஈழத்து விடுதலைப் போராட்ட காலமானது தமிழினத்தின் மிகக் கொடூரமானதொரு சமூக வாழ்வியலை ஒடுக்கு முறையாளர்களினால் தமிழினத்தின் மீது திணித்திருந்தது. இத்தகையதொரு மூடப்பட்ட, வெளியுலகத் தொடர்புகளைப் பேணமுடியாத யுத்த பூமியாக வடகிழக்குத் தமிழர் தாயகம் இருந்தாலும் கூட, அந்த மண்ணினதும், மக்களினதும் உயரிய பண்புகள் உதிர்ந்து போய்விடவில்லை. அந்த நிலத்தில் மக்களுடைய அன்றாட வாழ்வே மரணத்தின் வாயிலில் இருந்தபோதிலும் கலை, இலக்கியப் படைப்புக்களின் வருகையானது எந்தவகையிலும் தடைப்பட்டிருக்க வில்லை. இக்காலப்பகுதியில் எழுந்த கலைப் படைப்புக்களை இன்று நாம் ஈழத்துப் போரிலக்கியப் படைப்புக்கள் என்று வகைப்படுத்திக் கூறுமளவிற்கு அவற்றின் பேசுபொருள் உலகத்தரம் வாய்ந்ததாக இருந்திருக்கிறது.

இலக்கியம் என்கின்றபோது எழுதுவோன் தன்னுடைய நோக்கத்தைச் சொல்லுதல் என்றுதானே நாம் பொருள் கொள்கின்றோம். அத்தோடு இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி ஆகவே ஒரு இனத்தின் சுயநிர்ணயத்திற்கான நீண்ட விடுதலைப் போராட்ட காலங்களில் எழுகின்ற இலக்கியங்களும் அக்காலத்தின் சமூகத்தையும், சமூகம்சார் பிரச்சினைகளையும் போரின் வெற்றிகள், தோல்விகள், மரணங்கள், அழிவுகள் எனச் சமூகம் எதிர்கொள்கின்ற அனைத்துப் பிரச்சினைகளையும் எடுத்துச் சொல்வதாகவே அமையவேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது.


இத்தகைய இலக்கியங்களில் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், திறனாய்வுகள், அரங்க நாடகங்கள், தெருவழி நாடகங்கள், கூத்துக்கள், எழுச்சிப் பாடல்கள், ஓவியப் படைப்புக்கள் குறும்படங்கள் எனப் பெருமளவானவை எழுச்சி பெற்றிருந்தன. இப்படைப்புக்கள் பாமர மக்கள் முதல் பட்டறிவுச் சமூகம் வரையில் ஊடுருவி பலவிதமான தளங்களிலிருந்து பல்துறைசார் படைப்பாளிகளை தோற்றங்கொள்ளச் செய்தன. போர்க்களத்தின் யுத்தச் சகதிக்குள் நின்றுகொண்டு ஏராளமான போராளிப் படைப்பாளிகள் தங்களுடைய உள்ளத்து உணர்வுகளைத் தமது படைப்புக்கள் மூலம் அவ்வப்போது வெளிப்படுத்தியிருந்தனர். அத்தகைய போராளிகளின் படைப்புக்கள்

எவ்வளவு தூரம் ஞானம் போரிலக்கியச் சஞ்சிகையில் இடம்பெற்றிருக்கிறது என்பது பற்றியதான எனது பார்வையே இங்கே பதியப்படுகிறது.

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் 150வது இதழ் ஈழத்துப் போரிலக்கியச் சிறப்பிதழ் என்ற பெயருடனும், 600 பக்கங்களுடனும் தாயகத்தில் இருந்து வெளிவருவதென்பது இலகுவான விடயமல்ல. மேலும் இவ்விதழில் போர்க்காலத்தில் எழுந்த ஆக்க இலக்கியப் பிரசுரங்களினது ஆய்வுத்தேடல்களில் போராளிப் படைப்பாளி களின் படைப்புக்கள், எவ்வளவு தூரம் உள்வாங்கப் பட்டிருக்கின்றது என்பதை மதிப்பிடுவது மட்டும் எனது நோக்கமல்ல. இத்தொகுப்பில் இணையமுடியாது போனவை யும், பார்வைக் கெட்டாமல் போனவையும் எவை என்பது பற்றிய குறிப்புகளை எதிர்கால ஆய்வாளர்களுக்கு வழங்குவதும் எனது நோக்கமாகும்.

இன்று படிப்படியாக காணாமல்போகும், அல்லது மறைக்கப்படும் யுத்தத்தின் சாட்சியங்களுக்குள் இவ்விலக்கியங்களும் மறைந்துவிடாது காக்கப்படவேண்டிய தேவை உள்ளது. யுத்தத்தின் அழிவுச் சாம்பலுக்குள் அவையும் அமிழ்ந்து போகாமல் வெளிக் கொணர்வதற்கான அல்லது அவை பற்றிய ஒரு பதிவை மேற்கொள்ளும் நோக்கத்தையும் எனது இத்தேடல் பூர்த்திசெய்கின்றது. எனினும் போராளிப் படைப்பாளிகளின் முழுமையான படைப்புக்களையும் இதில் என்னால் குறிப்பிட முடியா விடத்தும் இயன்றவரை முக் கியமானவற்றை தொட்டுக் காட்டவே முனைகின்றேன்.

நூலுருவில் வெளிவந்த ஈழத்துப் போரிலக்கியங்களில், ஜனவரி 1982இல் வெளிவந்த உணர்ச்சிக் கவிஞர் "காசி யானந்தனின் கவிதைகள்" தான் போரிலக்கியங்களில் போராளிகளின் முதன்மைப் படைப்பாக கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. காசி யானந்தனின் கவிதைகள் உணர்ச்சி மிக்கதாகவும், இளைய சமூகத்தை விடுதலை உணர்வு மிக்கவர்களாக, நாட்டுப் பற்றாளர்களாக போர்க்களத்தை நோக்கி இழுத்துச் செல்வதாகவே பெருமளவான கவிதைகள் இடம் பெற்றிருப்பதோடு ஆரம்பகால போராட்ட வீரர்களுக்கு உணர்வெழுச்சியை ஏற்படுத்தியிருந்தன. இவற்றினுடைய பதிவுகள் இத்தொகுப்பில் பல இடங்களில் பதியப்பட்டிருக்கிறது. "மரணத்துள் வாழ்வோம்" என்ற கவிதைத் தொகுதியே ஈழத்துப் போரிலக்கியத்தின் முதலாவது கவிதைகளின் தொகுப்பு என்று கருதலாம். 1977 முதல் 1985 வரை எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பாக கார்த்திகை 1985இல் வெளிவந்த இந்நூ லில் சில போராளிகளின் படைப்புக்களும் உள்வாங்கப்பட்டிருந்தன.




அத்தோடு 1989களில் வெளிவந்த காசி ஆனந்தனின் "தம்பி ஜெயத்திற்கு" என்னும் கடிதவடிவில் அமைந்த ஒருநீண்ட கடிதம் ஒப்பாரி வடிவிலும், அதேநேரம் சோழர்காலப் பரணி இலக்கியப் பாணியிலும் அமைந்த ஓர் இலக்கியப் படைப்பாக நோக்கப்படுவதோடு, அதன் பேசுபொருள் ஒரு இனத்தின் அடிமைத்தனம், இனவொடுக்கல், சித்திரவதை, ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை நோக்கித் தன்னுடையதும் தனது சகோதரர்களினதும் பயணம், விடுதலை இயக்கத்தின் ஆரம்பகால நாட்கள் போன்ற அனைத்தையுமே உள்வாங்கி அதிலே இருந்த கஸ்டங்கள், வெற்றிகள், தோல்விகள், சேகங்கள், போராளிகளினுடைய உறுதி, வீரம், விவேகம் என அனைத்தையும் உள்ள டக்கிய உணர்வூற்றாக வெளிவந்திருந்தது. மீள்பதிப்பாக வெளிவந்த இவ்விலக்கியப் படைப்புப் பற்றி ஞானம் சிறப்பிதழில் நூலகவியலாளர் என். செல்வராஜா குறிப்பிட் டுள்ளார்.

அடுத்து ஆஸ்தான கவி ஞன் என புகழப் படுபவரும் புதுக்கவிதைக்கு ஒரு புது வடிவத்தை, ஒரு புதிய பாய்ச்சலை ஏற்படுத்திய வரு மான புதுவை இரத்தினதுரை அவர்களுடைய கவிதைகள்

போர்க்கள வெற்றிகளை, போராளிகளின் நெஞ்சுறுதியை, அவர்களின் மரணத்தை, தியாக வாழ்வை, அதன் உயர்வை, ஈழத்தின் இயற்கை அழகை, அதன் வளங்களை, பறவைகளை, போரழிவின் கொடூரத்தை, தலைகவிழ்ந்த பனைமரங்களை, புல்முளைத்த பெருந்தெருக்களை, காடாகிப் போன வீட்டு முற்றங்களை எனப் பல்பொருள் சார்ந்து அவருடைய கவிதைகள் தொடாத எந்தப் பொருளும் இல்லை என்னுமளவிற்கு பேசுபொருள் பன்முகப்பட்டிருந்தது எனலாம். எல்லாவற்றிற்கும் மேலாக சங்க இலக் கியங்களில் காணப்படும் வஞ்சினம் கூறும் இலக்கியப் பண்பை உலைக் களம் என்ற கவிதைத் தொகுதியினூடாக வெளிப்படுத்துவதோடு எதிரிக்கு எச்சரிப் பதாகவும் அமைந்து காணப்படுகிறது. இவற் றினுடைய பதிவுகள் இங்கே தாராளமாக இடம்பெற்றிருக்கின்றன.

மலரவனின் "போர் உலா" எனும் தொகுப்பு மணலாற்றிலிருந்து மாங்குளம் வரை தாக்குதலுக்காக வன்னிக்காடுகளினூடே நகர்ந்து செல்லும் பயணத்தின் இடர்களும், இயற்கை வளங்களும் போராளிகளின் வாழ்வும் இயல்பாக மண்ணுக்கேற்ற சொல்லா டல்களோடு வெளிவந்திருந்தது. இது பற்றிய பதிவும் இந்நூலில் பதியப்படுகிறது.

தமிழர் இலக்கிய வரலாற்றில் பெண் படைப்பாளிகளை மிக அரிதாகவே காணமுடிகிறது. நாங்கள் ஔவை என்கின்ற ஒற்றைச்சொல் பெண் படைப்பாளியையே அறிந்திருக்கிறோம். ஆனால் ஈழத்துத் தமிழிலக்கியப் பரப்பில் எண்ணற்ற போராளிப் பெண் படைப்பாளிகளை காண முடியும். அந்தவகையில் "வானதியின் கவிதைத் தொகுப்பு", "கஸ்தூரியின் கவிதைகள்", என்பன உலகெங்கிலும் இல்லாத அளவிற்கு சிறப்பம்சங்கள் கொண்டதான கவிதைகளாக வெளிவந்தன. தமிழ்ச் சமூகத்தின் நீண்ட பண்பாட்டின் மாற்றங்களை பெண்ணிய விடுதலையை, பெண்களின் வீரத்தை, போரியல் சாதனையை, தோழியரின் மரணம்தந்த வேதனையை அவர்களுடைய விடுதலை வேட்கையை, சமுதாயக் கட்டமைப்பின் வெளியேயிருந்து. தமது மனவுணர்வுகளை பதிந்திருப்பினும் பெரும்பாலும் மரணத்தின் பின் தாய்மையின் தேடலை, தோழியரின் மனநிலையை வெளிப்படுத்துவதோடு தம் பின்னே போராட்டத்தின் பால் தமிழீழப் பெண்களை அழைப்பதான பேசுபொருளையே அவை பெருமளவில் வெளிப்படுத்தி நிற்பதனையே காணமுடிகின்றது. "எழுதாத என் கவிதைகளை எழுதுங்களேன்" என்ற படைப்பின் வீச்சு கஸ்தூரியை இனம்காட்டி நிற்பதுவும் இங்கு பெண்கள் கவிதைகளில் போர் பற்றிய விசாரணையும் விமர்சனமும் என்ற கட்டுரையில் அலசப்பட்டிருக்கிறது.

மேலும் பெண்போராளிகளில் அம்புலி, ஆதிலட்சுமி, அலையிசை, ஈழநிலா, சோழநிலா, பொன்னிலா, சுதாமதி ஆகியோர் யதார்த்தமான சமூகவாழ்வையும், சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள், போராட்டச் சூழலில் பெண்களின் உணர்வலைகள், இயற்கைச் சூழல் என்பவற்றோடு யுத்த முனையின் கோரக்காட்சிகள், யுத்தத்தின் பின்னும் நாம் நிலைக்க வேண்டும் விடுதலையை வெல்லவும், வெல்லும்வரை நாம் போராடவும் வேண்டும் என்ற மனஓர்மத்தின் வெளிப்பாடுகள், அவர்களுடைய எண்ண ஓட்டங்களின் விசையுடன் கவிதைகளாக வெளிவந்தன. இவைபற்றி ஈழத்துக் கவிஞைகளின் நவீன கவிதைகளில் "போரும் வாழ்வும்" எனும் தலைப்பில் அத்துவான் கீரன் தொட்டுக்காட்டியிருக்கிறார். பாரதி, அ.காந்தா, கலைமகள், ஜெயா, கனிமொழி, ஞானமதி, கிருபா, புரட்சிகரா, நாதினி, பிரமிளா, றூபி மார்க்கிரட், பிரேமினி, சிரஞ்சீவி, நாமகள், தமிழவள், தயாமதி, தூயவள், சூரியநிலா, சுதாமதி ஆகிய பெண் போராளிகளின் படைப்புக்கள் சில நகுலா எழுதிய "பெயரிடாத நட்சத்திரங்கள்" என்ற கவிதையின் தலைப்பினையே நூலின் தலைப்பாகக் கொண்டு 70 கவிதைகள் கொண்ட ஒரு தொகுதியாக வெளிவந்திருப்பினும் இவர்களின் தனித்துவமான சில படைப்புக்கள் பற்றி "உயிரின் வாசம்" என்ற தலைப்பில் சு.குனேஸ்வரன் பதிவுசெய்திருக்கிறார்.

எனினும் இவர்களது படைப்புக்கள் முழுமையாக வன்னிக்கு வெளியே அன்று வெளிவந்திருக்கவில்லை என்பது

கவலைக்குரியது. இன்று அவை தேடி எடுக்கப்பட்டு வெளிக்கொணரப்படவேண்டிய பணியே எம்முன்னுள்ளது. அப்படைப்புக்கள் வெளிக்கொணர முடியாமை இன்றைய காலத்தின் துரதிஸ்டமே. இருப்பினும் இவற்றின் வெளிவருகையினை தமிழ் இலக்கிய உலகு எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கிறது.

ஆண் இலக்கியப் போராளிப் படைப்பாளிகளில் செந்தோழன், ராணிமைந்தன், நிலவன், புரட்சி, செங்கதிர், பூட்டோ, அ.பார்த்தீபன், இளம்பிறை, தவா, அன்புமணி, சுடரவன், தவபாலன், துளசிச்செல்வன், கலையமுதன், வளநாடான், கலைக்கோன், காக்கா, தூயவன், கவியழகன், பொட்டு, இளந்திரையன், கிட்டு, தினேஸ், இளங்குமரன், பாலகுமார், சே.யோ.யோகி, தமிழன்பன், கவிஅன்பன் என இன்னும் நீண்டு செல்லும் படைப்பாளிகளின் வரிசையில் இவர்கள் முக்கியமானவர்கள். இவர்களது படைப்புக்கள் பற்றி இங்கு நிலாந்தனின் "ஈழத்துப்போர் இலக்கியம்" என்ற ஆய்வுப்பகுதியிலும் மற்றும் சிலரது கட்டுரைகளிலும் தொட்டுக் காட்டப்பட்டிருப்பினும் அவை விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்றே கருதுகிறேன்.

தி.திருக்குமரனின் "விழுங்கப்பட்ட விதைகள்" கவிதைத்தொகுதி போரிலக்கியங்களில் இன்னுமோர் பரிமாணத்தைத் தொட்டு நிற்கிறது. போரின் முடிவின் பின் புலம்பெயர்ந்து அயர்லாந்தில் வாழும் இவர் போரின் விளைவுகளை தன்னுணர்வுடன் பதிவுசெய்வதோடு போராளிப் படைப்பாளிகளால் இதுவரை பதியப்படாத, பகிரப்படாத காதல், விரசம், என ஆழ்மன வடுக்களையும், வெளிப்பாடுகளையும் அவருடைய படைப்புக்களில் வெளிப்படுத்தியிருப்பதை காணமுடிகிறது. தமிழகத்திலிருந்து அண்மைக்காலத்தில் வெளிவந்தமையால் இது பற்றிய பதிவும் இடம்பெறாமல் போயிற்று.

போர்க்காலப் படைப்புக்களில் தெருவழி நாடகங்கள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அந்தவகையில் வீரத்தாய், ஊரெங்கும் போர், அம்மா, கடலோரக் காற்று, போரம்மா, குருத்தோலை அழுவதேன், ஒருபிடிமண், சிவந்தமண், செவ்வரத்தம்பூ, கந்தகப்பூக்கள், அலையம்மா, போருக்கு வாரீர், வெற்றிமுரசு, சண்டியன் ஜெயசிக்குறாய், என ஏராளமான தெருவழியோர நாடகங்கள் தோற்றம் பெற்றிருந்தன. இவை அக்காலத்தின் நிதர்சனமான சமூகவாழ்வை மிகச்சிறப்பாக சித்தரிப்பவையாகவும் அதேநேரம் போரின் வெற்றி தோல்விகளின் பலாபலன்களை எதிர்வு கூறுவனவாகவும், இருந்ததுதான் இவற்றின் சிறப்பம்சமாகும். இப்படைப்புக்கள் தனித்தும், கூட்டாகவும் போராளிகளினால் படைக்கப்பட்டிருந்தன. இந்தப் படைப்புக்கள் பற்றிய பதிவுகள் இந்நூலில் பதியப்பட முடியாதுபோனமையும் அவதானிக்கத்தக்கது. எனினும் எதிர்காலத்தில் இவற்றினுடைய அரங்கியல் பதிவுகளும், ஆய்வுகளும் தமிழ் இலக்கியப் வரலாற்றுப் பரப்பிற்கும் ஈழத்து அரங்கியல் பற்றிய வரலாற்றுக்கும் தேவையானதொன்றாகவே உள்ளது.

போர்க்கால இலக்கியப் படைப்புக்களில் தேசவிடுதலைப் பாடல்கள் ஒரு கணிசமான பங்களிப்பை வகிக்கின்றன. கிட்டத்தட்ட 3500 இற்கும் மேற்பட்ட பாடல்கள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. இவற்றை இயற்றியவர்களில் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை, கு.வீரா, வேலணையூர் சுரேஸ், பொன் கணேசமூர்த்தி, செந்தோழன், ராணிமைந்தன், செம்பருதி, ஆதிலட்சுமி, கலைப்பருதி, நிலவன், புரட்சி, இளந்திரையன், புலேந்திரன் அங்கிள், இளம்பருதி, போசன் போன்ற இன்னும் ஏராளமானவர் முக்கியமானவர்கள். இவர்களது பாடல்கள் சாகாவரம் பெற்றன. இருந்தும் பெருந்தொகையிலான பாடல்கள் வெளிவந்த போதிலும் 9 ஒலி நாடாக்கள் மாத்திரமே இந் நூலில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. எனினும் தேசவிடுதலைப் பாடல்களை ஆய்வு செய்வதென்பது இலகுவானதொன்றல்லவே. எனவே இதனை ஒரு தனிப்பெரும் ஆய்வாகவே எதிர்காலத்தில் ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

இங்கு ஈழத்துப் போராளிப் படைப்பாளிகளின் படைப்பைப் பற்றிக் கூறும் பாடலொன்று "எழுச்சியும், வீரமும், தமிழீழப் போருக்கு உரமூட்டி வலுத்தந்த கலைஞர்களே உங்கள் கருத்துக்கள் நெருப்பாகிய வரிகளைக் கொண்டதால் தமிழீழப் புரட்சி வெடித்ததே.

உங்கள் எழுதுகோல் அசைந்தாலே இந்தப் பூமியும் அசைந்திடுமே” என ஈழத்துப் போராளிப் படைப்பாளிகளின் படைப்புக்களை அந்தப்பாடல் வியந்துரைக்கிறது.

விடுதலைப் போராட்ட காலத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை தத்ரூபமாகக் காட்டக்கூடிய குறும்படங்கள் பல வெளிவந்திருந்தன. அவற்றுள் இனி, வேருக்குநீர், வெல்லும்வரை, நேற்று, கோலமிட்டகை, நெருப்பு மலர்கள், யாருக் காக, போன்ற குறும்படங்கள் இங்கே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் போராளிகளின் போரியல் வெற்றியையும், அர்ப்பணிப்புக்களையும், தியாகத்தின் உயரிய பண்புகளையும் பிரதிபலித்து நின்ற “குருதிச்சன்னங்கள்”, “இன்னுமொரு நாடு” ‘உயிராயுதம்’, ‘உயிரம்புகள்’, “எல்லைவேலி”, “செவ்வரத்தம்பூ’, “உறங்காத கண்மணிகள்‘, ‘எல்லாளன்’ போன்ற படங்களின் ஆழ்ந்த கருத்தாடல்கள் கட்டாயம் வெளிக்கொணரப்பட வேண்டியவையே. இவை தமிழரின் போரியல் பண்பாட்டை உலகிற்குப் பறை சாற்றுவனவாக விளங்குகின்றன. இவற்றினுடைய பதிவுகளும் இங்கே இடம்பெற முடியாமல் போனமையும் துரதிஸ்டமே. இக்குறும்படங்களில் பல இன்றும் இணையத்தளங்களில் பதிவுபெற்று அவ்வப்பொது பார்வைக்குக் கிடைக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

போர்க்காலத்தில் எழுந்த சிறு கதைகள் உண்மைச்சம்பவத்தை மையப்படுத்தியதாகவே தோற்றம் பெற்றிருந்தன. தமிழ்க்கவி, வெற்றிச்செல்வி, நா.யோகேந்திரநாதன், ஆதிலட்சுமி, நாவண்ணன், பொன் காந்தன், தாமரைச்செல்வி, உலக மங்கை, மலைமகள், மலரவள், அம்புலி, மலரவன், புரட்சி செந்தோழன், விவேக், தர்மேந்திரா, கிங்ஸ்லி, கபிலன் என்று நீண்டு செல்லும் போராளிப் படைப்பாளிகளின் சிறுகதைகளில் பெரும்பாலானவை சாளரம், வெளிச்சம், ஈழநாதம், விடுதலைப் புலிகள், சுதந்திரப் பறவைகள், நாற்று, விளக்கு, வழிகாட்டி, ஊக்கி போன்ற சிறுசஞ்சிகைகளில் வெளிவந்தன. இவற்றில் அம்புலி, தாமரைச்செல்வி, தமிழ்க்கவி போன்றோருடைய சிறு கதைகள் மாத்திரமே இங்கே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தில் போர்க்கால வெளியீடு களான சூரியபுதல்வர்கள் (மாவீரர் தின வெளியீடுகள்), நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் (சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தயாரித்தது), விழுதாகி வேருமாகி (அ.காந்தா, செ.புரட்சிகா, மலைமகள் ஆகியோரின் கூட்டுத் தொகுப்பு), சமர்க்கள நாயகன் (பிரிகேடியர் பால்ராஜ் நினைவாக வெளியிடப்பட்டது), சாத்தானின் படைகள் (இளங்குமரன் எழுதியது),

**குருத்தோலைகளின் மரண வெளியில்...**

-புலோலியூர் வேல்நந்தன்

*வாழ வேண்டிய*
*வயதுகளில் எங்கள்*
*குருத்தோலைகள்*
*எழுதிக் கொள்(ல்)ளும்*
*மரணங்களின் வெளியில்*
*நின்றழுகின்றது மனம்*
*தூக்குக் கயிறுகளே*
*துன்பத்தின் வடிகாலாய்*
*போன வாழ்வொன்றில்*
*போர் ஓய்ந்தும்*
*தற்கொலைகளால்*
*தடுமாறும் தலைமுறையின்*
*கோலம்*
*நாளொரு அவமரணச்*
*செய்தியில்லா*
*பத்திரிகை, தாள்கள் இல்லா*
*வாழ்வொன்றிடம்*
*ஆற்றுப் படுத்தல்*
*இழந்த மந்தைக் கூட்டங்களாய்*
*மனநெருக்கீடுகளாய்*
*காதல் தோல்விகளாய்*
*கடந்து போகிறது வாழ்வு.*

சங்கரண்ணா சாவு உனது முடிவல்ல (சி.நிர்மலன் எழுதியது), விழுதுகள் (வெளியீட்டுப் பிரிவு), போராளியின் குருதிச்சுவடுகள் (வெளியீட்டுப் பிரிவு), தலைவரின் சிந்தனைகள் என நீண்டு செல்லும் வெளியீடுகள் பற்றியதான விரிவான ஆய்வுகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டியவையாகும்.

'போரிலக்கியம் தமிழில் எதிலிருந்து எங்கிருந்து' என்ற தலைப்பில் இந்நூலில் இடம்பெற்ற கருணாகரனின் பதிவு தொடர் பாகவும், ஆ.நா.பொற்கோவின் பகிரப்படாத பக்கங்கள்' என்னும் பதிவு தொடர்பாகவும் மேலும் விரிவான பார்வை தேவையாகவே உள்ளது.

மேலும் இளந்திரையனின் 'இயல்பினை அவாவுதல்' கவிதைத் தொகுதி மற்றும் அவரது எழுச்சிப் பாடல்கள், 'எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்' போன்ற ஏராளான போரியல் கோசங்களும் அந்நாளில் எழுச்சி பெற்றிருந்தன. இவை பற்றியும் இந்நூலில் பதிவது தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்றதாக அமையாது என்பதனால் பதியப்படவில்லை போலும்.

உயர்நிலைப் போராளிகளான நீதன், பாலகுமாரன், யோகி, இளங்குமரன், பொட்டு, கிட்டு, கபிலம்மான் தமிழன்பன், தினேஸ் போன்றோருடைய படைப்புக்களுக்கு, அவை கைக்கெட்டாத காரணத்தால் போலும் இங்கு இடமற்றுப்போய்விட்டது.

'புலனாய்வுப்பார்வை' எனும் சஞ்சிகை போராட்ட காலத்தில் வெளியிடப்பட்டது. ஆனால் அச்சஞ்சிகை வெளியுலகிற்கு வெளிவராமல் ஒரு துறைசார் போராளி களுக்காக புலனாய்வுப் போராளிகளின் அனுபவங்களையும், சாதனைகளையும் வெற்றிகளுக்குப் பின்னால் மறைந்துபோன தனிமனிதர்களையும், செல்லப்படமுடியாத இரகசியங்களையும், கசப்பான உண்மை களையும், படிப்பினைகளையும் கதைகளாக வும், விவரணங்களாகவும், கவிதைகளாகவும், நினைவுப் பகிர்வுகளாகவும் உள்ளடக்கி வெளிவந்திருந்தன. இவற்றில் மான்விழி, கலையழகன், ஒற்றன் போன்றோர் முதல் கபிலம்மான், பொட்டம்மான் வரையிலானவர்களின் படைப்புக்கள் வெளி வந்திருந்தன. இவற்றை வெளியுலகிற்குப் பகிரங்கமாக வெளிக்கொணரமுடியாத இன் றைய நிலையில் எப்படித்தான் ஆய்வு செய்யமுடியும்? இவற்றைப் பதிவதுதான் எப்படி என்ற கேள்வியும் நம்முன் எழுகின்றது.

தமிழிலக்கிய வரலாற்றில் நாம் இலக்கிய வரலாற்றுக் காலங்களை சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என காலங்களை வகுத்துக் காட்டுகின்றோம். அதன் தொடர்சியாக ஈழத்திலே எழுந்த பல்லாயிரக்கணக்கான இலக்கியங்கள் இன்னுமொரு காலத்தை எங்களுக்குத் தந்திருக்கிறது அதுதான் 'ஈழத்து தமிழர்களின் போர் இலக்கியக் காலம்'. ஏனெனில் ஈழத்துத் தமிழர்கள் தான் நேரடியாகப் போரைக் காணக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். ஆகவே ஈழத்துப் போர், ஈழத்துக் கவிஞர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் மிக அருமருந்தன்ன கருப்பொருட்களைத் தந்திருக்கின்றது. காலக் கிரமத்தில் இவை தொகுக்கப்பெற்று புகலிடத் திலாவது பாதுகாக்கப்படவேண்டியதும் அவசிய மாகின்றது.

எனவே ஈழத்துக்கவிஞர்கள் போரை, அதனுடன் இணைந்த காதலை, போரின் வலிகளை, போரின் வெற்றிகளை என அனைத்தையுமே பதிவுசெய்திருக்கின்றார்கள். ஆகவே ஈழத்தில் கடந்துசென்ற முப்பது ஆண்டுக்கால போர்க்காலத்தில் எழுந்த இலக்கியங்களோடு மேலும் முப்பது ஆண்டுகளுக்கு இந்தப் போரின் வடுக்களை, பகிரப்படாத பக்கங்களை, அதன் நினைவுகளைச் சுமந்ததான இலக்கியங்கள் எழத்தான் போகின்றன. அவற்றையும் இன்னுமொரு நாளில் பதியவேண்டிய தேவை நமக்கு ஏற்படத்தான் போகின்றன. அத்தகைய பதிவானது மற்றுமொரு மிகப்பிரமாண்டமானதொரு பதிவாக இடம்பெற வேண்டுமென இலக்கிய உலகு அவாவி நிற்கிறது.

❍ ❍ ❍

# படித்ததும் கேட்டதும்



## கே.விஜயன்

# ஒரு வரலாற்று ஆசிரியனின் இலக்கியத் தேடல்

இலங்கையின் மார்க்சிய திறனாய்வுக் கோட்பாட்டுச் சிநதனையாளர் வரிசையில் பேராசிரியர்களான கைலாசபதி, கா.சிவத்தம்பி. M.A. நு்.மான், சபா ஜெயராசா ஆகியோரின் வரிசையில் வரலாற்றாசிரியரான அ.முகம்மது சமீம் அவர்களும் இடம் பெறத்தக்கவர் என்பது அடியேனின் கருத்தாகும்.

சமீமின் மேடை உரைகள், பத்திரிகைக் கட்டுரைகள். வெளியிட்டுள்ள நூல்கள் எனது கருத்துக்கு ஆதார சுருதிகளாக இருக்கின்றன. நெற்றியில் பட்டை தீட்டிக் கொள்வது போல் மார்க்சிய லேபல் ஒட்டித்திரியும் வெறும் வரட்டுப் பிரசங்கி அல்லர் அவர். இஸ்லாமிய மார்க்க நூல்களைக் கற்று ஆன்மீகத்தை உள்வாங்கியது போலவே மார்க்சின் தர்க்க சாஸ்திரத்தையும் கற்றவர். இவ்வளவிற்கும் இஸ்லாம் மார்க்கத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ்ஜினை நிறைவு செய்து மார்க்க சீலராக வாழ்பவர்.

"காயமே இது பொய்யடா வெறும் காற்றடித்த பையடா."

இப்படி ஒரு தமிழ்முனிவன் பாடிவைத் தானோ இல்லையோ நம்மவர்களில் பலரும் வரிந்து கட்டிக்கொண்டு மாயாவாதத்திற்கு மூலாதாரமே இந்து தர்மம்தான் என்று கெட்டிமேளம் கொட்டத் தொங்கிவிட்டார்கள். நம் இலக்கியத் திறனாய்வாரளர்களில் பலரும் ஆன்மீகவாதம் என்பது மாயா வாதம் அதைக் கற்பவன் பொருள் முதல் வாதியாக எப்படி இருக்கமுடியும் என்று ஒரே போடாகப்போட்டு "சட்டி சுட்டதடா கை விட்டதடா" என்று அத்தகையவர்களை ஓரம் கட்டிவிடுவதையே தத்து வப் பணியாகச் செய்து கொண்டிருக்க தன்னைக் கடும் சிவப்பாளி என லேபல் ஒட்டித்திரியும் ஒரு பேராசிரியர் (மொட்டைக்கடிதம் உட்பட) பல மார்க்சீயத் துரோகப்பணிகளை இந்த பூனையும்பால் குடிக்குமா என்பதுபோல் செய்வதில் வல்லவ ராக இருக்கிறார்.

ஆனால் வரலாற்றாசிரியரான சமீம் மார்க்சியத்தின் ஆணிவேரான பொருள் முதல்வாதத்தையும் கற்றதுடன் நின்றுவிடாமல் மனித சமூகத்தின் வரலாற்றை அத் தத்துவக் கோட்பாட்டின் அடித்தளத்தில் நின்று தனது கல்வி மற்றும் இலக்கியப் பணிகளை முன்னெடுக்கும் சமூகப்பணியில் ஈடுபடு பவராக இருக்கிறார். "எனது இலக்கியத் தேடல்" என்ற சமீமின் நூல் இலக்கியம் குறித்த அவருடைய மார்க்சிய சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றது.

பேராசிரியர் கைலாசபதி. செ.கணேச லிங்கன், நீர்வை பொன்னையன், எஸ்.எம். கார்மேகம். என்.கே ரகுநாதன். தான்தோன்றிக் கவிராயர், திருச்சிற்றம்பலக் கவிராயர். கே. விஜயனின் "அன்னையின் நிழல்" சிறுகதைத்தொகுதி, மருதூர்கனி ஆகிய படைப்பாளிகளின் ஆக்கங்கள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகளுடன்.

கைலாசபதியின் முற்போக்கு இலக்கியமும், இயக்கமும் - கைலாசபதியின்

பார்வையில் கலை இலக்கியம்- தமிழில் தோன்றிய அற இலக்கியம் வர்க்கசார்புடையது - கைலாசப்பதியின் முன்னுரைகள் ஒரு பார்வை ஒரு விளக்கம்- கைலாசபதியின் மார்க்சியப் பார்வை - ஆகிய கைலாசபதி பற்றிய ஆறு கட்டுரைகள் உட்பட எழுபதுகளில் இலங்கையில் சிறுகதை வளர்ச்சி-இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் இன்றைய பரிணாம வளர்ச்சி- இலங்கை முற்போக்கு சங்கத்தின் தேசிய ஒருமைப்பாடு கோட்பாடு - தேசிய இலக்கியம் இனப்புரிந்துணர்விற்கு முன் வைத்த யோசனை. என்பவை இந்நூலின் உள்ளடக்கங்களாக உள்ளன.

இலங்கை புனைகதை இலக்கியத்தின் வரலாறு நல்ல சமூகப் பார்வையின் வரலாறாக அமைந்திருப்பது ஒரு தனித்துவமாகும். அதன் முற்போக்கு சிந்தனைக் காலகட்டத்தில் சமீமின் பங்களிப்பு விதந்துரைக்கத் தக்கது. இக்கட்டுரைகளும் திறனாய்வுக் குறிப்புகளும் பொருள்முதல்வாதத்தின் அவருடைய ஆழ்ந்த புலமையையும் நேர்மையான பங்களிப்பையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

சாதாரண மக்களின் வாழ்வை எழுது வதுதான் கலை என்பதும், அவர்களின் பேச்சு மொழியைப் பயன்படுத்துவதும் இலக்கியத்தைக் கொச்சைப்படுத்துவதாகும் என்ற சிந்தைனை கொடிகட்டிக் கிடந்த ஒரு காலகட்டத்தில் புதிய உலக சிந்தனையாளர்கள் அதனை எதிர்த்து எழுதத் தொடங்கினர். இது இலங்கைக்கே உரித்தான ஒன்றாக இருக்கவில்லை.

தொழிற் புரட்சி பரிணாமத் தத்துவத்தின் கண்டுபிடிப்பு, சோவியத் புரட்சி, மார்க்சியத்தின் தோற்றம். மனித வரலாற்றுக்கு கார்ல்மாக்ஸ் அளித்த விஞ்ஞான பூர்வமான விளக்கம் என்பன மனித சமூகச்சிந்தனையில் புதிய பாய்ச்சலுக்கு வழிவகுத்தன. இது இலக்கியத்திலும்- விசேடமாக ஏகாதிபத்தியத்தின் பிடிகளுக்குள் சிக்கிக்கிடந்த நாடுகள், சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நாடுகள், உள்நாட்டில் இனரீதியான பிரச்சினைகளில் சிக்கிக் கிடந்த நாடுகள் இன, மத, சாதி என்று பிச்சல் பிடுங்களில் சின்னாபின்னமாகிக் கிடந்த நாடுகளிலும் புதிய இலக்கியச் சிந்தனைகள் புதிய அலைகளாகப் பிரவாகமெடுத்தன.

கலை கலைக்காக, அது ரசனைக்காக மட்டுமே என்ற கோட்பாட்டுக் கெதிராக கலை மக்களுக்காக என்ற குரல் புதிய அலையின் வீச்சாக மேலெழத் தொடங்கியது.

-எந்த ஒரு காலகட்டத்திலும் தோன்றும் இலக்கியங்கள் அவ்வவ் காலத்திய மக்களின் பொருளாதார சமூகச் சூழலைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. இவ்விலக் கியங்கள் மூலம் சமூகமாற்றங்களைக் காணலாம்.

-வரலாற்றில் ஏற்படும் எந்த ஒரு சம்பவமும் மக்களின் பொருளாதார சமூக வாழ்க்கையில் ஏற்படும் கொந்தளிப்பின் பிரதிபலிப்பே.

-ஒரு சமூகத்தில் இருக்கும் பழக்க வழக்கங்களும் அச்சமூகத்தின அமைப்பையும் சூழ்நிலையையும் பொறுத்தது.

-மக்களின் அன்றாட வாழ்க்கையை பிரதிபலிப்பதுதான் இலக்கியம்.

சமீமின் இலக்கியக் கோட்பாடுகள் இவை. இலக்கியத்தேடல் என்ற நூலில் அவர் உள்ளடக்கமாகத் தந்திருக்கும் அனைத் துப் புத்தகங்களிலும் கட்டுரைகளிலும் இத் தேர்வுகளின் தளத்தில் நின்றே அவரின் தேடல் செல்நெறி அமைகின்றது.

திறனாய்வாளர்கள் குறித்து எழுதுகின்ற போது தொ.மு.சி.ரகுநாதன், எஸ்.ராம கிருஸ்ணன், ப.ஜீவானந்தம், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோர் மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் எழுதுவதாகச் சமீம் குறிப் பிடுகிறார். இவ்வறிஞர்களின் மார்க்சிய விஞ்ஞானபூர்வமான தேடல்கள் அவருடைய இலக்கியத் திறனாய்வு அளவுகோலாகவே அமைந்திருக்கின்றது.

உலகம் சிறு கிராமம் ஆகிவிட்டது என்கிறோம். விஞ்ஞானத்தின் வளர்ச்சியும், தகவல் தொழில் நுட்பத்தின் பாய்ச்சலும். அந்த அளவிற்கு விஸ்வரூபம் அடைந்து கொண்டிருக்கின்றன.

60களில் சர்வதேசரீதியாக ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கம் இங்கும் தன் மூச்சுக் காற்றைக் கொஞ்சம் விசிறிவிட இலங்கை மக்களிடமும் அரசியல் மாற்றத்திற்கான வெளிச்சக் கீற்று தோன்றியது. கலை இலக்கியத்துறையிலும் அதன் பிரதிபலிப்பு மடை திறந்த வெள்ளமானது.

முற்போக்கு கலை இலக்கிய இயக்கம் தோன்றியது அத்தாக்கத்தின் பிரதான அம்சமாகும். அதில் சமீமின் பங்களிப்பு அவதானத்திற்குரியது. இக்காலகட்டம் குறித்து சமீம் அவர்கள் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தேசிய இலக்கியம்

இனப்புரிந்துணர்விற்கு முற்போக்காளர் முன்வைத்த யோசனைகள் எனும் அவருடைய கட்டுரையில் இலங்கை புனைகதை இலக்கியம் குறித்து தெளிவாக எழுதியுள்ளார்.

*"1956க்கு முன்பு இலங்கை தமிழ் எழுத்தாளர்கள் இந்தியப் பத்திரிகை சஞ்சிகைகளில் தங்கள் ஆக்கங்கள் வெளிவர வேண்டும் என்ற அவாவில் இந்தியபாணியில் எழுதத் தலைப்பட்டனர். இக்கதைகள் இலங்கையை பிரதிபலிப்பனவாகவோ இலங்கை மக்களின் வாழ்க்கையை தெளிவு படுத்துவனவாகவோ இருக்கவில்லை. இந் நிலையில் 1956க்குப் பின்னர் இலங்கை யில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் மத்திய தரவர்க்கத்திற்குச் சென்றதால் தேசிய உணர்வு ஏற்பட்டது.*

*இதனால் பாமர மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கதைகள் வெளிவரத் தொடங்கின. இலக்கியத்தின் மூலம் சீர்திருத்தம், தேசமுன்னேற்றம், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை செழுமை பெறல் ஆகிய நோக்கங்களை இலட்சியமாகக் கொண்டு எழுதத் தலைப்பட்டனர்.*

"இதன் நற்பயனாக ஈழத்து இலக்கியம் தமிழ்நாட்டு இலக்கியப் பிடியிலிருந்து விடுபட்டு ஒரு புதிய பாதையை வகுக்கத் தொடங்கியது. ஈழத்தின் தேசிய இலக்கியக் கோட்பாடு உருவானது. எழுத்தாளர்கள் கற்பனைக் கதைகள் எழுதுவதை விட்டு விட்டு சமூகத்திலுள்ள அவலங்களை தமது கதைகளில் எடுத்துக் காட்ட ஆரம்பித்தனர். இதனால் புதிய மரபு உருவானது. யதார்த்தம், மண்வாசனை, கோட்பாட்டு அடிப்படையில் தேசிய இலக்கியம் உருவாகத் தொடங்கியது." என்று குறிப்பிடுகிறார்.

இக் கோட்பாடு பகிரங்க இலக்கிய சர்ச்சைகளை ஏற்படுத்தியது. உருவமா, உள்ளடக்கமா? நல்ல இலக்கியமா நசிவு இலக்கியமா? என்ற கேள்வி வில் அம்புகளைச் சுமந்துகொண்டு இரு அணிகள் இலக்கியச் சமரில் களம் இறங்கின. மரபு காக்கும் அணிக்கு பண்டிதர் சதாசிவம் தலைமைதாங்கி "விட்டேனா பார்!" என்று அம்பு மழை பொழிய புதிய விஞ்ஞானக் கோட்பாட்டு கவசம் பூண்டு வரலாற்றாசியர் சமீம் தலைமையில் ஒரு முற்போக்குப் படை "ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா!" என்று வெற்றிக்களிப்புடன் முன்சென்றது.

இது இந்நாட்டில் ஏற்பட்ட இலக்கியக் கோட்பாட்டு யுத்தத்தில் முக்கியமான காலகட்டமாகும்.

இது ஓய்வு கொள்ளாத யுத்தம். இதன் பின்புலமாக வர்க்கங்கள் அவற்றின் நலன்கள் இருக்கின்றன என்கிறார் பொருள் முதல்வாதத்தின் பிதாமகன் கார்ல்மார்க்ஸ். மனித சமுதாயம் இருக்கும் வரையில் பல்வேறு வடிவங்களில் இந்த யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்கிறார் அவர்.

"அடப்பாவி மனுஷா! இந்த மனித ஜென்மத்தை ஒரு வழி பண்ணாமல் விடமாட்டாய் போலிருக்கே"

என்று கரிச்சுக் கொட்டத் தோன்றுகிறது அல்லவா?

"என்ன பண்ரது சமூக நியதி அதுவாக இருக்கும்பொழுது ஒரு சமூக விஞ்ஞானி அந்த உண்மையைச் சொல்லித்தானே ஆகவேணடும். ஆன்மீகப் பற்றாளராகவிருந்தாலும் பொருள் முதல்வாதத்தை ஏற்றுக் கொண்டவரான வரலாற்றாசிரியர் சமீமிற்கும் இந்த விதி பொருத்தமானதல்லவா.

ஈழத்தின் நவீனகவிதை. சிறுகதைகள், புதினங்கள் இனப்பிரச்சனை அனைத்தும் இதே அளவுகோளிலே திறனாய்வு செய்வதே அவருடைய செல்நெறியாகவிருக்கிறது. ஈழத்து சிறுகதைகள் பற்றி கூறுகின்றபோது,

*நீர்வை பொன்னையனின் கதைகள் முற்போக்கு கதைகளுக்கு ஒரு முன்மாதிரி. ஏனெனில் அவருடைய கதைகள் பெரும்பாலும் ஏழைத்தொழிலாளி, விவசாயிகளின் வாழ்க்கை யையே பிரதிபலிக்கின்றது என்கிறார்.*

*கே.விஜயனின் அன்னையின் நிழல் சிறுகதைத் தொகுதி யதார்த்த இலக்கியத்திற்கு ஒரு முன்மாதிரி. இத் தொகுதியிலுள்ள கதைகளின் கருவூலங்களும் கதாபாத்திரங்களும் எழுபது எண்பதுகளில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார சமுதாய மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு. இனவெறி இதனால் ஏற்பட்ட வன்முறைகள், யுத்தங்கள் போன்றவை எப்படி மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களையும் விரக்தியையும் கொண்டுவந்தன என்பதனை விஜயன் மிக அழகாக சிறுகதை உத்திகளை மீறாமல் எழுதியிருப்பதை உணரமுடியும்"*

கவிஞர் இக்பால் தொகுத்துள்ள "முற்போக்கு இலக்கியவாதி முகம்மது சமீம்" என்ற நூலில் சமீம் மேற்கண்வாறு

குறிப்பிடுவதாக முன்னாள் அதிபர் மஹ்ரூப் எழுதியுள்ளார். அந்நூலிலுள்ள “பன்னூலாசியர் முகம்மது சமீம்” என்ற கட்டுரையிலே அதிபர் மஹ்ரூப் இதனைக் குறிப்பிடுகிறார் .

சில திறனாய்வாளர்களும். நூல் அறிமுகக்காரர்களும். சிறுகதைப் படைப் பாளிகள் குறித்து பதிவு செய்பவர்களும் “அடப்பாவி இந்த சீண்டல் ஆசாமியும் கதை எழுதுகிறானா? ஆளை ஒரே அமுக்கு” என்று விஜயனை இருட்டடிப்புச் செய்துவரும் நிலையில் அறிஞர் சமீம் நான்கு பக்கங்களுக்கு அன்னையின் நிழல் குறித்து ஒரு கட்டுரையும் எழுதி அதனை “எனது இலக்கியத் தேடல்” என்ற நூலில் பதிப்பித்துள்ளமையும் ஓர் எழுத்தாளன் என்ற வகையில் விஜயனை உவகையடையச் செய்வது இயல்பானது அல்லவா.

ஒரு திறனாய்வாளனுக்கு தமது இலக்கிய வளர்ச்சியின் உண்மையான பற்றுதல் இருக்குமானால் அவனது செயல்பாடு இவ்வாறே அமையும். பல எழுத்தாளர்களின் ஆக்கங்கள் குறித்து சமீம் எழுதியுள்ள கட்டுரைகள் ஈழத்து இலக்கியத்தை வளம்படுத்தும் பயனுள்ள திறனாய்வுகளாகும்.

அண்மைக்காலமாமாக இந்த வர லாற்றாசிரியர் ஒன்றும் எழுதுவதும் இல்லை. இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொள்வதும் இல்லை. ஏன் என்ற கேள்வியும் கவலையும் எனக்கு இருந்தது. விபத்தொன்றின் விளைவாக நடமாட முடியாத நிலையில் நானும் இருந்ததால் வாசிக்கும் சந்தர்ப்பம் அதிகமாக இருந்தது. அவருடைய பல எழுத்துக்களையும் வாசிக்க முடிந்தது. அப்பொழுது அன்னாரின் மகளார் ரஸ்னாஸ் சமீம் இம்டியாஸ் சமீம் அவர்கள் குறித்து ஆங்கிலத்தில் எழுதியிருந்த ஒரு கட்டுரையை வாசித்தேன். அதில் ஒருவரி சமீமைச் சென்று பார்க்க வேண்டும் என்ற அவாவை என்னுள் தீயாக எழச்செய்தது. நண்பர் தமிழ்மணி மானா மக்கீனையும் அழைத்தக்கொண்டு காணச் சென்றேன்.

“What I admire most about my father is his thirst for knowledge and his great habit of reading” – என்னுடைய தந்தையிடம் என்னை மிகவும் கவர்ந்தது அறிவைத் தேடுகின்ற அவருடைய தாகமும். வாசிப்பில் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாடும்.” இதுவே அந்த வரி.


அவர் வீட்டைத் தேடிச் சென்றடைந்தபோது ஓர் அறையில் தனியாக அமர்ந்திருந்தார். ஜன்னல் வழியாக தோட்டத்தில் பார்வை இலயித்துக் கிடக்கிறது. பத்திரிகைகள், புத்தகங்கள். வானொலி, தொலைக்காட்சி அனைத்தும் அங்கிருக்கின்றன. ஆனால் பல மாதங்களாக மூடப்பட்ட நிலையில் அவரைப் போலவே அவையும் அமைதியாக இருக்கின்றன. பத்திரிகைகளில் கைவிரல்கள் பட்டு, கண்கள் எழுத்துக்களில் மேய்ச்சலிட்டு பல மாதங்களாகின்றன.

நாங்கள் விக்கித்துப் போனோம்.

❍ ❍ ❍

**நூல்: மலையகக் கல்வி: சில சிந்தனைகளும் ஆலோசனைகளும்**
**ஆசிரியர்: மொழிவரதன்**
**வெளியீடு:** World Vision, Nuwra Eliya ADP

பொதுவான மலையக அபிவிருத்தி தொடர்பாகவும் குறிப்பாக நுவரெலியா கோட்டம் 3 தொடர்பாகவும் பல ஆய்வு களையும் தரவுகளையும் ஆலோசனைகளையும் இந்நூல் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. அதேவேளை பொதுவான மலையக அபிவிருத்தி தொடர்பாகப் பல சிந்தனைகளையும் முன்வைக்கிறது. இந்நூலில் 31 கட்டுரைகள் அடங்கியுள்ளன. மலையகக் கல்வி தொடர்பாக அறிந்து கொள்ளவும் மேம்பாட்டுக்காகச் செயற்படவும் ஆர்வத் தைத்தூண்டும் வகையில் இந்நூலினை ஆசிரியர் ஆக்கித்தந்துள்ளார். இலங்கை அதிபர் சேவையில் தரம் ஒன்றினைச் சேர்ந்த நூலாசிரியர் ஒரு பட்டதாரி. கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர். அதிபர், வளவாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர் எனப் பன்முக ஆளுமை மூலம் தனது கல்விப்புல அனுபவ முத்திரை களை இந்நூலிலே பதித்துள்ளார். மிகவும் பயனுள்ள தரவுகளைக் கொண்ட நூல் இது.



# புலம் பெயர்வும் இலக்கியமும்




- அந்தனி ஜீவா

"ஞானம்" கலை இலக்கிய சஞ்சிகை காலத்திற்கு காலம் காத்திரமான முயற்சிகளைக் கையில் எடுத்துப் பதிவுகளாக தந்துள்ளது. ஞானம் சஞ்சிகையின் 150ஆவது இதழ் (நவம்பர் 2012) "ஈழத்து போர் இலக்கியச் சிறப்பிதழ்" 600 பக்கங்களில் பதிக்கப்பட்டது. இந்தச் சிறப்பிதழ் கடல் கடந்து பலரின் கரங்களுக்குச் சென்று சிறப்பாகப் பேசப்பட்டது. தமிழகத்து இலக்கிய ஆய்வாளர்கள் இந்தச் சிறப்பிதழை பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இதேபோல இப்பொழுது ஈழத்துப் புலம்பெயர் சிறப்பிதழ் ஒன்றை ஞானம் கொண்டுவர உள்ளது. புலம்பெயர் இலக்கிய இதழ் என்றவுடன் என் மனதில் சில நினைவுகள் மலர்ந்தன. ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்த நம்மவர்கள் படைக்கும் இலக்கியம் மாத்திரம் ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் என்ற வரையறைக்குள் அடக்கிவிட முடியுமா? ஈழத்துக்கு புலம் பெயர்ந்து வந்து, இன்று மலையக மக்கள் என்று அடையாளப் படுத்தப்படுகின்ற இந்திய வம்சாவளியினர் படைக்கும் இலக்கியத்தையும் புலம்பெயர் இலக்கியம் என்று இணைத்து கொள்ளமுடியாதா?

தமிழக இலக்கிய ஆய்வாளர் ம.மதியழகன் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில் தமிழ் இலக்கிய நோக்கில் புலம்பெயர்ந்தோரின் இலக்கியத்தைப் பார்க்க வேண்டுமெனில் இருபெரும் பிரிவுகளில் பகுத்து காணலாம்.

1. காலனித்து காலகட்டம் (1800-1950) இந்திய இலங்கை தமிழர்களின் புலம் பெயர்வு. அதன் வழி முகிழ்ந்த இலக்கியங்களும்

2. 1980 களுக்கு முன்னும் பின்னுமாக இலங்கையிலிருந்து ஈழத்தமிழர்களின் புலம் பெயர்வும் அதன் வழி உருவான இலக்கியங்களும்.

ஆய்வாளர் குறிப்பிடும் இருபெரும் பிரிவுகளை விரிவாக ஆராயும் பொழுது இலங்கை மலையகத் தமிழ் இலக்கியத்தை புலம்பெயர் இலக்கியமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

"தமிழ் நாட்டிலிருந்து பிரிட்டிஷ், மற்றும் பிரான்ஸ் காலனியாட்சியாளர்களால் பலவந்தமாக இழுத்துச்செல்லப்பட்டு நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அயலகத்தமிழர் இந்திய வம்சாவளியினர் என்ற அலங்கார வார்த்தைகளைப் பூசி இவர்களை அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்ட வரலாறு மறைக்கப்பட்டு வருகிறது. இவர்களது கலை இலக்கிய வெளிப்பாடுகளையும் உள்ளடக்கும் போதுதான் இந்தப் புலம்பெயர் இலக்கியம் முழுமை பெறும் என்கிறார். "தமிழக படைப்பாளியான ஆதவன் தீட்சண்யா" (கட்டுரை - உயிர் நிழல்) எழுதியுள்ளார்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், - மலேசியாவிலும் தொடக்க கால தமிழ் நாவல்களும் சிறுகதைத் தொகுப்பும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்டது. இதே காலகட்டத்தில் இலங்கைக்கு சென்ற இந்தியத்தமிழர்கள் உருவாக்கிய மலையகப்படைப்புகளில் தமிழக பின்னணி இடம்பெற்றது என்பது அவை ஈழத்தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியாக இடம்பெற்றுள்ளன என்கிறார்.

புலம்பெயர் இலக்கியம் இன்று பன்முகப் பரிமாணம் பெற்று விளங்குகின்றது. இது தமிழ்மொழிக்கு கிடைத்த தனிச்சிறப்பாகும் "இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் உலகளாவிய இசைக்குழு மொழியாக (ETHENIC LANGUAGE) ஆகியது. இந்த நிலைமையினையே நாம் புலம்பெயர் தமிழ் என்று குறிப்பிட்டுள்ளோம். இவ்வாறாக தமிழ் முன் எப்போதுமில்லாத வகையில் உலக நிலைப்படலாயிற்று" என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார். புலம்பெயர் தமிழிலக்கியம் பற்றி மேலும் பல காத்திரமான ஆய்வுகள் வரவேண்டியது காலத்தின் தேவையாகும்.

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## தமிழ்நாடகம் – ஏன் இந்த அவல நிலை?

அண்மையில் கொழும்பு ரவர் மண்டபத்தில் தேசிய நாடகவிழா நடைபெற்றது. அவ்விழாவில் இரண்டு தினங்கள் தமிழ் நாடகத்துறைக்கு உழைத்த பேராசிரியர்கள் வித்தியானந்தன், சிவத்தம்பி ஆகியோரை நினைவு கூருமுகமாகப் பேராசிரியர் வித்தியானந்தன் அரங்கு, பேராசிரியர் சிவத்தம்பி அரங்கு என இரு அரங்குகள் அமைந்திருந்தன. இரு அரங்குகளிலும் அதிதியாகக் கலந்துகொண்டு சிற்றுரைகள் ஆற்றினேன். (நாடகவிழாவில் பேருரைகள் ஆற்றுவது பொருத்தமானது அல்ல). சிங்கள நாடகங்களும், தமிழ் நாடகங்களும் ஒரே மேடையில் மேடையேற்றப்பட்டமை மகிழ்ச்சியையும், சிறந்த அனுபவத்தையும் தந்தது.

தேசிய நாடகவிழாவில் 12 சிங்கள நாடகங்களும், 3 தமிழ்நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. கே. ஜெயசீலனின் 'கனவு', எம். கேதீஸ்வரனின் 'சவப்பெட்டி', எஸ். நிஷாந்தினியின் 'நான். FineArts' ஆகியவையே அம்மூன்று நாடகங்களும் ஆகும். பெப்ரவரி 26இல் 'முகாம்' என்ற தமிழ்நாடகம் மட்டும் மேடையேற்றப்பட்டது. நாடக விழாவில் இடம்பெற்ற தமிழ் நாடகங்களில் கனவு, முகாம் ஆகியவற்றைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. முகாம் என்ற நாடகம் போட்டிக்காக அன்றி, வரவழைக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட நாடகமாகும். திருகோணமலையில் இருந்து கொண்டுவரப்பட்டு மேடையேற்றப்பட்ட அந்நாடகம் இலங்கையின் சிறந்த தமிழ் நாடகங்களுள் ஒன்றாக அமைந்தது. சிங்களவரான உபநந்த வெலிகல்ல தயாரித்து இயக்கியது அந்நாடகம். காளிதாஸ் இணை இயக்குநராகவும், கதை - வசனகர்த்தாவாகவும் விளங்கினார். முகாம் என்னும் அந்நாடகம் பார்வையாளரை மிகவும் கவர்ந்தது. (ஆனால், பார்வையாளர்கள்தான் மிகவும் குறைவு). முகாங்களில் வசிக்கும் தமிழ் மக்களின் வாழ்வியலை அதிஅற்புதமாக அந் நாடகம் காட்டிற்று. தேசிய நாடகவிழாவில் மேடையேற்றப்பட்ட நாடகமாக இருப்பினும், துணிச்சலாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அது எடுத்துக்காட்டியது. அந்நாடகத்தில் பங்கேற்ற அனைத்து நடிக, நடிகைகளும் தத்தம் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாக நடித்தனர். நடிப்பு நெறியாள்கை, மேடையமைப்பு ஆகிய அனைத்திலும் சிறந்துவிளங்கியது அந்நாடகம். முகாம், அண்மையில் நான் பார்த்து ரசித்து அனுபவித்த ஓர் அருமையான நாடகம்.

தேசிய நாடகவிழா 1976ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. அந்த ஆண்டில் ஒரே மேடையில் சிங்கள, தமிழ் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. அவ்விழாவில் 14 சிங்கள நாடகங்களும், 7 தமிழ் நாடகங்களும் மேடையேற்றப்பட்டதாக அறியமுடிகிறது. அந்நாடக விழாவிலே வி.எம்.குகராஜாவின் மனிதனும் மிருகமும், ஆ.த.சித்திரவேலின் செவ்வானத்தில் ஒரு.., கே.சோமசுந்தரம் எழுத, கே.சி.ஆனந்தன் நெறிப்படுத்திய சிந்தனைகள், மாத்தளைக் கார்த்திகேசு எழுத, ஜே. பி. றொபட் நெறிப்படுத்திய ஒரு சக்கரம் சுழல்கிறது போன்றவை ஈழத்து நவீன நாடகத்துறைக்கு வளம்சேர்த்த நாடகங்களாக அமைந்தவை என நாடக ஆய்வாளர்களும், விமர்சகர்களும் சுட்டிக்காட்டுவர். அதனைத் தொடந்து ஏற்பட்ட நாடக விழிப்புணர்ச்சி சுஹைர் ஹமீட், பௌசுல் அமீர், கலைச்செல்வன், மாத்தளைக் கார்த்திகேசு, வி.கே.பாலன், அந்தனி ஜீவா போன்றோரை ஈழத்துத் தமிழ் நாடகத்துறைக்கு ஈர்த்தது.

காலப்போக்கில் சிலகாலம் தேசிய நாடகவிழாக்கள் சிங்கள, தமிழ் நாடகங்களுக்கு எனத் தனித்தனியாகவும் நடைபெற்றுவந்தன. ஆனால், மீண்டும் ஒரே மேடையில்

சிங்கள, தமிழ் நாடகங்கள் தேசிய நாடக விழாக்களில் மேடையேற்றப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது. எனினும், தற்போதைய தேசிய நாடகவிழாக்களில் தமிழ் நாடகங்களின் பங்களிப்பு என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாக மாறிவிட்டது.

இவ்வாண்டு (2014) நடைபெற்ற தேசிய நாடகவிழாவுக்காக 12 தமிழ் நாடகப் பிரதிகள் தெரிவுசெய்யப்பட்டன. அவற்றுள் ஆறு நாடகங்கள் நாடகவிழாவுக்கு முன்னரான தெரிவுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டன. அவற்றில் 3 நாடகவிழாவுக்காகத் தெரிவுசெய்யப்பட்டன என்று அறிகிறேன். தேசிய நாடக விழாக் குழு சிறிய நாடகங்களுக்கு 20000/- ரூபாவும், நீள நாடகங்களுக்கு 30000/- ரூபாவும் சன்மானமாக வழங்குகிறது என்றும் தெரிகிறது. சிங்கள நாடகக்குழுக்கள் நாட்டின் நானாபகுதிகளில் இருந்தும் தேசிய நாடகவிழாவில் பங்குகொள்கின்றன. ஆனால், தமிழ் நாடகக் குழுக்கள் கொழும்பில் இருந்துகூடப் பங்குபெறுவது இப்போது குறைவு. இப்போது தமிழ் நாடகக்துறை உண்மையாகவே வளர்ச்சியடைந்து வருகிறதா என்ற நியாயமான கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதவர்களாகவும், பதில் சொல்லத் தெரியாதவர்களாகவுமே நாம் இருக்கவேண்டி இருக்கிறது. வளர்ச்சியடைந்து கொண்டு வந்த தமிழ்நாடகத்துறையில் ஏன் இந்த வீழ்ச்சி?

இந்த ஆண்டுத் தேசிய நாடகவிழாவில் சிங்கள, தமிழ் நாடகங்கள் ஒரே மேடையில் மேடையேற்றப்பட்ட நாட்களில் பார்வையாளர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். அந்த நாட்களில் விழா முடிந்து திரும்புகையில், ஒரு திரைப்பட அரங்கில் இருந்து வெளியேறுவது போன்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது. ஆனால், தமிழ் நாடகமான 'முகாம்' மட்டும் மேடையேற்றப்பட்ட 26.02.2014 அன்று மிகச் சொற்பமான பார்வையாளர்களே மண்டபத்தில் இருந்தனர். விழாவுக்கு வந்திருந்த நண்பர் மானாமக்கீனின் கணக்கெடுப்பின்படி, ஏறத்தாழ 27 பேர்களே அன்று மண்டபத்தில் பார்வையாளர்களாக வீற்றிருந்தனர். இவர்களில் அநேகர் சிங்களப் பார்வையாளர்கள்!

தமிழ் நாடகத்துறையோடு தொடர்புடையவர்கள், கொழும்பில் நாடகங்களை மேடையேற்றிய அனுபவம் உடையவர்கள், தமிழ் நாடகம் பற்றிப் பேசுபவர்கள், எழுதுபவர்கள், விமர்சிப்பவர்கள், தமிழ் நாடகத்துறையோடு ஈடுபாடு கொண்ட ஊடகவியலாளர்கள், தமிழ் நாடக ஆர்வலர்கள் (கொழும்புக்குத் தூரத்தில் இருப்பவர்களை நான் இங்கு குறிப்பிடவில்லை) என்று எவரையும் தமிழ்நாடகம் மட்டும் மேடையேற்றப்பட்ட நாளில் மண்டபத்தில் என்னால் காணமுடியவில்லை. கலந்துகொண்ட சில தமிழ்ப் பார்வையாளரும் தேசிய நாடகவிழாவோடு தொடர்புடையவர்களே. நானும் விழாவில் அதிதியாகவே கலந்துகொண்டேன். இந்த வகையில், நாடக ஆர்வத்தோடு தமிழ்ப் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டவர்கள் மானாமக்கீன் தம்பதியினரே எனலாம். அவர்களுக்கு ஈழத்துத் தமிழ் நாடக உலகம் நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளது. சிறந்த தமிழ் நாடகம் ஒன்று மேடையேற்றப்பட்ட அந்நாளில், தமிழ்ப் பார்வையாளர்கள் பலரைக் காணமுடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு மட்டுமல்ல, கலந்துகொண்ட சிங்களப் பார்வையாளர்களுக்கும் ஏற்பட்டது. தமிழ் நாடகத்தை நாம் பார்க்கமாட்டோம் என்று கொழும்பில் உள்ள தமிழ் நாடகத்துறை சார்ந்தவர்களும், தமிழ் நாடகப் பார்வையாளர்களும் சத்தியம் செய்து விட்டார்களோ தெரியவில்லை.

**நூல்: நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்**

**ஆசிரியர்: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்**

**வெளியீடு: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு.**

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளரும் நயினாதீவு ஸ்ரீநாக பூஷணி அம்மன் ஆலய வழிவழி அறங்காவலர்களில் ஒருவருமான கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிபல்லவம், நாகவம்சம், நாகவழிபாடு, நயினாதீவு குறித்த ஆய்வுகளும் இன்னும் பல கட்டுரைகளும் கொண்ட தொகுப்பு இது. இத்தொகுப்பில் படித்துப் பயன்பெறக்கூடிய பத்து கட்டுரைகள் அடங்கியுள் ளன. ஆசிரியர் பாராட்டுக் குரியவர்



## இலங்கை வானொலி மலையகசேவை – பேரினவாதச்சிக்கல்

இலங்கை வானொலியின் மலையக சேவை 1983 முதல் இயங்கிவருகிறது. காலை 5 மணி முதல் இரவு 9.30 வரை இந்தச் சேவை தனது ஒலிப்பரப்பை நடத்திவருகிறது. இதில் அநேகமாக ஒன்றரை மணிநேரம் தமிழ் ஒலிபரப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அண்மைக்காலம் வரை மலையகச் சேவையின் தமிழ் ஒலிபரப்பு மாலை 6மணி முதல் 7.30 வரை இடம்பெற்றுவந்தது. ஆனால், அண்மையில் அதில் மாற்றம் ஏற்பட்டது. மலையக சேவையை இலங்கை முழுவதும் கேட்கக்கூடியதாக மாற்றியமைத்துள்ளது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். இது வரவேற்கக்கூடியது. ஆனால், இந்தச் சாக்கில், இலங்கை வானொலியின் உயர் அதிகாரி ஒருவர், மலையகத் தமிழ்ச்சேவையின் நேரத்தை ஒரு மணித்தியாலமாகக் குறைத்துவிட்டார். அதுமட்டுமன்றி, சிங்களச் சேவையுடன் இணைந்து தமிழ்நிகழ்ச்சிகளை நடத்துமாறும் அவர் உத்தரவிட்டாராம். நல்லவேளையாக அது அங்கு இடம்பெறவில்லை. ஆனால், அரை மணித்தியாலம் தமிழ்ச்சேவைக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இப்போது மாலை ஆறு மணி முதல் ஏழு மணி வரையுமே தமிழ்ச்சேவை இடம்பெற்று வருகிறது.

மலையகசேவை அண்மையில் நாடளாவிய ரீதியில் தனது சேவையை விரிவுபடுத்திய முதல் நாளில், அதன் தமிழ்ச்சேவை என்னை அரைமணித்தியால நேர்காணலுக்காக அழைத்திருந்தது. அந்தவேளையில் மலையகத் தமிழ்ச்சேவையின் தற்போதைய நிலையினை அவதானித்தேன். மாலை ஆறு மணி முதல் தமிழ்ச்சேவைக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆறு மணி முதல் ஆறு பதினைந்து வரை இலங்கை வானொலியின் சிங்களச் செய்திகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. அச்செய்திகள் ஒலிபரப்பாகி முடிந்தபின்னரே, சிங்கள ஒலிபரப்பாளர் தமிழ் ஒலிபரப்பாளரிடம் பொறுப்பை ஒப்படைத்தார். இதை நேரடியாக நான் அவதானித்தேன். ஒன்றரை மணித்தியாலம் ஒரு மணித்தியாலமாகக் குறைக்கப் பட்டுள்ளமை மாத்திரமன்றி, அது தற்போது நடைமுறையில் முக்கால் மணித்தியாலமே இடம்பெறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இலங்கை வானொலியின் மலையக சேவை கடந்த காலங்களில் தனது பணியைச் சிறப்பாகச் செய்துவந்துள்ளது. இந்தச் சேவையில் 2007 முதல் 2012 வரை வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு 7 மணி முதல் 7.30 வரை கலையமுதம் என்ற பெயரில் நான் தொகுத்து வழங்கிய நிகழ்ச்சி ஒலிபரப்பாகிவந்தது. இதுபோன்ற பல நல்ல நிகழ்ச்சிகள் மலையகசேவையில் இடம்பெற்றுவந்துள்ளன. ஆனால், இன்று அதன் தமிழ்ச்சேவையை மட்டுப்படுத்தும் முயற்சிகள் இலங்கை வானொலியின் உயர் அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுபற்றி மத்திய மாகாண சபையிலும் பேசப்பட்டு இருக்கிறது. அமைச்சர் இராதா கிருஷ்ணன் ஊடகத்துறை அமைச்சரிடம் இதுபற்றிப் பேசியிருக்கிறார். அமைச்சர் ஒருவாரத்தில் மீண்டும் மலையகத் தமிழ்ச் சேவையை முன்னரைப்போன்று நடத்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட அதிகாரியைப் பணித்திருந்தார். ஆனால்,

**நூல்: பாலமுனை பாறூக் குறும்பாக்கள்.**
**ஆசிரியர்: பாலமுனை பாறூக்**
**வெளியீடு: பர்ஹாத் பப்ளிகேசன்**
**விலை : 200/=**

இந்நூலில் 90 குறும்பாக்கள் அடங்கியுள்ளன. கேலியையும் கிண்டலையும், சமூக ஊத்தை களையும் வெளிப்படுத்தப் பொருத்தமாக இருப்பது குறும்பா வடிவம். பாலமுனை பாறூக்கின் குறும்பாக்களிலே சமூகக் கிண்டல் நன்றாக வந்துள்ளது. நம்மை அண்மைக் காலங்களில் தாக்கிய பலவிடயங்கள் அவரது குறும்பாக்களிலே பாடுபொருள்களாய் அமைந் துள்ளன. கவிதைகளைப் படித்து தலைப்புகளோடு உரசுகின்றபோது நகை ரசத்தை இன்னும் கூடு தலாகப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையில் பொருத்தமான தலைப்பு களுடன் இந்தக் குறும் பாக்கள் அமைந்துள்ளன.



இப்பந்தியை எழுதும்வரை நிலைமையில் எத்தகைய மாற்றமும் இல்லை. அமைச்சரின் பணிப்புரையைக் கூடக் குறிப்பிட்ட உயர் அதிகாரி பொருட்படுத்தவில்லை என்பதையே இது காட்டுகிறது. பேரினவாதம் இலங்கை வானொலியையும் கூட விட்டுவைக்கவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மலையக அரசியல்வாதி ஒருவரிடமும் நேரடியாக நான் பேசியிருந்தேன். இலங்கை வானொலியின் மலையகத் தமிழ்ச்சேவையின் தற்போதைய நிலை குறித்து, இலங்கை வானொலி தமிழ்ச்சேவை அதிகாரிகள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், வானொலி நேயர்கள் முதலான அனைவரும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

## தனித்துவமான தமிழ்த்தென்றல்

அண்மையில் கண்டித் தமிழ்ச்சங்கமும் தினகரன் வாரமஞ்சரி வாசகர் வட்டமும் இணைந்து தமிழ்த்தென்றல் என்னும் நிகழ்ச்சியை கண்டி இந்து சிரேஷ்ட வித்தியாலயத்தில் நடத்தின. பேராசிரியர் துரை. மனோகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மத்திய மாகாணசபை உறுப்பினர்களான துரை. மதியுகராஜா, லாபீர் ஜெய்னுலாப்டீன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். தினகரன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் ஆர். மகேஸ்வரன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். வரவேற்புரையை மீரா எஸ்.ஹரீஸும், நன்றியுரையை பி.சிவகுமாரும் வழங்கினர். பேராசிரியர்கள் எம்.எஸ்.எம். அனஸ், வ.மகேஸ்வரன், தினகரன் வாரமஞ்சரி செய்தி ஆசிரியர் விசு.கருணாநிதி, சட்டத்தரணி ஏ.எம்.வைஸ் முதலியோர் உரையாற்றினர்.

இவ்விழாவில் க.ப.சிவம், மன்சூர், தினகரன் வாரமஞ்சரி ஆசிரிய பீடத்தினர் உட்படப் பல ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டமை சிறப்பு அம்சமாகும். கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையின் நடனம், மீரா எஸ். ஹரீஸின் மாணவிகளின் நடனம், கண்டி இந்து சிரேஷ்ட வித்தியாலயத்தின் நடனம், இசை, கம்பளை முஸ்லிம் வித்தியாலயத்தின் நடனம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தினகரன் வாரமஞ்சரியைச் சேர்ந்த சுஜப் கவிதை வாசித்தார். கவிஞர் பொன். பூபாலன் தலைமையில் கவியரங்கும் இடம்பெற்றது. இதில்.பி.சிவகுமார், இஸ்மாலிகா, விஸ்வநாத ராஜா, ஏ.எஸ்.எம்.பீலிக்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். இவற்றோடு, தினகரனைச் சேர்ந்த எஸ்.ஸ்ரீகாந்தின் 'இறுதிவரை இவள்' என்ற இறுவட்டின் வெளியீடும் இடம்பெற்றது.

தமிழ்த்தென்றல் விழாவில் பலர் ஆர்வமாகக் கலந்துகொண்டனர். கவியரங்கு, கலைநிகழ்ச்சிகள், உரைகள் எனப் பல நிகழ்ச்சிகளும் பார்வையாளரைக் கவரக்கூடியவையாக இருந்தன.

## ஈழத்து இலக்கியத்தடத்தில் ஒரு புதுநூல்

ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரனின் அண்மையில் வெளிவந்த நூல்கள் இரண்டு என் கைகளில் கிடைத்தன. ஒன்று, எனது இலக்கியத்தடம் (முதலாம் பாகம்), மற்றது வட இந்திய பயண அனுபவங்கள். முதல் நூலை முழுமையாக வாசித்து முடித்துவிட்டேன். மற்றையது எனது வாசிப்பில் இருக்கிறது. அதனால், முதல் நூல் பற்றி எனது பார்வையில் பதிந்தவற்றைப் பகிர்ந்து கொள்ள முயல்கிறேன்.

தி.ஞானசேகரனின் எனது இலக்கியத்தடம் (முதலாம் பாகம்) என்ற நூல் *22* இயல்களையும், நிறைவுரையையும் கொண்டதாக *250* பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. இந்த நூலிலே ஞானசேகரனின் இரண்டு தடங்களை அவதானிக்க முடிகிறது. ஒன்று, கிராமம் ஒன்றின் அர்ச்சகர் குடும்பம் ஒன்றில் பிறந்து வளர்ந்த சிறுவன் ஒருவன், தன்னை நோக்கி வந்த தடைகளை எல்லாம் தாண்டி, எவ்வாறு ஆளுமை மிக்க ஒரு மனிதனாக உருவாகினான் என்பது. இரண்டு, அந்தச் சிறுவனுக்குள்ளே இருந்த இலக்கியவாதி, எவ்வாறு தன்னை ஒரு சிறுகதை எழுத்தாளராகவும், நாவலாசிரியராகவும் உருவாக்கி வளர்ந்துகொண்டான் என்பது.

முதலாவது தடம் விரிவடையத் தொடங்குவது, 'பிராமணரை உதட்டளவில் உயர்வாகவும் உள்ளத்தளவில் தாழ்வாகவும் கணித்து

வைத்திருக்கும் ஒரு சமூகத்தின் பொய்ம்முகம் எனக்குப் புரியத் தொடங்கியது' என்பதில் இருந்துதான். 'எனது குலத்தொழிலைச் செய்வதை விடுத்து நான் வேறொரு தொழிலைத் தேடிகொள்ளவேண்டும். அதற் கான கல்வியை நான் பெறவேண்டும்' என்று சிறுவன் ஞானசேகரன் தீர்மானித்த அக் கணத்தில் இருந்து, ஒரு புதிய மனிதனின் பிறப்பினை உணர்ந்துகொள்ளலாம். ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, சிறுவன் ஞானசேகரன் தனது தலையில் இருந்த கொண்டையையும் கடுக்கன்களையும் நீக்கிவிடத் தீர்மானித்தான். இது பற்றி ஞானசேகரன் குறிப்பிடுபவை அர்த்தபுஷ்டி யானவை. 'நான் ஒரு புது மனிதனானேன். அந்தக் கொண்டைக்குள் இவ்வளவு காலமும் எனது திறமை, ஆண்மை, வீரியம், துடிதுடிப்பு அத்தனையும் முடிந்து வைக்கப்பட்டிருந்ததை அப்போதுதான் உணரத்தலைப்பட்டேன். என்னிடம் இருந்த கூச்ச சுபாவம் எங்கோ ஓடிமறைந்துவிட்டதை அறிந்துகொண்டேன்....' அதன் பின்னர் ஞானசேகரன் என்ற சிறுவன் ஆளுமை மிக்க புதுமனிதன் ஆகின்றான். உரும்பிராய் இந்துக்கல்லூரி அவரின் ஆளுமை வளர்ச்சிக்குப் போதிய பங்களிப்பு வழங்கியமையை நூலில் குறிப்பிடுகிறார். அவரின் வளர்ச்சியின் ஒரு பகுதியை நேரில் தரிசித்தவன், நான். அவரின் முதலாவது தடம், அவரை வைத்தியராகவும், பட்டதாரியாகவும் ஆக்கிவைத்தது.

ஞானசேகரனை எழுத்தாளராக்கிய மற் றைய தடம், அவரை இலங்கையின் குறிப் பிடத்தக்க இலக்கியவாதியாகவும், சஞ்சிகை ஆசிரியராகவும் ஆக்கிவைத்தது. இந்தத் தடத்தில் இயங்கத்தொடங்கிய அவரது எழுத் துலக அனுபவங்கள் நூலில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர் குறிப்பிடும் ஒரு விடயம் மிகவும் கவனத்திற்கு உரியது. 'எழுத் தாளனுக்கு கோட்பாடுகள், தத்துவங்கள், இஸ ங்கள் பற்றிய பிரக்ஞை இருக்கலாம். ஆனால், அவை எதுவும் அவனது படைப்பூக்கத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது என்ற எண்ணமுடையவன் நான். இலக்கியம் என்பது உணர்வோடு சம்பந்தப்பட்டது.

## வெளிநாட்டு மாப்பிள்ளை...!

பட்டதாரிக்கேற்ற..
படித்த மாப்பிள்ளை எத்தனையோ
வந்தும்
தட்டிக் கழித்தபடி
வெளிநாட்டு மாப்பிள்ளைதான்
வேணுமென்று ஒற்றைக்காலில் நிக்கிறாள் பெட்டை

நாடு கெட்டுப் போய் கிடக்கிறது
ஊர்விட்டு ஊர்போய்
ஒன்று கிடக்க ஒன்று நடந்திட்டுதென்றால்
பதட்டப்பட்டார் தந்தை.

பதட்டம் எதுவுமே இல்லாமல்
பௌவ்வியமாக
நான் குழந்தையில்லை குமர் என்றாள் பிள்ளை

மௌனங்கள் நீள
குறிப்புக்களோடு வரிசையில்
நின்றனர் புறோக்கர்கள்.
எஞ்சினியர் எக்கவுண்டன் டொக்டரென
பட்டத்துக்கேற்ற விலைப் பட்டியலுடன்
ஒட்டித்தான் கிடந்தன
மாப்பிள்ளைகளின் போட்டோக்களும்.

தட்டிக் கொண்டே
வந்தாள் போட்டோக்களை
தட்டுப்பட்டது
புன்னகையுடன் ஒரு சுருள் தலையன்!
பட்டமும் அதிலில்லை
விலையுமதிகமில்லைத்தான்
விட்டத்தை பார்த்தபடி.
விக்கித்து போய் நின்றார் தந்தை
வில்லங்கமேதும் இருக்குமோ?

சட்டுப்புட்டென்று நடந்தது
கலியாண ஏற்பாடு
மாப்பிள்ளை டென்மார்க் சிற்றிசனாம்
விசாவும் வந்தது கெதியில
பறந்து வந்திறங்கினாள் பொம்பிளை
கொப்பனேக்கன் எயாப்போட்டில

பூக் கொத்துடன் மாப்பிள்ளை முன்னிற்க
ஏக்க விழிகளுடன் தேடினாள்
அறிமுகங்கள் செய்து
தன்னையடையாளப்படுத்தினார் மாப்பிள்ளை
முன்பிருந்ததாம் முடி
இப்ப போட்டோவில் மட்டும் தானாம்
முன்பில்லையாம் குடி
இப்ப முடியில்லாக் கவலையில் தானாம்

இணுவை
**சக்திதாசன்** — டென்மார்க்

அதனை அறிவோடு சம்பந்தப்படுத்தினால் தீர்மானங்களும் முடிவுகளுமே மிஞ்சும். அந்த முடிவுகளையும் தீர்மானங்களையும் தாண்டி அவனால் செல்ல முடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும்....” எழுத்தாளனுக்குத் தத்துவப் பின்னணி தேவைதான். அதற்காக, அதனைத் தனது படைப்புகளில் வலிந்து இழுத்து ஊறு விளைவிக்கக் கூடாது என்பது என் கருத்து.

நூலாசிரியர் தமது படைப்புகளின் பின்னணி பற்றி விரிவாகக் கூறிச்செல்கிறார். எழுத்தாளர்களின் படைப்புகளைப் படிக்கும் வாசகர்கள், அவற்றின் பின்னணி பற்றி அறிவதிலும் ஆவலாக இருப்பர். அந்த வகையில், ஞானசேகரனின் படைப்புகள் பற்றிய பின்னணியை இந்நூல் மூலம் தெரிந்துகொள்ளக் கிடைத்த வாய்ப்புக்காக வாசகர்கள் மனநிறைவு கொள்வர். ஆரம் பத்தில் கல்கி, அகிலன், மு.வ., பார்த்தசாரதி போன்றோரின் படைப்புகளை வாசித்ததனால் தனது எழுத்துக்கள் செழுமைபெற்றன என்று ஆசிரியர் கூறுகிறார். அதுபோலவே “இன்றுள்ள பல எழுத்தாளர்கள் ஆரம்பத்தில் மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்களது வாசகர்களாகவே இருந்து தமது மொழிவளத்தைப் பெருக்கிக் கொண்ட பின்னர், அடிமட்ட மக்களின் பிரச்சனைகளை இவர்கள் எழுதாததால் இவர்களது நாவல்கள் நாவல்களே அல்ல என்று தாம் கடந்துவந்த பாதையை மறந்து பேசுகிறார்கள்” என்றும் குறிப்பிடுகிறார். பல சந்தர்ப்பங்களில் பலரது தூண்டுதல்களே தம்மை எழுதத் தூண்டியது என்பதையும் நூலாசிரியர் கூறிச் செல்கிறார்.

இலக்கியவாதிக்கு நேர்மை மிக முக்கிய மானது. நேர்மையற்ற எந்த எழுத்தும் கவைக்குதவாதது. இந்த நூலில் தமது படைப்புகளைப் பற்றிய கருத்துகளைச் சொல்லி வரும் ஞானசேகரன், தமது சுய மதிப்பீட்டின்படி ‘லயத்துச் சிறைகள்’ என்ற நாவல் பற்றிப் பின்வருமாறு தெரிவிக்கிறார். ‘லயத்துச் சிறைகள் நாவல் சமூக மேம்பாட்டு நோக்கில் எழுதப்பட்டது. பொதுவாக சமூக மேம்பாட்டு நோக்கில் எழுதப்படும் நாவல்கள் கலைத்துவம் குன்றியே காணப்படும். பிரச்சாரம் துருத்திக்கொண்டு தலை நீட்டும். லயத்துச் சிறைகள் இதற்கு விதிவிலக்கானதல்ல. நான் எழுதிய மற்ற நாவல்களோடு ஒப்பிடுகையில் கலைத்துவம் குறைந்து காணப்படுவது லயத்துச்சிறைகளில்தான்’ அந்த நாவல் பற்றிய விமர்சனபூர்வமான எனது கருத்தும் அத்தகையதுதான். அவரின் எழுத்தின் நேர்மையைப் பாராட்டவேண்டும்.

தான் எழுதிய போர் இலக்கியச் சிறுகதைகள் பற்றியும் அவை தோன்றிய பின்னணி பற்றியும் விரிவாகக் கூறும் ஆசிரியர், ‘எரிமலை’ என்ற மகுடத்தில் தான் ஒரு நாவல் எழுதியதாகவும் போர்க்காலச் சூழலில் அந்த நாவலை வெளியிடமுடியாத நிலைமை இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அந்த நாவலின் பிரதி அவரிடம் இருக்கிறது. தற்போதுதுள்ள சூழ்நிலையில் அந்த நாவலை வெளியிடுவதில் ஆசிரியருக்கு பிரச்சனை ஏதும் இருக்கமுடியாது. ஆசிரியர் அந்த நாவலை நூலாக வெளிக்கொணரவேண்டும் என்பது எனது விருப்பம்.

ஒரு கலை இலக்கியச் சஞ்சிகையை ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் ஞான சேகரனுக்கு 1960களிலேயே தோன்றி விட்டது என்பதையும் நூல் மூலமாக அறிய முடிகிறது. ‘கலைச்செல்வி எனது இலக்கியத்தடத்தில் ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது. கலைச் செல்வியைப் போன்று அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றி பிற்காலத்தில் நானும் ஒரு சஞ் சிகையை நடத்தவேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் ஏற்படுத்திவிட்டுத்தான் அது தனது ஆயுளை முடித்துக்கொண்டது’ என்று அவர் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

எனது இலக்கியத்தடம் என்ற இந்த நூல் தி.ஞானசேகரன் என்ற இலக்கியவாதியின் இலக்கியத்தடத்தை மட்டுமன்றி, இலங்கையின் இலக்கியச் செல்நெறியையும் ஒருசேர இனங்காட்டுகின்றது. இதுவே இந்நூலின் பெரும் பெறுமதி எனலாம். ஓர் இலக்கிய ஆய்வாளனுக்குத் தேவையான பல விடயங் களையும், விபரங்களையும் இந்நூல் கொண் டுள்ளது, ஓர் எழுத்தாளனின் ஆளுமை வளர்ச்சியையும், இலங்கையின் இலக்கியப் போக்கினையும் வெளிப்படுத்தும் இந்நூலைத் தொடராக வெளியிட்டுவந்த ஜீவநதி ஆசிரியர் குழுமத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்ட வேண்டும்.

❍ ❍ ❍



கே. பொன்னுத்துரை

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

## சு. குணேஸ்வரனின் "உள்ளும் வெளியும்"

உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் சு. குணேஸ்வரன் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் கொண்ட தொகுதியான 'உள்ளும் வெளியும்' நூல் வெளியீடு 02.03. 2014 ஞாயிறு காலை 9.30 மணிக்கு யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன் தலைமை வகித்தார். நிகழ்வில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து இறை வணக்கத்தினை செல்விகள் மீனுதா ரவிரதன், பிரபாஜினி நவரத்தினராசா ஆகியோர் இசைத்தனர்.

வரவேற்புரையை உயில் செயற்பாட்டாளர்களில் ஒருவராகிய சி. விமலன் நிகழ்த்தினார். தொடர்ந்து வாழ்த்துரைகளை யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் இரா. சிறீநடராசாவும் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. சிறீகரனும் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் திரு இரா. இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார். தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது.

நூலின் முதற்பிரதியை லெனின் மதிவானம் வழங்கி வைக்க, அதனை கலாபூஷணம் கவிஞர் வதிரி கண எதிர்வீரசிங்கம் பெற்றுக் கொண்டார். கௌரப் பிரதிகளை மூத்த எழுத்தாளர் தெணியான் வழங்கி வைக்க அதனை ஓவியர் கோ. கைலாசநாதன், கவிஞர் தானாவிஷ்ணு, யா. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் கௌரி சேதுராஜா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நூலின் சிறப்புப் பிரதிகளை தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய அதிபர் இரா. சிறீ நடராசா வழங்கி வைத்தார்,

தொடர்ந்து மதிப்பீட்டுரை இடம்பெற்றது. மதிப்பீட்டுரையை கவிஞரும் விமர்சகருமாகிய



கருணாகரன் நிகழ்த்தினார். ஏற்புரையை நூலாசிரியர் சு. குணேஸ்வரனும் நன்றியுரையை ஆசிரியர் திரு வீ.வீரகுமாரும் நிகழ்த்தினர்.

மேற்படி நூல் யாழ்ப்பாணம் புத்தகக்கூடம் (BOOK LAB) வெளியீடாக வந்துள்ளது. நூலின் முகப்பு அட்டை ஓவியத்தை ஓவியர் கோ. கைலாசநாதன் வரைந்துள்ளார். தானா விஷ்ணுவின் வடிவமைப்பில் ஆகாயம் பதிப்பகத்தின் ஊடாக நூல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மு. சிவலிங்கத்தின் "வெந்து தணிந்தது காலம்" நூல் வெளியீடு.

பாக்யா பதிப்பக வெளியீடான கலா பூஷணம் மு.சிவலிங்கம் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு நூலான 'வெந்து தணிந்தது காலம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 'காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீன் தலைமையில் 'இலக்கியப் புரவலர்' ஹாசிம் உமர், முன்னிலையில் (16.03.2014) நடைபெற்றது.

கலை இலக்கியப் பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வரவேற்புரையை மலைநாட்டு எழுத்தாளர் மன்ற இணைச் செயலாளர் பதுளை சேனாதிராஜா வழங்க, பிரதம அதிதியாக பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கலந்து சிறப்பித்தார். வெளியீட்டுரை இரா. சடகோபன் நிகழ்த்தினார். ஆய்வுரைகளை கவிஞர் மு. பொன்னம்பலம், சமூகவியலாளர் எம். வாம

தேவன் ஆகியோர் நிகழ்த்த, மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் தெளிவத்தை ஜோசப் கருத்துரை வழங்கினார். சிறுகதைத் தொகுப்பின் முதற்பிரதியை 'இலக்கியப் புரவலர்' ஹாசிம் உமர் பெற்றுச் சிறப்பித்தார். ஏற்புரையை நூலாசிரியர் கலாபூஷணம் மு. சிவலிங்கம் நிகழ்த்தினார்.நிகழ்வுகளை பாக்யா பதிப்பக நிறுவனர் மல்லியப்பூசந்தி திலகர் மிகச் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

## சிறுகதைப்போட்டியில் முதலிடம் பெற்றார்

சரத்சந்திர ஜெயக்கொடி சாகித்திய விழாவையொட்டி ஹொரண பிரதேச சபையினால் நாடாளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் கவிஞர் கலாநிதி கே.



எம். எம். இக்பால் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். இவருக்கான பரிசும் விருதும் அண்மையில் ஹொரணை மொரககேன நகரில் இடம்பெற்ற வைபவத்தின்போது வழங்கப்பட்டன. கிண்ணியாவைச்சேர்ந்த இக்பால் 2005 ஆம் ஆண்டில் சர்வோதய அமைப்பு நாடளாவிய ரீதியில் நடத்திய சிறுகதைப்போட்டியிலும் முதலிடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது 'தாமரை யின் ஆட்டம்' என்ற நூல் 2010 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையினால் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2011ஆம் ஆண்டு இவர் கலாபூஷணம் விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சிறுகதைப் போட்டி பரிசளிப்பு விழா

தினக்குரல் பத்திரிகையும் - வடலி வெளியீடும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டி பரிசளிப்பு விழாவும் நூல் வெளி யீடும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஊடகவியலாளர் எஸ். எழில்வேந்தன் தலை மையில் (02.03.2014 ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. ஊடகவியலாளர் எஸ். எழில்வேந்தன் தலைமையுரையை அடுத்து எழுத்தாளர் யோ. கர்ணன் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். நூலின் விமர்சன உரைகளை எழுத்தாளர் உமா. வரதராஜன், இலங்கை ஊடகவியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி எம். எஸ். தேவகௌரி ஆகியோர் நிகழ்த்தி னார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை தினக்குரல் நிறுவனர் எஸ்.பி சாமி, தினக்குரல் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ். பி. கேசவ ராஜா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

நூலின் சிறப்புப் பிரதியை 'இலக்கியப் புரவலர்' ஹாசிம் உமர் பெற்றுச் சிறப்பித்தார். விழாவில் சிறப்பு அம்சமாக மூத்த எழுத்தாளர் மா.பாலசிங்கம் சட்ட ஆலோசகர் க. மு. தர்ம ராஜாவால் கௌரவிக்கப்பட்டார்.

## கலாநிதி அகளங்கள் மணிவிழா

ஸ்கந்தவரோதயன், தமிழறிஞர் கலாநிதி அகளங்கன் அவர்களின் மணிவிழா நிகழ்வு 21-02-2014 இல் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாகக் கலாநிதி அகளங்கன் திருமதி பூரணேஸ்வரி அகளங்கன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக முன் னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய உயர்திரு தர்ம லிங்கம் சித்தார்த்தன் அவர்களும் அவரது துணைவியார் திருமதி மீனா சித்தார்த்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ஸ்கந்த வரோதயாக்கல்லூரி ஆசிரியர் திரு. எஸ் மோகன்ராஜ் இன் வரவேற்புரையும் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் ஆசியுரையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. இ. ஈஸ்வரதாசன், இந்துசாதன கௌரவ ஆசிரியர் சிற்பி (திரு. சி. சிவசரவபணபன்), பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா, அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க கௌரவப் பொதுச் செயலாளர் திரு. சரா. புவனேஸ்வரன், ஸ்கந்தவரோதயாக்கல்லூரி பழைய மாணவி திருமதி யோகாதேவி ரவிக்குமார் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன.

மணிவிழா நாயகனைக் கௌரவித்து திரு. ம.பா. மகாலிங்கசிவம் இயற்றிய வாழ்த்துப் பாவினை யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஸ்ரீமதி விக்னேஸ்வரி நரேந்திரா பாடினார். சிறப்பு விருந்தினர் உரை, ஏற்புரை, என்பவற்றைத் தொடர்ந்து யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவு ரையாளர் திரு. முருகேசு கௌரிகாந்தன் அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது.

மருத்துவக் கலாநிதி, பொறியியலாளர், கணக்காளர், உயரதிகாரிகள் போன்ற தம் பழைய மாணவர்களையே பாடசாலைகளும் கல்லூரிகளும் பிரதம விருந்தினர்களாக அழைத்துக் கௌரவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ள நிலையில் ஆசிரியனாகவும் இலக்கிய கர்த்தாவாகவும் இருந்து இளைஞர் களின் கலை, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிகோலும் தன் பழைய மாணவன் ஒருவனின் மணிவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு இட வசதியை மட்டுமல்லாமல் ஏனைய எல்லா உதவிகளையும் வழங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னுதாரணம் பலரின் கவ னத்தை ஈர்த்தது - மு.கௌரிகாந்தன்

## துரைவி விருது வழங்கலும், நினைவுப் பேருரையும்.

இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் மங்காது இடம்பிடித்த அமரர் துரை. விஸ்வநாதன் என்ற ஆளுமையின் 83வது பிறந்த தின நிகழ்வும், நினைவுப் பேருரையும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தெளிவத்தை ஜோசப் தலைமையில் (01.03.2014 சனிக்கிழமை) நடை பெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை மேமன் கவி நிகழ்த்த, நினைவுப் பேருரையை 'இணை யத்தில் இலக்கியம்' என்ற தலைப்பில் இலங்கை ஊடகவியல் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் திருமதி எம். எஸ். தேவகௌரி நிகழ்த்தினார்.

2013 ஆம் ஆண்டுக்கான துரைவி விருது வழங்கல் நிகழ்வில் எம். சி. ரஸ்மின் எழுதிய 'போர்க்கால சிங்கள இலக்கியங்கள்' என்ற ஆய்வு நூலுக்கும், கொடகே வெளியீடான மேமன்கவியின் 'மொழி வேலி கடந்து' என்னும் விமர்சன நூலுக்கும் விருதுகளும் பணப்பரிசும் வழங்கப்பட்டன.

இவைகளை 'இலக்கியப் புரவலர்' ஹாசிம் உமர், கொடகே புத்தகசாலை நிறுவனர்



'தேசபந்து' ஸ்ரீ சுமன கொடகே தெளிவத்தை ஜோசப், ராஜ்பிரசாத் துரை விஸ்வநாதன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

தமிழகத்தில் 'விஷ்ணுபுரம்' விருது பெற்ற தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கான பாராட்டும் நடைபெற்றது. பாராட்டுரையை மல்லியப்பு சந்தி திலகர் நிகழ்த்தினார்.

நன்றியுரையை ராஜ்பிரசாத் துரை விஸ்வ நாதன். வழங்க நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

## தரிசனம் வெளியீட்டு விழா

வீரகேசரி வார வெளியீடு பிரதம ஆசிரியர் ஆர். பிரபாகன் அவர்கள் வீரகேசரி நாளிதழில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பு நூலான 'தரிசனம்' நூலின் வெளி யீட்டு நிகழ்வு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ் வதி மண்டபத்தில் (16.03.2014) பேராசிரியர் சபா. ஜேயராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தினை கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்கள் பாடி ஆரம்பித்து வைத்தனர்.

வரவேற்புரையை ஆர் நிர்ஷன் நிகழ்த் தினார். சிறப்புரையை 'தமிழருவி' த. சிவகுமாரன் வழங்கினார். பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களிடம் 'தரிசனம்' நூலின் முதற்பிரதியை எக்ஸ்பிரஸ் நியுஸ் பேப்பர்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன் வழங்கி வைத்தார்.

சிறப்பு அதிதிகளாக, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், இலங்கைக்கான இந்தியப்பிரதித் தூதுவர் பி. குமரன் ஆகியோர் கலந்து சிறப் பித்தனர்.

நன்றியுரையை ஆர். பிரபாகன் நிகழ்த் தினார். பெருந்திரளான அரசியல் பிரமுகர்கள், கலை இலக்கியவாதிகள், பத்திரிகையாளர்கள், சமூகப் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

❍ ❍ ❍

# வாசகர் பேசுகிறார்

ஞானம் பெப்ரவரி இதழ் கிடைத்து இருவாரங்கள். அனேகமாக எல்லா விஷயங்களையும் ஓட்டம் விட்டுவிட்டேன். சில வாசித்து - அறிவதற்கு - பெருமளவு கவர்ந்தன. சில சுவாரசியமாக இருந்தன.

பெருமளவு கவர்ந்தது...கோப்பாய் சிவம் பற்றி "சிற்பி" எழுதிய அதி மிக சுருக்கமான பகுதி.... ஈழத்தில் இத்தனை அறிவு - திறமை - வல்லமைகள் கொண்டவர்கள் இருப்பது இதுவரை அறியாமல் இருந்துவிட்டதே - இன்னும் இதுபோன்ற திறனாளிகள் ஈழத்தில் எத்தனையோ? ஞானம் வெளிக் கொணருமா?

இலண்டன் பயண அனுபவங்கள்...... மிக்க சுவாரசியமாகவும் அனுபவங்களை தத்ரூபமாக வழங்குவதாயும் உள்ளது. தொடர்ந்து வாசிக்க ஆவல்.

நூலியலாளர் செல்வராஜாவின் "முயற்சித் திருமகள்" - சிறந்ததொரு படைப்பு. உருக்கமான பல விஷயங்களை அறிந்தேன். நன்றி.

"எழுதத் தூண்டும் எண்ணங்கள்" பேராசிரியர் துரை மனோகரன் பல உண்மைகளை நாசூக்காக நயமுடன் படைத்துள்ளார். உரியவர்கள் கருத்திற்கொண்டு உயர்ந்த பண்புடன் பகிர்ந்துகொள்வார்களா?

எனது நீண்ட நாள் மதிப்புக்குரிய வீரகேசரிக்கு அன்னார் விடுத்துள்ள வேண்டுகோள்- நடுத்தரமான சமூக நன்மைகருதி - ஒற்றுமை கருதி - இக்கைங்கரியம் நிறைவேறும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

**–அன்புடன் 'லண்டன் அம்பி'**

❑ ❑ ❑ ❑ ❑

வணக்கம். 'கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள்' இரண்டு வருட கால முழுமையோடு விடயத்தட்டுப்பாட்டின் நிமித்தம் நிறுத்திவிட்டேனாயினும் வேறு ஆக்கங்களையாவது நான் அனுப்பியிருக்கலாம். முடியாமற் போய்விட்டது. எனது வேலைப்பளுவும் அதனூடான கொழும்புப் பயணங்களும் எனது நேரத்தைத் தின்றுவிடுவதுதான் முக்கிய காரணம். ஆனாலும் பிரயாணங்களின் போதுகூட ஞானத்தையும் ஞானம்சார் பரந்த உலகத்தையும் நினைத்துப் பார்ப்பேன். சந்தோஷமான அனுபவம்தான்.

அண்மைக் காலத்தைய 'ஞானம்' இதழ்களில் வெளிவந்த சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் மேலும் மேலும் ஞானத்தின் தரம் கூடுவதை உறுதிப்படுத்துகின்றன. தனித்தனியே விபரிப்பதற்கு இது இடமல்ல.

தி.ஞானசேகரனின் 'இலண்டன் பயண அனுபவங்கள்' பற்றிச் சொல்லாமலிருக்க முடியாது. இதன் மூலம் கட்டுரையாசிரியரைக் 'குளிர'ப்பண்ணும் நோக்கம் எனக்கில்லை. அது அவசியமு மில்லை. ஒவ்வொரு இதழிலும் இலண்டன் மாநகர் பற்றிய பிரயோசமான தகவல்களைப் பயணத்தோடு சம்பந்தப்படுத்தி, தருகின்ற கலைத்துவத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.

இரண்டாவது அத்தியாயத்தில் பிரித்தானியாவின் 'பழமை பேணும் பண்பை' விபரித்த விதம் பிரித்தானியாவின் அரசியலை ஒரு பாடமாகக் கற்ற எனக்கு பழைய ஞாபகங்களை மீட்டுத்தந்தது.

மூன்றாவது அத்தியாயத்தில் பகவான் சத்தியசாயி பாபா பற்றிய கட்டுரையாளரின் அனுபவங்கள் பாபா பக்தனான எனக்கு மகிழ்வையும் பெருமையையும் தந்தன.

இலண்டன் பயணக்கட்டுரையில் எங்காவது கட்டுரையாளர் தன்னைப்பற்றி 'எங்கள் வீட்டில் ஒரு நாள் ஒரு பாம்பு வந்தது. அதை நாங்கள் தடிகொண்டு அடிக்கப்போக அது எங்கள் T.V யில் ஏறி Frige ஆல் இறங்கி சோபா செற்றிக்கு மேலால் ஓடி Iron safe மேல் ஏறி கொம்பியூட்டர் Room க்குள் போய் யன்னலூடாக வெளியேறி எங்கள் Carக்கு கீழால் ஓடித்தப்பி விட்டதாக'க் கூற முற்படாததையும் நான் அவதானித்தேன்.

ஏனென்றால் எழுத்திலென்றாலென்ன பேச்சிலென்றாலென்ன பிள்ளையார் பிடிக்கப்போய்

குரங்காய் மாறிய கதையாக எதையோ சொல்ல வந்து தமது பெருமைகளைச் சொல்லிவிட்டுச் செல்வதையே சிலரிடம் நான் காண்கிறேன். முன்பு இது ஒரு கைவிரல்களின் எண்ணிக்கைக்குள் அடங்கியிருந்தது. இப்போது இது தொற்றாநோயாகிப் பலபேரிடமுள்ளது. இதுவும் ஒருவகை மனநோய்தான்.

நல்ல சந்தர்ப்பங்களிலிருந்தும் ‘எனது இலக்கியத்தடம்’ என்ற தனது வரலாற்று நூலில் கூட ஆசிரியர், “Blowing own trumpets” என்றில்லாமல் ஒரு வரம்புக்குள் நின்று தனது எழுத்தை நகர்த்திச் சென்றிருப்பதை யாவரும் உய்த்துணர்ந்திருப்பர்.

‘படித்ததும் கேட்டதும்’ பகுதியில் கே.விஜயன் ‘எனது இலக்கியத்தடம்’ பற்றித்தந்த இரசனைக் குறிப்புக்கும் எனது பாராட்டுக்கள்.

இதழாசிரியர் தனது இயல்பான தன்மை காரணமாக இக்கடிதத்தைப் பிரசுரிப்பதைத் தவிர்க்காமல் பத்திரிகா தர்மத்தின்படி இதைப்பிரசுரித்தே ஆக வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

**– கொற்றை.பி.கிருஷ்ணானந்தன்.**

❑ ❑ ❑ ❑ ❑

ஞானம் 166 இதழ் ‘வாசகர் பேசுகிறார்’ பத்தியில் அகளங்கன் ஐயா அவர்கள் 164 இதழில் வெளிவந்த எனது ‘தமிழ் ஒலி, ஒளி.....’ பற்றிய கட்டுரையில் ‘மெல்லத் தமிழினிச் சாகும்’ பகுதியில் கருத்துப் பிழை பற்றிச் சுட்டிக்காட்டியமைக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை உண்மையிலேயே கற்பனையிலான ‘தமிழ்த்தாய்’ சார்பாக பாரதியாரே தனது கற்பனையில் உருவகப்படுத்தி கவிதையைப் பாடியுள்ளார் எழுதியுமுள்ளார் என்பதனையும் தெரிவிக்கிறேன்.

லண்டன் பயணக் கட்டுரைத் தொடர் சுவாரஸ்யமாகவும் அடுத்த இதழை எதிர்பார்க்குமளவு முள்ளது, புகைப்படங்களில் இருப்போர் மற்றும் படவிளக்கங்களும் தேவை. சாயிபாபாவின் கழுத்து மாலைச்சரம் வளர்வது போன்று எமது புத்தளம் நகரின் கிருஸ்தவ வீடொன்றிலுள்ள அந்தோனியாரின் அரையடி உயரமான இரண்டு சிலைகளில் ஒன்றில் பால்போன்ற திரவமும் மற்றதில் எண்ணெய்யும் ஒரு மாதமாகச் சுரக்கின்றன.

**– எம்.ஐ.எம்.அப்துல்லத்தீப், புத்தளம்.**

❑ ❑ ❑ ❑ ❑

ஞானம் ஒழுங்காகக் கிடைத்து வருகிறது. த. ஜெயசீலனின் ‘ஊமைப்பதில்கள்’ தீபச் செல்வனின் ‘திருக்கேதீச்சரம்’ கலைவாதி கலீலின் ‘மற்றொரு ஹரப்பா’ ஆகியவை ‘சுடச்சுட’ வந்துள்ளன. சுடும் கவிதைகள். வீ. ஜீவகுமாரனின் தேவதூதர்கள், கே. ஆர். டேவிட்டின் ‘தோற்றுப்போனவர்கள்’ வழக்கம்போல் சிந்தனையைத் தூண்டும் சிறுகதைகள். உங்கள் இலண்டன் பயணம் பயனள்ள பல தகவல்களை சுவையாகச் சொல்கிறது. மணிவிழா நாயகர் அட்டைப்பட அதிதி பாடும்மீன் ஸ்ரீஸ்கந்தராசா அவர்களுடைய ஆற்றல்கள், ஆளுமை, கல்வி, சமூக, மனிதாபிமானப் பணிகள் ஆகியவற்றை ஆவூரான் விரிவாக எழுதியுள்ளார்.
ஆக்கங்களின் தரமும் இதழின் அமைப்பும் மகிழ்ச்சி அளிக்கின்றன.

**– ‘சிற்பி’ சிவசரவணபவன்**

❑ ❑ ❑ ❑ ❑

ஞானத்தின் தொடர்வரவும், பயணக்கட்டுரையின் ஆளுமையும், வீச்சும், அனுபவப் பகிர்வும் மனம் நெகிழ வைக்கின்றன. ‘பாலா பக்கம்’ சிறப்பாக உள்ளது. மென்மேலும் பணி தொடர மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

**– கண. மகேஸ்வரன்**

❑ ❑ ❑ ❑ ❑


ஞானம் பிரதம ஆசிரியர் **தி.ஞானசேகரன்**

எழுதிய

**‘எனது இலக்கியத் தடம் - பாகம் - I’** (500/=)

**‘வட இந்திய பயண அனுபவங்கள்’** - (300/=)

ஆகிய நூல்களைத் தபால் மூலம் ஞானம் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

